# சைவ முன்னேற்றச் சங்கம் (UK)
# SAIVA MUNNETTA SANGAM (UK)
## நால்வர் நெறியில் நாற்பது ஆண்டுகள்




## 40வது ஆண்டு நிறைவு விழா மலர்
## 40TH ANNIVERSARY SOUVENIR

28TH OCTOBER 2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ முன்னேற்றச் சங்கம் (UK)
# SAIVA MUNNETTA SANGAM (UK)

2 Salisbury Road, Manor Park, London E12 6AB
Tel: 0208 514 4732
Registered Charity No: 292085

**எம்மை வாழ்த்த வந்துள்ள உங்களை வருக வருகவென அன்புடன் வரவேற்கிறோம்!**



**சங்க ஆலயத்தில் வீற்றிருந்து அருள்பாலித்து வரும் அருள்மிகு
சிவகாமி அம்மை சமேத சிதம்பரேஸ்வர் அருள் அனைவருக்கும்
கிடைக்க வணங்குகிறோம்**

1977 2017
சைவ முன்னேற்றச் சங்கம் (UK)
நாளைய கனவை நனவாக்கும் நாற்பது
The best preparation for tomorrow
is doing our best today

## Saturday 28th October 2017
## Walthamstow Assembly Hall
## Forest Road, Walthamstow, London E17 4SY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**BUCKINGHAM PALACE**

20th September, 2017.

Dear Mr. Anandathiyagar,

The Queen has asked me to thank you for your kind letter of 23rd June on behalf of Saiva Munnetta Sangam, on the occasion of your Fortieth Anniversary Celebration which is being held on 28th October at the Walthamstow Assembly Hall.

Her Majesty appreciated your thoughtfulness in writing as you did and, in return, has asked me to send her warm good wishes to all those who will be present for a most successful event.

Yours sincerely,

David Ryan

David Ryan
Director, Private Secretary's Office

Mr. Sathasivam Anandathiyagar.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



THE PRIME MINISTER

**10 DOWNING STREET**
**LONDON SW1A 2AA**

It gives me great pleasure to send my best wishes to the Saiva Munnetta Sangam (UK) as it celebrates its 40th Anniversary.

Hinduism motivates millions of people in this country and elsewhere to do good. Hindu temples and charities occupy a valuable position in society through their access to active citizens, their role within local communities and their good relationships with other faith groups. Hinduism has provided a significant contribution to our country; we should recognise and celebrate that.

Saiva Munnetta Sangam (UK) should be very proud of its achievements over the last 40 years. It has provided steadfast community service both in the UK and overseas by following the Hindu philosophy, whose principle concept is service to humanity without expectation or reward.

I hope all those in attendance have a fanastic time at the celebrations and would like to wish the Saiva Munnetta Sangam (UK) every success in the future.

28 October 2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**THE RT. HON. STEPHEN TIMMS MP**

**House of Commons**

**London SW1A 0AA**

**Tel: 020 7219 4000**

**Fax: 020 7219 2949**

***Labour Member of Parliament for East Ham***

Mr Sathasivam Anandathiyagar
President,
Saiva Munnetta Sangam
2 Salisbury Road
Manor Park
London E12 6AB

7 August 2017

Dear Mr Anandathiyagar

I write to express to you, and to all the devotees, my heartiest congratulations on achieving the fortieth anniversary this month of Saiva Munnetta Sangam. I wish you well, also, for the celebration of the fortieth anniversary which will take place at Walthamstow Assembly Hall on 28 October. I look forward to being present.

My own connection with the organisation goes back over thirty years. I have been able to see for myself how the organisation's motto *"Community Service through Saiva (Hindu) Concern"* has been fulfilled in practice. I commend the record of service which the organisation has delivered.

I want also to express my appreciation for the warm welcome I have enjoyed whenever I have visited the premises in Salisbury Road – whether, as most recently, in the course of a parliamentary election campaign, or at any other time. The warmth of that welcome has always made a deep impression on me, and, I am sure, on all the other many visitors who have had the opportunity to experience it over the years.

Its important, on an anniversary like this, to look forward as well as backward. So I hope Saiva Munnetta Sangam – and everyone connected with it – will have every success in its service in the years ahead.

With all best wishes,

Yours sincerely,

Stephen Timms



STEPHEN TIMMS MP

*Electronic mail: stephen@stephentimms.org.uk* *Web: http://www.stephentimms.org.uk/*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Waltham Forest**

I am sorry not be able to be with you this evening, as you celebrate your 40th anniversary.

As the Mayor of one of London's most diverse and cohesive boroughs, I know how important it is for the various faiths to work to provide a structure to support their own communities, but also to work with one another to foster respect and understanding for the benefit of all.

While your base might not be here, I have no doubt that the positive effects of your work over these past 40 years have travelled out through Waltham Forest and beyond.

I offer you my congratulations for what you have achieved so far, and very best wishes for your future efforts on behalf of the people you serve.

Cllr Yemi Osho,
Mayor of Waltham Forest 2017-18

Back the bid
#WFculture19
Waltham Forest
For London Borough of Culture
**Back the bid** now for Waltham Forest to become London's very first Borough of Culture!
@WFculture19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"

**கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கம்**

**COLOMBO SAIVA MUNNETTA SANGAM**

101/70, KEW ROAD, (JALAN PADANG) COLOMBO-02 TEL: 011-2300053

Bankers: Bank of Ceylon (Metropolitan Branch), Indian Overseas Bank
Commercial , Bank of Ceylon Ltd., Union Place, Colombo-2

BRANCH SOCIETIES: UNITED KINGDOM

Regd பதிவு } S.258

உ

18.10.2017

அன்புள்ள ஐயா வணக்கம்.

தாய்ச் சங்கத்தின் தொண்டர்களாக இருந்த எங்கள் அன்பர்கள் இங்கிலாந்து சென்றபோது உருவாக்கிய ஒரு சிறு அமைப்பு இன்று மாபெரும் வளர்ச்சி கண்டு 40வது ஆண்டுகளை நிறைவு செய்து அதன் வெற்றியைக் கொண்டாடுவது எங்களுக்கு பெரும் மகிழ்ச்சியைத் தருகின்றது.

உங்களின் சேவை சமயத்துடன் இணைந்து சமூகத்தின் தேவைகளையும் உள்ளடக்கி பலதரப்பட்டதாக இருப்பதும் மிகவும் பாராட்டப்பட வேண்டியதாகும்.. இவ்வாறே இனிவரும் காலத்திலும் உங்களுடைய பணிகள் சிறப்படையவும், வளரவும் இதனால் பலரும் பயனடைந்து அனைவரும் சிறப்பாக வாழ நாம் வாழ்த்துகின்றோம் சங்கத்தின் வெற்றிக்கு அயராது உழைக்கும் அனைவரையும் நாம் வாழ்த்துகின்றோம்.

கொம்பனித்தெரு முருகப் பெருமானின் அருளால் விழா வெற்றியடைந்து உங்களின் நற் பணிகள் தொடரவும் பிராத்திக்கின்றோம்.

வணக்கம்
ஓம் நமசிவாய
என்றும் இறை பணியில்

NAMASIVAYAM MURALITHARAN
Hon. General Secretary
COLOMBO SAIVA MUNNETTA SANGAM
No: 101/70, Kew Road (Jalan Padang)
Colombo 02
Sri Lanka.

நமசிவாயம் முரளிதரன்
கௌரவ பொதுச் செயலாளர்
கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கம்
தொடர்பு - 0094 773 429 747
மின்னஞ்சல் - secretary@colombosms.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## சங்க ஆலய பிரதம குரு சிவஸ்ரீ ரமேஷ் குருக்கள் அவர்களின் வாழ்த்துரை



நால்வர் துதி

பூழியர் கோன் வெப்பொழித்த
புகலியர் கோன் கழல் போற்றி
ஆழி மிசைக் கல் மிதப்பில்
அணைந்த பிரான் அடி போற்றி
வாழி திரு நாவ லூர்
வன் தொண்டர் பதம் போற்றி
ஊழி மலி திரு வாத
ஊரர் திருத் தாள் போற்றி

அனைவருக்கும் வணக்கம்,

சைவ முன்னேற்றச் சங்கத்தின் 40வது ஆண்டு விழா நடைபெறுவது அளப்பரிய மகிழ்ச்சி. 40 வருடங்களுக்கு முன்பு ஆலயங்கள் இல்லாத காலத்தில், இலண்டன் மாநகரில் நம் சைவ முன்னேற்றச் சங்கம் 21-08-1977 அன்று ஆரம்பித்த நாள் முதல் இன்று வரை சங்கம் பல சாதனைகளைச் செய்து வருகின்றது.

இப்படிப்பட்ட சிறப்பான பணிகளுள் நால்வர் தமிழ்க் கலை நிலையம், பண்ணிசை வகுப்பு, நால்வர் மூத்தோர் நிலையம், யோக வகுப்பு, சைவநெறிப் பாட வகுப்பு, அன்னை சிவகாமியின் மாதரணி மற்றும் அந்திமக்காலங்களில் பங்கு கொள்ளுதல். இது போன்ற பல சமய சிந்தனைகளுடன் ஸ்ரீ சிவகாமி சமேத சிதம்பரமேஸ்வர ஆலயமும் சைவ முன்னேற்றச் சங்கத்தில் ஸ்தாபித்து சிறப்பாக நடத்தி வரும் நன்நாளில், 40 வருட ஆண்டு விழா நடைபெற உள்ளது. 40வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு 40 தம்பதிகளுக்குத் திருமண வாழ்க்கை வழங்கி இலங்கையில் சிறப்பாகத் திருமண விழா நடத்தி வைத்துள்ளமை சங்கத்தின் பரந்த, ஆழ்ந்த நோக்கத்தைக் காட்டுகின்றது. தொடர்ந்து முத்துவிழா(50), பவளவிழா(60), இரத்னவிழா(75), வைரவிழாவாக கொண்டாடுவதற்கு இறையருளோடு சைவப் பெருமக்கள் நம் அனைவரது நல் ஆசிகளுடன் நடைபெற வாழ்த்துகிறோம்.

“மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்”

சோ. றமேஷ் குருக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# தலைவன் தலைவிக்கு எழுதுவது

உன்னைக் கருத்தில் கொண்ட நாள் முதலாய் காலடியில் கிடக்கின்றேன்.

கொட்டிக்கிடக்கும் எண்ணமெல்லாம் சிட்டிகையாய்த் தந்துவிடச் சிரமமாய் உள்ளதை நீயுணர்வாய் என் அன்பே! எட்டிப் பிடிக்க முடியாத உன்னை எழுத்தால் தட்டித்தட்டி தடவியதால் வந்த மடலிது.

கண்ணே கனியமுதே, காட்டு வழிப் பயணமாய் இருந்த காலத்தே கருத்துள் புகுந்து பூத்தவளே புதியவளே கூட்டுக்குள் குறுகிக் கிடந்த எம்மை நாட்டுக்குள் நட்டு வைத்த நங்கையே விட்டில் பூச்சிகள் விளக்கில் விழுந்தழிவதுபோன்று மனக் கவலைக்கு மருந்தாக என்னுள் குடிபுகுந்த சங்கதியே சங்கமே உன் தொட்டில் காலம் மறைந்து எட்டைந்து ஆண்டில் நிற்கும் உன்னை எவ்வாறு எழுத்தில் தொட்டு வரைவது?

தேய்பிறையே இல்லாத பௌர்ணமியே, தீண்டத் தூண்டும் ஓவியமே, நீ கால் பதித்த பாதையிலே

கனிந்த தமிழ்க்கலை நிலையப் பட்டறையே

பூத்து நிற்கும் நல் யோகத்தின் போகமே

நால்வர் மொழி சொல்லும் மூத்தோர் தமிழே

ஆனந்தத் தாண்டவத்தின் அம்பலமே

பொற்கலசத்துப் புது வெள்ளமே

பண்ணிசையே சித்தாந்தச் செல்வப் பெருக்கே

கற்பூரமாய்க் காற்றில் கரைந்தவரை வழியனுப்பும் பெட்டகமே

எண்ணிலடங்கா எழிலே நால்வர் தமிழே குழைத்தெடுத்த சந்தனத்தின் புது மணமே பொதிகையின் வசந்தத் தென்றலே வாழ்வளித்த வல்லியே வரமொன்று தந்திடு எனக்கு வாய்த்தவளே

புகழ்தேடாப் புனிதர் சிலர் வேண்டும். புறம்பேசாப் புதியவர் சிலர் வேண்டும். இளையோர் உன்னில் காதல் கொள்ள வேண்டும். இதன் இனிமை இனி அவர் உணர வேண்டும். முதியோன் நான் உன்னை வணங்குகிறேன் தாயே.

கடைச் சங்கம் கடலோடு போனதால் குமரி உனக்கு முனைந்து செய்த நான்காம் சங்கம் இது. அலைபேசும் செந்திநகர் கரையோரம் நின்றிலங்கும் செந்தூரமாய் நன்றே நின்று வாழ்ந்திடம்மா. வந்தோரைக் காத்திடம்மா.

சதாசிவம் ஆனந்ததியாகர்
சங்கத் தலைவன்
"தணிகை"
151 Longwood Gardens
Ilford Essex IG5 0EG

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## President's Message

It is an honour and privilege to be serving as the 13th President of Saiva Munnetta Sangam. I am humbled and deeply grateful to the membership and the Management Committee for providing me with this opportunity.

I am glad for this occasion to share my thoughts with you all. This anniversary marks another milestone in our organisation's life, and we are blessed to celebrate it together. Our anniversary observances are moments where we humbly reflect on all that we have achieved over the years.

Sometimes I wonder how my life would have been without the SMS. All I can come up with is that it would have had less meaning and value. I'm glad to have been a part of SMS, and I wouldn't change it for anything.

I thank you all for your commitment and investment in SMS. With your earnestness and tireless support, we have gained much-deserved recognition and good-will in the community. I ask you to join me in remembering and thanking the past Presidents, our many sponsors and our innumerable volunteers for their dedication in making our Sangam a success. We rely heavily on volunteers and we have been fortunate to always have willing supporters to help accomplish our missions.

There is a saying that it takes a village to raise a child. I wholly believe this to be true! The village I refer to here is you, and the child being the SMS. So I can only once again thank you for raising SMS to what it has become today.

It is not easy to acknowledge our vulnerabilities and imperfections. However, I do not see our limitations as failures, but rather opportunities to grow and build a resilient organization, which will continue to have longevity.

This has been a wonderful journey - 40 years of success and achieving greatness – and we hope we continue to do so in the future. Our aim is to reach new heights in the coming years. We remain grateful for our existing supporters and look forward to inviting others to join our mission. Thank you again for all your efforts… they have been a great blessing to the organization.

We look forward with optimism to the future years.

**Sathasivam Anandathiyagar**

எழுத்து அறிவித்தவன் இறைவன் ஆகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்.

# எட்டித் தொடும் தூரம் நோக்கி...............

**செயலாளர் மாணிக்கம் இந்துகேரன்**

ஐக்கிய இராச்சியத்துத் சைவத்தமிழ்ச் சமுதாயத்தின் தேவைகளை இயன்றளவு நிறைவேற்றவும், எமது இளம் சமுதாயத்தினரின் சைவவாழ்வியலையும் தமிழ்க்கலை, கலாச்சார விழுமியங்களையும் சிறப்பான முறையில் அவர்கள் அமைப்பதற்கு உதவவும் வேண்டுமென்னும் தொலைநோக்கோடு ஆரம்பிக்கப்பட்ட சங்கம், **சைவமுன்னேற்றச் சங்கம் (U.K).** சிவப்பணியினை மூத்தோர் இல்லத்தின் மூலம் சமுதாயத்தை அக்கறையுடன் பராமரிக்கச் செய்தல், இளையோரது முன்னேற்றங்களை ஊக்கப்படுத்தல் வழியாக அவர்கள் தங்கள் திறமைகளையும் ஆற்றல்களையும் பயன்படுத்தி வாழவைத்தல், சிறுவர்களுக்கான சைவத்தமிழ்க்கல்வி கலைகளை அறநெறிகளுடன் வளர்த்து அவர்களை வீட்டுக்கும் நாட்டுக்கும் ஏற்ற சிறந்த மனிதர்களாக்குதல் என்ற முத்திறப்பட்ட நோக்குடன் இச்சங்கம் இறைவனடி தொழுது உழைத்து வருகிறது. இச் சங்கம் தனது 40வது ஆண்டை நிறைவு செய்துள்ள பெருமகிழ்வில் இறைவனுக்கு நன்றி செலுத்தவும் மனமகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டாடிடவும் நடைபெறுகின்ற இப்பெருவிழாவில் சைவமுன்னேற்றச் சங்கத்தின் செயலாளர்க்குரிய செய்தியைத் தருவதில் மனம் பெருநிறைவு பெற்று மகிழ்வடைந்து இறைவனுக்கு நன்றி கூறுகின்றது.

எமது தாயகத்தில் சைவத்திற்கும் தமிழுக்கும் சிவப்பணி வழியாச் சிறப்பான பல பணிகளை நடாத்திப் பெருமை படைத்து நிற்கும் சைவமுன்னேற்றச் சங்கத்தைத் தாய்ச் சங்கமாகக் கொண்டு சிவப்பணி செய்யவென 1977ல் இலண்டனில் விதைக்கப்பட்ட இலண்டன் சைவமுன்னேற்றச்சங்கம் என்ற சிறுவிதையானது முளைத்துச் சிறு மரமாகி, தற்போது பெரிய விருட்சமாகச் சமுதாயத்திற்கு நிழல் தருகின்ற தனியான சுதந்திரமான அறக்கட்டளைச் சங்கமாக அனைவருடைய உழைப்பாலும் வளர்ந்திருப்பதைக் காண்கையில் மனம் அளவிலாத ஆனந்தம் அடைந்து, இந்த வெற்றிக்கு ஆரம்பம் முதல் இன்று வரை பல்வேறு வழிகளில் உதவிய அனைவருக்கும் நன்றி நவில்கின்றது.

இது உங்கள் அனைவரினதும் சங்கம். உங்களின் சங்கமாகிய சைவமுன்னேற்றச் சங்கம் (U.K), அபாரக்கிரியைகளை நடத்தி இறந்தோர்க்கும் வாழ்வோர்க்கும் அமைதியும் இறையருளும் பெற்றுத் தரும் முயற்சிகளுடன் தொடங்கி நால்வர் முதியோர் நிலையம், யோகா நிலையம், நால்வர் தமிழ்ப் பாடசாலை, கலசம் சஞ்சிகை, ஸ்ரீசிவகாமி சமேத சிதம்பரேஸ்வரர் ஆலயம், எனப்பலவழிகளில் அனைவரும் பயன்பெறக் கூடிய முறையில் வளர்ந்து, ஐக்கிய இராச்சியத்துச் சைவத்தமிழர்களின், இன்றைய பல சமுதாயத் தேவைகளை நிறைவு செய்துள்ளதுடன், நாளைய சமுதாயத்தை எம்மோடு இணைத்துச் செயற்பட வைப்பதற்கான பல தளங்களையும் உருவாக்கி நிற்கிறது என்பதைப் பெருமையுடன் எடுத்துரைக்க விரும்புகின்றேன். இவ்வாறு ஒரு சைவச்சங்கம் இங்கிலாந்தில் இவ்வளவு விரைவாகத் தன்னை மக்கள் மயப்படுத்தி பெருமதிப்பினை அனைவரிடமும் பெற்று நிற்கிறது என்றால் அதனை இறைகருணை என்றே சொல்ல வேண்டும்.

மேலும் இவ்வாண்டில் சங்கத்தின் சிவப்பணிகள் தொடங்கி நாற்பதாவது ஆண்டு நிறைவு பெறுவதையொட்டி 40இல்40 என்ற திட்டத்தின் மூலம் தாயகத்தில் உள்ள உதவி தேவைப்பட்ட 40 பேருக்கு அவர்கள் சைவசமய முறைப்படி மாங்கல்யம் அணிவித்துத் திருமணம் செய்வதற்கான சகல வசதிகளையும் அளித்து அவர்களது திருமணவரவேற்புகளும் சிறப்பாக இடம்பெற உதவியுள்ளோம். இத்திட்டத்திற்கு இங்கு எமது உறுப்பினர்களும் கருணை உள்ளம் கொண்டவர்களும் அளித்த பேராதரவுகளும், அங்கு இத்திட்டம் சிறப்பாக நிறைவு பெற வழங்கப்பட்ட தொடர்புகளும் சேவைகளும், இதுபோன்று மக்கள் நலத் திட்டங்களைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கான நம்பிக்கையையும் செயல் வேகத்தையும் தந்து, எமது சங்கத்தின் எதிர்காலத்திட்டங்களுக்கு நாம் திடமாக உழைக்கப் புதிய ஊன்றுகோலாக மாறியுள்ளது.

நல்லதொரு எதிர்காலத்தைப் புலத்துச் சைவத் தமிழ் மக்களுக்கும் தாயகத்து உறவுகளுக்கும் அமைப்பதற்குத் தகுந்த சூழலை நாம் அனைவரும் ஒன்றாக எந்தவித வேறுபாடுகளும் இல்லாமல் உழைத்து உருவாக்குவதன் மூலம் எமது இளைய சமுதாயம் சைவத் தமிழ் வாழ்வினைச் சிறப்பாக வாழ்வதற்கான அடித்தளத்தை எம்மால் உருவாக்க முடியும். உருவாக்க வேண்டும். இதற்காக அனைத்துப் புலம்பெயர் மக்களும் குறிப்பாகச் சைவத் தமிழ் மக்கள் எம்மோடு இணைந்து உழைத்திட வர வேண்டுமென்பது எமது இந்த நாற்பதாவது ஆண்டின் அழைப்பாக உள்ளது எனக்கூறி அனைவரையும் சிவப்பணியில் இணைத்து இம்மையிலும் மறுமையிலும் அவர்கள் இன்புற்று மகிழ்வதற்கான ஆற்றலை எல்லாம் வல்ல ஸ்ரீநடராசப் பெருமானே தந்தருள வேண்டுமென அவன் திருவடி பணிகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாற்பதைத் தாண்டும் சங்கப்பணிகள்

சைவ முன்னேற்றச் சங்கம் (UK) நாற்பதாவது ஆண்டு நிறைவு

மகிழ்வு தரும் நிகழ்ச்சி. இறைவனுக்கு நன்றி கூறும் நிகழ்ச்சி.

இந்நன்னாளில் மலரும் மலருக்குப் பொருளாளர் என்ற முறையில் எதனை எழுதிடல் நலமெனச் சிந்தித்தேன். சங்கத்தின் பணிகள் தொடர்வதற்கான சில சிந்தனைகளை முன்வைத்தால் இறைவனருளால் அவற்றை நிறைவேற்றிடும் சக்தி பிறக்கும் என்று மனது கூறியது. இதனால் எழுந்ததே இச்சிறு கட்டுரை.

முதலாவதாக சைவத்தின் விழியாக அமைவது சமய அறிவு. அந்த விழி கொண்டு பார்த்தாலே நாம் வாழ்வதற்கான பல வழிகள் பிறக்கும். நாவலர் பெருமான் அவர்கள் சமய அறிவில்லாத ஆலய வழிபாடு வீணானது என்று அழுத்தமாகக் கூறினார். இலங்கைச் சைவமுன்னேற்றச் சங்கமும் சமய அறிவை வளர்க்கப் பல முயற்சிகளைச் செய்தமையையும், செயது வருவதையும் நாமறிவோம். இங்கும் சைவமுன்னேற்றச் சங்கம் ருமு சைவவகுப்புக்களை நடாத்தியும் சைவத்திற்கான தனது தேர்வுகளை வைத்துச் சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கியும் பல வழிகளில் சமயக்கல்வியை வளர்க்க கடந்த நாற்பது ஆண்டுகளாக முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

ஆயினும் இதுவரை சைவத்திற்கான ஒரு அரசஅங்கீகாரம் உள்ள சான்றிதழ்களை வழங்கும் கல்வி முறை எதுவும் தொடங்கப்படவில்லை. இந்நிலையில் கேம்பிரிஜ் பல்கலைக்கழக அனைத்துலகத் தேர்வில் உயர்தரத்தில் இந்து மதம் ஒரு பாடாமாக இருப்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த கேம்பிரிஜ் பல்கலைக்கழக அனைத்துலகத் தேர்வுச் சபையினருடன் சைவத்திற்கான பாடத்திட்டம் ஒன்றைக் கையளித்துப் பேசிச் சைவத்தையும் உயர்தரத் தேர்வுக்குரிய பாடமாக முன்வைக்கச் செய்தால் சைவமும் பல்கலைகழக அனுமதிக்கான புள்ளிக்குரிய பாடமாக வரும். பெற்றோரும் சைவத்தைப் படிப்பிப்தற்கு அதிக அக்கறை காட்டுவர். வழங்கப்படும் சான்றிதழும் உலகெங்கும் வேலை வாய்ப்புக்களுக்கும் பல்கலைகழகக் கல்விக்கும் ஏற்புடையதாக அமையும். இதனைச் சங்கத்தின் வேலைத்திட்டங்களுள் ஒன்றாக நாம் விரைவு படுத்த வேண்டும்.

இவ்விடத்தில் இலங்கையில் பட்டதாரி ஆசிரிய சம்பளத்திற்கு இந்துமதப்பாடத்திற்கு ஏற்புடையதாகவும் யாழ்பபாணப் பல்கலைகழகத்தின் இந்துநாகரீக முதுகலைமாணி அனுமதிக்கு ஏற்புடையதாகவும் உள்ள அகில இலங்கைச் சைவப்புலவர் சான்றிதழ் தேர்வையும், தமிழகத்தில் சமய ஆசிரியத் தகுதியாகக் கருதப்படுவதும் திருமந்திரத்தில் BA. MA மற்றும் PhD பட்டப்படிப்புக்களைப் படிக்க உதவுவதுமாகிய உலகத் தமிழராய்ச்சி நிறுவனத்தின் திருமந்திரமும் வாழ்வியலும் பட்டயக் கல்விச் சான்றிதழும் கூடவே

வேதியர்க்கு அழகு வேதமும் ஒழுக்கமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுகநாவலர் பெருமானுக்கு நாவலர் பட்டத்தை வழங்கிய திருவாவடுதுறை ஆதீனத்தின் சித்தாந்த இரத்தினம் பட்டப்படிப்பும் பெரியவர்களுக்கு சங்கத்தில் நடாத்தப்பட்டு வருகிறது. இனிவரும் காலத்தில் இலங்கை இந்தியப் பல்கலைகழகங்களின் சைவசித்தாந்தம் மற்றும், தமிழ்த் துறைத் தேர்வுகளையும் சங்கத்தின் வழி நடத்துவதற்கான ஏற்பாடுகளும் நடைபெற்று வருகிறது. இதனால் நாவலர் பெருமானின் சைவசமய அறிவை வளர்த்தல் என்னும் தலையாய நோக்கைச் சங்கம் சிறந்த முறையில் முன்னெடுத்து வருகிறது.

கூத்தன் என இறைவனை அழைத்து ஆடல்வல்லானாகிய அவன் வழிவந்த நடனக்கலையை வளர்த்தல் என்பது சைவமுன்னேற்றச் சங்கத்தின் தலையாய பொறுப்பாக உள்ளது. ஏழிசையாய் இன்னிசையாய் இருப்பவன் இறைவன் என்பதற்கு அமைய இசைத்தமிழையும் சங்கம் வளர்த்து வருகிறது. இந்த நுண்கலைகளுக்கான சான்றிதழ்கள் சங்கத்தால் ஒவ்வொரு தரத்திலும் சித்தியடைந்தவர்களுக்கு வழங்கப்பட்டு வந்தாலும் ஒவ்வொரு தரத்திற்கும் ஒரு பல்கலைக்கழக மட்ட அங்கீகாரம் உள்ள சான்றிதழைப் பெற்றுக் கொடுக்கவும் முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றது.

மேலும் அரங்கேற்றம் முடித்த பின்னரும் அல்லது ஒரு கல்வியைத் துறைசார் நிலையில் முடித்த பின்னரும் தொடர்ந்தும் அந்தக்கலைகள் அந்தக் கல்வி வளர்வதற்கு ஆசிரியராகவும் நிகழ்ச்சி செய்பவர்களாகவும் விளங்கும் இளையோர்கள் நாற்பது பேருக்குச் சங்கத்தால் மதிப்பளித்து அவர்களை ஊக்குப்படுத்தும் திட்டம் இந்த நாற்பதாவது ஆண்டு நிறைவில் நடைபெறுகின்றது. இந்தத் திட்டத்தை ஒவ்வொரு ஆண்டிலும் நடத்திக் கல்வி கலைகள் வளர உழைக்கும் இளையோர்க்கு மதிப்பளித்து அவர்களை ஊக்குவிக்கச் சங்கம் திட்டமிட்டு வருகிறது.

சங்கத்தில் நிகழும் விழாக்கள் கலைநிகழ்ச்சிகள் சமய வழிபாடுகள் என்பன குறித்து அனைவரும் தெரிந்து கொள்ளச் சங்கத்தின் வலைத்தளம் ஒன்றைத் தொடங்கியதுமல்லாமல் தோரணம் என்னும் இலத்திரனியல் மாதசஞ்சிகை ஒன்றையும் நடாத்தி அனைவருக்கும் தகவல்கள் கிடைக்க வழிசெய்து வருகின்றோம்.

எல்லாவற்றுக்கும் மேலாகச் சிவகாமி உடன் உறை சிதம்பரேஸ்வரர் கோயிலை அகலப்படுத்தி அதிக அடியார்கள் சிவவழிபாடுகளில் பங்குபற்று உதவும் பாரிய திட்டம் ஒன்று சங்கத்தின் முக்கிய திட்டமாக முன்வைக்கப்பட்டு மக்கள் ஆதரவும் அரச அனுமதிகளும் பெறும் பணிகள் தொடர்ந்து கொண்டுள்ளன.

சங்கத்தின் யோகா நிலையமும் அதன் பணிகளும் நாடறிந்த ஒன்று மட்டுமல்ல தாயகம் அறிந்த ஒன்றாகவும் உள்ளது. பெருந்தொகையான இளையவர்கள் யோகாவில் பங்குபற்றி ஆன்ம உடல் பலம் பெற்று வருகின்றனர் முதியவர்களும் யோகாவில் பங்கேற்றுத் தங்கள் உடல்உள நோய்கள் நீங்கப் பெற்று மகிழ்ச்சி வாழ்வு வாழ்கின்றார்கள்.

தாயகத்தில் யுத்தத்தின் பின்விளைவுகளால் அல்லலுறும் ஆதரவு அற்ற மக்கள் நல உதவிகளும், கல்விவள உதவிகளும் சங்கத்தால் அளிக்கப்பட்டு வருகிறது.

இத்தகைய ஆன்ம உள உடல் நலத்திட்டங்கள் பலவற்றை முன்னின்று நடாத்தும் சைவமுன்னேற்றச் சங்கம் (UK) இன் பொருளாளராக இருந்து என்னால் இயன்ற பணிகளைச் செய்வதற்கு சந்தர்ப்பம் அளித்த இறைவனுக்கும் சைவமுன்னேற்றச் சங்கத்தின் அறங்காவல் குழுவினர்க்கும் என் இதய நன்றிகளைக் கூறி சைவமுன்னேற்றச் சங்கத்தின் பொருள் வளம் சிவனடியாராகிய உங்கள் ஒவ்வொருவரின் வழியாக வளர வேண்டியதாக இருப்பதால் அதற்கான உள்ளத்தையும் உழைப்பையும் சிவகாமி உடனுறை சிதம்பரேஸ்வரர் உங்கள் எல்லோருக்கும் எனக்கும் அருளிட வேண்டுமென அவரை வேண்டி விடை பெறுகின்றேன்.

Mr. Sothiratnam Niranjan. BA (Hons), MSET, MInstLM

Hon. Treasurer and Trustee
Saiva Munnetta Sangam UK

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# subara

THE SMART CHOICE

- Accident Protection
- Block Management
- Building Maintenance
- Critical Illness Cover
- Home Insurance
- Income Protection
- Landlord's Cover
- Life Insurance
- Commercial Insurance

Ask our staff for
more information

**020 3119 1111**
**info@subara.co.uk**
**www.subara.co.uk**

Subara Business Centre
4 Weald Lane
Harrow HA3 5ES


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இலண்டன் ஸ்ரீ முருகன் ஆலய சிவாசாரியார்கள் இணைந்து வாழ்த்துகிறார்கள்

உ

இறைவனால் படைக்கப்பட்ட இவ்வுலகத்தில் கிடைத்தற்கரிய மனிதப்பிறவியை அடைந்துள்ள நாம் எல்லோரும் கிடைத்த இப்பிறவியை பயனுள்ளதாக ஆக்கிக் கொண்டு நமக்கு விதிக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றி சமய நற்சிந்தனையையும் சமுதாயச் சேவைகளையும் போற்றி வாழ்ந்து நாடு, மொழி, குடும்பம், சுற்றம், இனம் என அனைத்தும் செழிக்கவேண்டித் தொண்டாற்றி சிறப்பிப்பதுதான அழியாப் புகழாகும்.

வாழும் வாழ்க்கையில் இல்லாதவருக்குப் பொருள் ஈந்து, இயலாதவர்க்கு உதவி செய்து, மற்றவர்க்கு வழி காட்டியாய் வாழ்வது பெருமையடையக் கூடியது. இத்தகைய வாழ்க்கை நெறிமுறையில் அனைவரையும் ஈடுபடுத்தி இறை வழிபாட்டிலும் சமூக சேவையிலும் முதியோர் உபசரிப்பிலும் முத்தமிழ் வளர்ப்பிலும் மனம் மகிழ்ந்து அன்புத் தொண்டாற்றி வரும் இலண்டன் சைவ முன்னேற்றச் சங்கம் தங்கள் சேவையில் 40 ஆண்டுகளைப் பூர்த்தி செய்து கொண்டாடி மகிழ்வது அறிந்து பெரு மகிழ்ச்சி அடைகிறோம்.

கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக இலண்டன் ஸ்ரீ முருகன் ஆலய அனுசரணையோடு சைவ முன்னேற்றச் சங்க, சமய சமூகத் தொண்டுகளில் இணைந்து வழிபாடுகளில் பங்குாற்றி கலை கலாசார விழாக்களில் கலந்து மகிழ்ந்தது என்றென்றும் நினைவில் நிற்கும் பொற் காலமாகும்.

இளைஞர்களை சமயத்தில் ஈடுபட செய்வதும் முதியோர்களை அன்புடன் அரவணைத்து மகிழ்விப்பதும் உடல் மன நலம் காக்கும் யோகாசனப் பயிற்சியில் அனைவரையும் ஈடுபடச் செய்வதும் இயற்கை அனர்த்தத்தில் தாய்நாடு சீர்குலைந்து மக்கள் துன்புற்ற காலத்தில் உதவிக் கரம் நீட்டி பொருளுதவி செய்ததும் இறைவனடிச் சேர்ந்தோர்க்கு ஈமக்கிரியை செய்து அவர் தம் ஆத்ம சாந்தி பெற பிரார்த்தனை நடத்துவதும், வேத ஆகம, திருமுறை வித்வான்களையும் முத்தமிழ் கலைஞர்களையும் கௌரவிப்பதும், ஆலயங்களில் திருவிழா காலங்களில் ஆன்மீக பணியாற்றுவதும், குறிப்பாக இலண்டன் ஸ்ரீ முருகன் ஆலய மஹா கும்பாபிஷேகத்தின் பொழுது சங்கத்து பெரியோர்கள் இளைஞர்கள் தாய்மார்கள் அனைவரும் அயராமல் தொண்டாற்றி உதவியதும் என்றென்றும் போற்றப்பட வேண்டியவை.

சமயம் வளர்ந்திட சமூதாயம் மேம்பட வேண்டி அல்லும் பகலும் தொண்டாற்றும் சைவ முன்னேற்றச் சங்கம் நாற்பது ஆண்டுகள் சேவை நிறைவு பெறுவதோடு தொடர்ந்து பல்லாண்டு காலம் வளர்ந்து விரிந்து தொண்டாற்றி மகிழ்ந்து சிறந்திட வேண்டி எல்லாம் வல்ல இலண்டன் ஸ்ரீ முருகப் பெருமானை வணங்கி ஆசீர்வதித்து மகிழ்கிறோம்.

கயிலை சிவ ஸ்ரீ நாகநாத சிவம் குருக்கள்

கயிலை சிவ ஸ்ரீ சங்கர குருக்கள்

சிவ ஸ்ரீ செல்லப்பா குருக்கள்

சிவ ஸ்ரீ சந்தான சிவம் குருக்கள்

சிவ ஸ்ரீ கணபதி சுந்தர குருக்கள்

கயிலை சிவ ஸ்ரீ சோமாஸ்கந்த குருக்கள்

சிவ ஸ்ரீ கணேச குருக்கள்

சிவ ஸ்ரீ கல்யாண சுந்தர குருக்கள்

சிவ ஸ்ரீ கௌரி சங்கர குருக்கள்

சிவ ஸ்ரீ ஜனார்த்தன சர்மா

இலண்டன் ஸ்ரீ முருகன் கோயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Shree Ghanapathy Temple

125 – 133 Effra Road, London SW19 8PU
Tel: +44 (0)20 8542 7482 / 8542 4141
www.ghanapathy.co.uk

It is with great pleasure that I give this message on the special occasion of the 40th Anniversary Celebrations of the Saiva Munnetta Sangam.

Even before any temples were created, the Saiva Munetta Sangam provided help and spiritual advice to the Tamils here in the UK. My father, Mr. A.T.S. Ratnasingham, was a great supporter of their work, because it echoed the ideals and concerns for the future generations of our community that spurred him on to build our Temple. He therefore tried to support them in all the wonderful work that they did. And over the past 4 decades, it has grown and blossomed into an organisation that has it's roots within our great religion of Saivaism and yet also pervades many aspects of our culture and ancient traditions.

We see this in the marvellous work that the Saiva Munnetta Sangam has done in propagating our religion, culture and language to the children who have attended classes at the Sangam premises. And also in the great service they do for the elderly in our community. And yet their work reaches even further than this. Through their magazine, Kalasam, they have been able to bring articles and information about Saivaism into countless households. With its mix of Tamil and English, it is also able to reach all sections of our community and is a wonderful forum for spreading knowledge and ideas.

Within this special souvenir book, you will be able to read about the many diverse and exceptional projects that the Saiva Munetta Sangam has created, to serve the many different sections of our community. But the one place where they have been of greatest service is in an area that will affect every member of our community – the passing of a loved one. A team of incredibly dedicated and devoted volunteers at the Sangam is on call, day and night, to help comfort and support bereaved families at their time of greatest need. When contacted, they give advice about funeral arrangements, will print the funeral sheets, provide the priest to perform the last rites, be there to help guide the family through the rituals of the funeral service and even sing the necessary devotional songs during the funeral. Here in the U.K., where members of our community may not have older or extended family members here to help and support them through this most sorrowful time in their lives, the Saiva Munnetta Sangam becomes their family, and is there to give comfort and support, gently guiding them through the complex rites and rituals of sending their loved ones on their last journey. For this precious and priceless work, the Sangam will be remembered in the hearts of us all and cherished for the love, sympathy and compassion that moves them to perform this incredible service for our community.

Our most heartfelt congratulations, love and support go to this very special organisation on the occasion of their 40th Anniversary celebrations. On behalf of the Shree Ghanapathy Temple priests, Temple Management Committee, volunteers and devotees, our best wishes, prayers and blessings go to the priests, trustees, administrators and volunteers of the Saiva Munnetta Sangam, and we look forward to joining them for their Golden Jubilee Celebrations in 10 years time! May they continue their great work for the community and may Lord Ghanapathy continue to shower His choicest blessings upon them and guide them in their wonderful work in the future.

In humble service to our beloved Lord Ghanapathy,

MRS. G. MAHESHWARAN B.Sc.(Hons), P.G.C.E., Dip.Mont.Ed.
Temple Co-ordinator.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Aum Muruga
**BRITTANIA HINDU (SHIVA TEMPLE TRUST**
ESTABLISHED 1974, REGISTERED CHARITY NO: 269067
**HIGHGATEHILL MURUGAN TEMPLE**
200A, Archway road, London N6 5BA Tel:020 8348 9835 Fax: 020 8482 6508
Email: admin@highgatehillmurugan.org Website highgatehillmurugan.org



அப்பாத்துரை வைரவமூர்த்தி
தலைவர்
உயர்வாசற்குன்று முருகன் ஆலயம்

திருச்சிற்றம்பலம்

## சைவமுன்னேற்றச் சங்கம் இம்மண்ணில் மலர்ந்து நாற்பது ஆண்டுச் சேவை நிறைவை எமது வாழ்த்துக்கள்

கலசம் என்னும் மாதாந்த தமிழ் சஞ்சிகையை உருவாக்கி அதன் மூலமாக புலம் பெயர்ந்த மண்ணில் பிறந்த எமது வழித்தோன்றகளுக்கு தமிழையும் சைவத்தையும் போதித்து வரும் உயரிய தொண்டை செய்துவரும் சைவமுன்னேற்ற சங்கத்தினருக்கும் எனது மனம் நிறைந்த வாழ்துக்களை முதல் கண் தெரிவித்துக்கொள்கிறேன். புலம்பெயர்ந்த வாழும் எமக்கு பெருமை அளிக்கப் கூடிய வகையில் சைவமுன்னேற்ற சங்கம் இன்று தனது நாற்பதாவது ஆண்டு நிறைவுவிழாவை சிறப்பாக கொண்டாடுவதையிட்டு *இம்மண்ணில் வாழும் சைவத்தமிழ்மக்கள்* பெருமைப்படாமல் இருக்கமுடியாது. *சைவ முன்னேற்ற சங்கம்* மனித நேயத்திற்கும் எம்மண்ணில் வாழும் எம் சந்ததியினருக்காகவும் குரல் எழுப்பி அவர்கள் அல்லல்களை நீக்க அதற்காகான உதவிகளை தொடர்ந்தும் செய்து வருகின்றதை எண்ணி நாம் பெருமையடையாமல் இருக்கமுடியாது. புலம் பெயர்ந்த தமிழர்கள், தாம் வாழ்கின்ற மண்ணில் பழம்பெரும் பாரம்பரியமான தமிழர் பண்பாடுகளையும், அவர்களின் கலைகலாச்சார விழுமியங்களையும், விதைத்து, அரும் பெரும் முயற்சி எடுத்து சிறார்களின் மனத்தில் பரப்பி அவர்கள் மூலம் சைவத்துக்கும், தமிழ்க்கும் அவர்கள் செய்துவரும் மாபெரும் தொண்டு என்பதில் ஐயமில்லை. புலம் பெயர்ந்து இம்மண்ணில் உருவாக்கப்பட்ட சைவமுன்னேற்ற சங்கம் இம்மண்ணில் வாழும் சைவத்திருமக்கள் நலன் ஒன்றையே கருத்தில் கொண்டு பாரதியார் காட்டிய வழியில் நின்று தாம் வாழும் மண்ணுக்கும் வாழ்ந்த மண்ணுக்குமாக கடந்த நாற்பது ஆண்டுகளாக அல்லும் பகலும் உழைக்கிறார்கள் என்றால் அது வெறும் புகழ்ச்சியில்லை.

இவர்கள் முயற்சியால் சைவ தமிழ்மக்கள் இம்மண்ணில் எப்பகுதியில் வாழ்ந்தாலும் அவர்களிடம் சமய அறிவும், தமிழ் அறிவும் கலாச்சார விழுமியங்களும், ஆளுமைச் சிறப்புக்களும், தமிழோடிசை மறந்தடியேன், என்றவாறு பண்ணிசையும், உதிரத்தில் கலந்துவிட்ட உணர்வுபூர்வ திறமைகளாக புலப்பட்டு நிற்பதை காணமுடிகிறது. இவர்கள் உருவாக்கிய நால்வர் மண்டபமும், அறநெறிப்பாடசாலையும், எதிர்கால தமிழ் சமுதாயத்துக்கு ஒரு வழிகாட்டலாக அமைந்துள்ளதை காணும் தோறும், இவர்களும் மறைந்த ஞானி உயர் திரு சபாபதிப்பிள்ளையை வழிகாட்டலாக கொண்டு அறம் வளர்ப்பது பெருமைக்குரியது. புகழ் என்பது நாமாகத் தேடிக்கொள்வதன்று. ஒரு மனிதன் வாழ்கின்ற வாழ்கை எத்தனைபேருக்கு இந்தச் சமுதாயத்தில் நன்மை அளிக்கிறதோ, அந்த நன்மையை பெறும் மக்கள் வாழ்த்துகின்ற, வாழ்த்துத்தான் அவர்கள் காட்டும் நன்றி. இதுதான் புகழாக சமுதாயத்தில் மலர்கிறது.

"தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சிதன்
மெய்வருந்தக் கூலிதரும்"

இந்த வகையில் தமது அயராத பணியால் சைவமுன்றச்சங்கம் இங்கு வாழும் தழிழர்கள் மனதில் நிலையான ஒரு இடத்தைப் பிடித்து நிலைத்து நிற்கிறது.

உலகிற்கு முத்தமிழை தந்த திருமுருகன் அருளாட்சி செய்யும் உயர்வாசற்குன்று பழம்பதியில் இருந்து உங்கள் முயற்சிகள் பலன் அளிக்க என் வாழ்த்துக்கள்.

"நான்மறை அறங்கள் ஓங்க, நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்."

அன்புடன்
அ.வயிரவமூர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலண்டன் ஸ்ரீ முருகன் கோயில்
# LONDON SRI MURUGAN TEMPLE

REGISTERED CHARITY NO: 271097
78 CHURCH ROAD, MANOR PARK, LONDON, E12 6AF
TEL: 020 8478 8433 FAX: 020 8478 0407
www.londonsrimurugan.org

**BOARD OF TRUSTEES**
Mrs. L. Sivajoti (Chairman)
Mr. V.E. Palaniappan
Mr. G. Ramadass
Mr. R.C.A. Anpananthar
Mr. S. Narashiman

**PRESIDENT**
Mr. S. Sampathkumar

**VICE PRESIDENTS**
Mrs. S. Krishnasamy
Mr. R. Renganathan

**SECRETARY**
Mr. P. Dakshinamoorthy

**ASST. SECRETARY**
Mr. R. Panneerselvam

**TREASURER**
Mrs. P. Raguvaran

**ASST. TREASURER**
Miss. V. Thambyrajah

**EXECUTIVE COMMITTEE**
Mr V Chettiar
Mr. A. Gopal
Mrs. M. Gopalnathan
Mrs. Malliga Ramadoss
Mr. I. Muthu
Mr. R. Narayanan
Mrs. R. Ramachandran
Mr. Ravi Ramasamy
Mr. G. Sathiamoorthy
Mrs P Sekar
Mrs. R. Sekaran
Mr. M Sivam
Mr. M. Thenappan
Mr. P. Uthayakumar
Mr. A. Ramanathan
Mr. P. Sivasubramanian

திரு. V.R.இராமநாதன் அவர்கள் 06-10-2017
அறங்காவலர், மலர் வெளியீட்டுக் குழு
சைவ முன்னேற்றச் சங்கம். இலண்டன்

இலண்டன் சைவ முன்னேற்றச் சங்கம்
40வது ஆண்டு விழா வாழ்த்துச் செய்தி

மனித வாழ்க்கையில் தொண்டு எனப்படும் சேவை மனப்பான்மை மிக இன்றியமையாதது. இறைவனுக்கும், இயலாதவர்க்கும்,இல்லாதவர்க்கும் நம்மால் இயன்ற எல்லா உதவிகளையும் செய்து பிறர் வாழ நாம் வாழ்வது தலைசிறந்த தொண்டாகும். மக்கள் தொணடே மகேசன் தொண்டு என்ற வாக்கிற்கிணங்க பொதுமக்களுக்கு செய்யும் சேவையே உலகின் பெரும் தொண்டாக எண்ணி சமயத்தினூடாக சமுதாய தொண்டாற்றி வருகிறார்கள் லண்டன் சைவ முன்னேற்றச் சங்கத்தினர்.

தாய் மொழிக்கும், கலை கலாச்சார முன்னேற்றத்திற்கும், சமய சிந்தனை அபிவிருத்திக்கும், நல்லொழுக்க பயிற்சிக்கும், ஏராளமான திட்டங்களை ஏற்படுத்தி நடைமுறைப்படுத்துவதோடு, வாழ்க்கையின் நிறைவான முதுமை அடைந்தோரை ஊக்கப்படுத்தி அன்பும், பாசமும் ஊட்டி அகமகிழச் செய்கின்ற சேவை மிகவும் போற்றுதலுக்குரியது. வழிபடும் கடவுளுக்கும், வழிபாடு செய்யும் மக்களுக்கும், பெருந்தொண்டாற்றும் சைவ முன்னேற்றச் சங்கம் சேவையைத் தொடங்கி நாற்பது ஆண்டுகள் நிறைவு பெறும் இந்த நல்வேளையில் மங்களகரமாக 40 ஆதரவற்றோருக்கு திருமணம் நடத்தி வைத்து வாழ்த்தி மகிழ்ந்துள்ளார்கள். வாழ்வில் முக்கியமான திருமண நிகழ்வினை சைவ முன்னேற்றச் சங்கத்தின் ஆசியோடு ஏற்றிருக்கின்ற இந்த புதுமணத் தம்பதிகளின் வாழ்த்து சைவ முன்னேற்றச் சங்கத்தின் நற்பணிகளை மேலும் மேம்படுத்தும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

லண்டன் மாநகரில் தெய்வீகத்திற்கும், ஆன்மீக வளர்ச்சிக்கும் பெரும் சேவைபுரிந்துவரும் இலண்டன் ஸ்ரீமுருகன் ஆலயம் 32 ஆண்டுகளுக்கும் மேலாக சைவ முன்னேற்றச் சங்கத்தின் நற்பணிகளுக்கு தோள் கொடுத்து உடனிருந்து ஊக்குவித்து வருகிறது என்பதனை இத்தருனத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

நல்ல மனம் கொண்டோரின் பெரு முயற்சியினால் செயலாற்றும் சைவ முன்னேற்றச் சங்கம் மென்மேலும் வளர்ந்து சிறந்து தொண்டாற்றி மகிழ்ந்திட வேண்டி எல்லாம் வல்ல லண்டன் ஸ்ரீமுருகப் பெருமானை பிரார்த்தித்து வாழ்த்தி மகிழ்கிறேன்.

இப்படிக்கு,

சீனி.சம்பத்குமார்

தலைவர் இலண்டன் ஸ்ரீமுருகன் கோயில்
அறங்காவலர்கள் மற்றும் நிர்வாககுழுஉறுப்பினர்கள் சார்பாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

By Serving the devotees we serve God

**LAKSHMI NARAYANA TRUST**
**London Sri Mahalakshmi Temple**
**Charity Reg. No: 292677**
241 High Street North, Manor Park, London E12 6SJ
Tel: 020 8552 5082 Fax: 020 8552 5315
Web: www.srimahalakshmitemple.net
e.mail : info@srimahalakshmitemple.net

**Patrons**
Sri P.R. Ramasubrahmaneya Rajha
Nadarajah family Venus Group

**Senior Advisor**
Mr. S.N Perumal

**Board of Trustees**
**Senior Trustees**
Mr. V.N.Alagirisamy

**President**
Dr Radhakrishnan V

**Vice-President**
Mr. Thayalasamy S

**Chairman**
Mr. A Rengamannar

**Vice-Chairmen**
Mr. K Sreenivasan
Mr. Subburam S

**General Secretary**
Mr. K. Sivarupan

**Assistant Secretary**
Mr. Sethuraman S

**Treasurer**
Mr. S. Vijayakumar

**Assistant Treasurer**
Mr. Navaneethakrishnan R

**Public Relations Officer**
Mr. S.Seetharaman

**Cultural Secretary**
Ms. Kumari Selliappan

**Temple Office Manager**
Mr. R. Mohanaprakas

**Communications**
Mr. J.Thiyagarajan
Mr. R. Kannan
Mr. M. Sudarsanan

அக்டோபர் 16, 2017

**ஸ்ரீ லட்சுமி நாராயணப் பெருமாள் வாழ்த்து மடல்**

அன்புடையீர்,

மக்களுக்குத் தொண்டாற்றும் சைவ முன்னேற்றச் சங்கம் 40வது ஆண்டு நிறைவு அடைவதைக் கண்டு பூரிப்பில் இவ்வாழ்த்துச் செய்தியை உங்களுடன் பகிர்வதில் எமது அறங்காவலர் சபை பெருமிதம் கொள்கிறது. கடந்த நாற்பது ஆண்டுகளாக புலம் பெயர் நாட்டில் வாழ்கின்ற மக்களுக்கு சங்கம் ஆற்றும் தொண்டு மிகவும் அளப்பரியது. சமகாலத் தேவைகளைக் கருத்திற் கொண்டு அதற்கேற்றவாறு சங்கப் பணிகளைச் சீரமைத்து செவ்வனே நடைமுறைப்படுத்துவதில் காலம் காலமாக வெற்றி கண்ட சங்கப் பொறுப்பாளர்கள் அனைவரையும் இத்தருணத்தில் நினைவு கூர்ந்து மனதார வாழ்த்துகின்றோம்.

ஆரம்ப காலத்து நடைமுறைக்கேற்ப கலசம் மாதாந்திரச் சஞ்சிகையை வெளியிட்டு மக்கள் நலம் பெற பாடுபட்ட அங்கத்தினர்கள் இன்றைய தலைமுறையினருக்கு உகந்த வகையில் தோரணமாக இல்லங்கள் தோறும் கணணி வாயிலாகச் சென்றடைய செவ்வனே வழி வகுத்துள்ளார்கள். இந்த அரும்பெரும் பணி மிகவும் போற்றுதலுக்குரியது. அது மட்டுமல்லாமல் நால்வர் தமிழ்ப் பாடசாலை மூலமாக தமிழ் மொழி, கலை மற்றும் பண்பாடு சார்ந்த அறிவியல் நுணுக்கங்களை அறிந்து பயன்பெற்றவர்கள் ஏராளம் ஏராளம். கடந்த சில வருடங்களாக மூத்தோர் நிலையம் அமைத்து முதியவர்களின் தேவையை பூர்த்தி செய்து வருவது கண்டு களிப்படைகின்றோம்.

ஈழத்தில் தங்களது தொண்டு, இடரில் வாழும் நம் தமிழ் உறவுகளுக்கு காலம் காலமாக பயனளிக்கும் வண்ணம் தொடர வாழ்த்துகின்றோம்.

இவ்வகையான முயற்சிகளில் அயராது பாடுபட்டு வரும் அறங்காவலர்களுக்கு எல்லாம் வல்ல ஸ்ரீ மஹாலட்சுமி சமேத ஸ்ரீ லட்சுமி நாராயணர் பேரருள் கிட்ட பிரார்த்திக்கின்றோம்.

கா. சிவரூபன்
பொதுச்செயலாளர்
ஸ்ரீ லட்சுமி நாராயணர் அறங்காவலர் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Hindu Cultural Centre

Trustees: Mr T Sanmugarajah FCCA, Dr J Saravanamuthu, Miss A Seevaratnam M Sc FCCA MBA, Mr N. Seevaratnam
Temple Ombudsman: Mr.V.R .Ramanathan, FinstSMM, CertPFS,CertCII(MP) (Founder, Saiva Munnetta Sangam (UK))

சிவயோகம்
**SIVAYOGAM**
(Charity Reg No: 1050398 Since: 1995)
*To facilitate here and beyond*

**Founder & Spritual Leader**
*Sakthy Aanmeehach Chudaroli*
Mr Nagendram Seevaratnam ACA, ACMA

உ

ஓம் சக்தி

சங்கத் தலைவர் மற்றும் ஆட்சிக் குழு உறுப்பினர்களுக்கு வணக்கம்.

எங்கள் மொழிக்காகவும், சமயத்திற்காகவும், இனத்திற்காகவும் பாடுபடும் சிந்தனை எல்லோருக்கும் இயல்பாக வந்துவிடாது. ஆனால் இதற்காகவே ஒரு சங்கம் 40ஆண்டுகளாகச் செயற்படுகிறது என்றால் அதன் பண்பு உயர்வானது போற்றப்பட வேண்டியது.

தாய் மண்ணில் இப்படியான சேவையைச் செய்வது வேறு. இந்த நாட்டில் மதத்தால், மொழியால். பழக்க வழக்கங்களால் வேறுபட்ட சூழ்நிலையில் இத்தகைய நோக்கத்தில் சங்கம் அமைக்கப்பட்டு வெற்றியாக முன்னேறிக்கொண்டே உள்ளது என்பது எங்கள் அனைவருக்கும் பெருமை சேர்க்கும் பெரும் செயல்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்ற வாக்கினைத் தாரக மந்திரமாக ஏற்றுக் கொண்டு சைவ சமயக் கருத்தைப் பரப்பி அதன் வாயிலாக பல சிறப்பான சமூகத் தொண்டுகளைச் செய்து வருகின்ற உங்களை வாழ்த்துகின்றோம்.

கோயில்கள் இல்லாத காலத்திலேயே வீடுகளில் சமய வழிபாடுகளை பக்தியுடன் செய்தமை சமயத்தைக் காப்பாற்றும் ஓர் அரிய செயலாகும். ஓர் எதிர்காலச் சிந்தனையுடன் அன்று செயற்பட்ட காரணத்தால் எங்கள் சமயக் கொள்கைகள் கடந்த 40 ஆண்டுகளாக எங்கள் மத்தியில் வளர்ந்து வேரூன்றிக் கொண்டது. இந்த நிழலில் இங்கு நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

ஆதலால் தங்கள் சங்கம் இன்னும் பல்லாண்டுகள் வளர்ந்து இன்னும் பல அரிய பெரிய செயல்களைச் சாதித்து எங்கள் இனத்திற்கும் மனித குலத்திற்கும் தொடர்ந்து பணி செய்ய வேண்டுமென எல்லாம் வல்ல முத்துமாரி அம்மனை வணங்கி வாழ்த்துகின்றோம்.

வாழ்க தொண்டர்கள்

வளர்க தொண்டு

தங்கள் அன்புள்ள
சிவசக்தியின் பணியில்

*N Seevaratnam*

நாகேந்திரம் சீவரத்தினம்

**Registered Office:** 41 St. Georges Ave, Kingsbury, London NW9 0JT Tel: 020 8767 9881 Fax: 020 8711 5333
E.mail: sivashakthy@sivayogam.co.uk, Web: www.sivayogam.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CARLTON LEISURE

Worldwide Travel & Tours

IATA

இலங்கை, இந்தியா மற்றும் கனடா ஆகிய நாடுகளுக்கு விமானப்பயணச்சீட்டு விற்பனையில் கடந்த 23 வருடங்களாக தனக்கென முத்திரை பதித்த ஒரே ஒரு தமிழ் முகவர் நிறுவனமான **Carlton Leisure** வாடிக்கையாளரின் நம்பிக்கையின் உச்சத்தில் தன்னம்பிக்கையுடன் தமது சேவைகளை தொடர்கிறது...

## Why book with Carlton Leisure?

- Price match guarantee
- Exclusive deals for hundreds of destinations
- All your travel needs under one roof
- ATOL protected
- Fly now and pay later
- Trusted household brand
- Fast and reliable service

FLY THE WORLD FOR LESS

Great

Based on 2,907 reviews
See some of the reviews here.
TRUSTPILOT

## Worldwide Holidays



Presenting the most beautiful places of the world

**020 8429 2797**
**tours@carltonleisure.com**

Book now at
**www.carltonleisure.com**

Call us on
**020 8554 4200**

நியாயமான விலையில் விமானப்பயணச்சீட்டு விற்பதில் கீழ்வரும் விமான நிறுவனங்களிடம் நியமனம் பெற்ற ஒரே ஒரு தமிழ் முகவர்

Emirates, SriLankan, Etihad, Gulf Air, SAS, British Airways Appointed Operator, Alitalia, Air Canada, American Airlines, Air France, Air India, Finnair, Aer Lingus, Qantas, Qatar, Air China, Lufthansa, AirEuropa, Turkish Airlines, Austrian, Air Mauritius, United, Aeroflot, El Al, LATAM Airlines, Vietnam Airlines, Philippine Airlines, Saudia, UIA, KLM, Oman Air, Kuwait Airways, TAP Portugal, Aerolineas Argentinas, Aeromexico, ANA, Swiss, Brussels Airlines, Royal Brunei, Eastern, Royal Jordanian, Avianca, Eva Air, Ethiopian, MEA, South African Airways, Royal Air Maroc, Thai, China Eastern, Singapore Airlines, Iberia, Garuda Indonesia, Air New Zealand, China Airlines, Malaysia, Asiana Airlines, Korean Air, Icelandair, China Southern, Jet Airways, PIA

**HARROW** 299 RAVNERS LANE, HARROW, MIDDX, HA5 5EG — **020 8426 1266**

**EAST HAM** 5 STATION PARADE, EAST HAM, LONDON, E6 1JD — **020 8552 6125**

**ILFORD** 742 EASTERN AVENUE, ILFORD, ESSEX, IG2 7HU — **020 8554 4200**

**TOOTING** 1081 GARRATT LANE, TOOTING, LONDON, SW17 0LN — **020 8672 5757**

Emergency Travel 07957 450895



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *From 5yrs - 12 yrs*

10-20 minutes practice everyday
Weekly 2 hour Teaching & Learning sessions
Structured syllabus for every level - No repetition
Each level completes in 12 weeks
Simple level assessments

## *The pioneer and leading organisation in Abacus Mental Arithmetic education*

This unique educational approach, improves students from their very basic knowledge of numbers to the mastery of mental arithmetic.

### *Your Child's Intelligence*

Developing the potential of the LEFT & RIGHT brain to unleash y our Child's Intelligence

| LEFT Brain | RIGHT Brain |
|---|---|
| Logic | Creativity |
| Analysis | Imagination |
| Sequencing | Holistic Thinking |
| Language | Non-Verbal |
| Computation | Visualisation |

### *Program enhances:*

Image memory • Listening skills

Concentration • Self confidence • Speed & accuracy

**Centre 1:** Select Office, E12 6SA **Centre 2:** Beal High School, IG4 5LP

Select Academy

**07776 060 003**

***admin@selectacademy.eu***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ மரபு சிவாகமங்களை அடிப்படையாகச் கொண்டது.

திரு.ச.பத்மநாபன்
தலைவர்
சம்ஸ்கிருதத்துறை,
யாழ்ப்பாணப்பல்லைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
padamanaban73@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

சிவாகமங்களினை நிலைக்களனாகக் கொண்ட மரபு சைவமரபாகும். சைவம் என்றால் சிவசம்பந்தமுடையது. சிவாகமம் எனும் சாஸ்திரம் சிவனால் உபதேசிக்கப்பட சிறப்புடையது. சிவனது மூர்த்தபோதங்களுள் சதாசிவவடிவத்தின் ஈசானம், தற்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம் எனும் முகங்களிலிருந்து உபதேசிக்கப்பட்டவை. சிவகணங்களும் ருத்ரகணங்களுக்கும் உபதேசிக்கப்பட்டமையால் சிவபேதம் என்றும் ருத்ரபேதம் என்றும் பெயர் பெறுகின்ற சிவாகமங்கள் காமிகம் முதல் வாதுளமீறாக இருபத்தெட்டாகும். அவ்விதமே உபாகமங்கள் இருநூற்றேழு ஆகும். சிவாகமங்கள் சிவனது வழிபாட்டு மரபை சைவப்பண்பாட்டின் கூறுகள் அனைத்தூடாகவும் விளக்கி நிற்கின்றன. அந்நிலையில் சிவாகமங்கள் கலைக்களஞ்சியங்களாக விளங்கும் அதே வேளை சைவமரபின் அனைத்து கூறுகளுக்குமான பிரமாண நூலான சாஸ்திரங்களாக விளங்கும் அதேவேளை சைவமரபின் புதியபரிணாமங்களை எல்லைப்படுத்தவும் கட்டமைக்கவும் ஏற்புடைய தன்மையாக அமைகின்றன. சிவாகமங்களை மூல நூல்களாக சமகாலத்தில் சைவமரபு பெற்றுவரும் பரிணாமங்களை விவரண ஆய்வு மூலமாகவும் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

திறவுச் சொல் : சிவாகமம், சிவன், சைவமரபு, கிரியை பண்பாடு.

## அறிமுகம்

சிவசம்பந்தமுடையது சைவம் ஆகும். சைவமரபுகளின் தோற்றத்தினை சுப்ரபேதாகமம் சைவோபத்திவிதி படலம் வரிவுபடக் கூறுகின்றது. சைவசித்தாந்த மரபில் வைதீக சைவ மரபு சிறப்புடையதாகவும், அதனையே சித்தாந்த சைவம் எனவும் போற்றுகின்றது. சிவாகமங்களுக்கே சித்தாந்தம் எனும் பெயர் மரபு காணப்படினும், சைவசித்தாந்தம் எனும் எனும் ஒன்றினைந்த மரபினை காமிக ஆகமத்திலும், திருமந்திரத்திலும், பல்லவமன்னனது கல்வெட்டிலும் காணமுடிகின்றது. இம்மரபில் சைவசமயத்தின் சாஸ்திர நூல் எனும் உயர்வுடைய சிவாகமங்கள் சிவனது சதாசிவ வடிவத்திலிருந்து தோற்றம் பெற்றவையாகும். அந்நிலையில் சிவாகமங்களின் தந்திராவதாரபடலம் விரிவுபடக் கூறுகின்றன. சிவாகமங்களின் மரபில் சைவமய வாழ்வியலை ஒட்டிய வகையில் சரியை, கிரியை, யோகம், ஞான வித்தியாபாகங்கள் இடம்பெறுவதனையும் இங்கு சுட்டிக்காட்டவது சிறப்புடையதாகும். சிவாகம மரபில் மூல சிவாகமங்கள், உபாகமங்கள் எனும் மரபுகளும் அவைதம், உள்ளடக்கமும் சைவ வாழ்வில் அனைத்து கூறுகளையும் கூறிநிற்கும் சிறப்புடையனவாகும். இந்நிலையில் சிவாகமங்களின் பரந்த தன்மையையும் அவை திருக்கோயிலை மையப்படுத்திக் கூறும் சைவத் திருக்கோயில் மரபு பற்றியும் கிரியை, யோக, ஞான மரபுகள் பற்றியும் நோக்குவது பொருத்தமுடையதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிவாகமங்கள்**

சைவமரபில் வேதங்கள் பொது நூல் என்றும் சிவாகமம் சிறப்பு நூல் என்றும் போற்றும் தன்மையதாகும். சிவாகமங்கள் மூலசிவாகமங்கள், உபாகமங்கள் எனும் பாகுபாடுடையனவாகும். சிவனது அருவடிவமாகிய சதாசிவ மூர்த்தியின் சத்யோஜாதம் வாமதேவம், அகோரம், தற்புருஷம், ஈசானம் எனும் ஐந்து முகங்களிலிருந்தும் சிவகணங்களுக்கும், ருத்ரகணங்களுக்கும் உபதேசிக்கப்பட்டதாகும். அவையாவன காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அஜிதம், தீப்தம், சூக்ஷ்மம், ஸஹஸ்ரம், அம்சுமான், சுப்ரபேதம், விஜயம், நிஸ்வாசம், ஸ்வாயம்புவம், ஆக்னேயம், வீரம், ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகபிம்பம், புரோத்கீதம், லலிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேஸ்வரம், கிரணம், வாதுளம் என இருபத்தெட்டாகும். இவற்றுள் காமிகம் முதல் சுப்பிரபேதம் வரையான பத்தும் சிவபேதம் என்றும் விஜயம் முதல் வாதுளமீறான பதினெட்டும் ருத்ரபேதம் என்னும் பெயர் பெறுகின்றன. இம்மரபுகளை சிவாகமங்களின் தந்திரவதார விதிபடலம் விரிவுபடக் கூறுகின்றது. இம்மரபில் பூர்வகாரணாகமம், மகுடாகமம் ஆகியன உபாகமங்கள் 207ன் விரிவுகளை தெளிவுபடக் கூறுகின்றன.

சிவாகம மரபில் சிறப்பாக கிரியை மரபுகளே சிறப்புடையவை என கருதப்படுவது மரபாக இருந்தாலும் சிவாகம மரபில் திருக்கோயில் சார்ந்த அமைப்பு, கிராம, நகர அமைவு, திருவுருவங்களின் வகைகள், அமைப்பு லக்ஷணவிதி என சிவாலயம் சார்ந்த மரபுகள் அனைத்தையும், விரிவுபடக் கூறுகின்றன. இந்நிலையில் சிவாகமங்கள் கலைக் களஞ்சியங்களாக விளங்கும் சிறப்பும் தனித்துவமும் உடையவையாகும்.

**சிவாகமங்களின் உள்ளடக்கம்**

சிவாகமங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம்/ வித்தியா எனும் நான்கு பாதங்களை உள்ளடக்கியதாகும். சரியா பாதத்தில் சைவசமய ஆசாரங்கள் முதல் நாளாந்த வாழ்வியல் பற்றியும், அவற்றிற்கான லக்ஷணங்கள் பற்றியும் கூறி நிற்கின்றன. கிரியா பாதத்தில் கர்ஷணம், பிரதிஷ்டை, உற்சவம், பிராயசித்தம் எனும் அம்சங்கள் சிவாலயங்களை மையமாகக் கொண்டு பேசப்படுகின்றன. யோகபாதத்தில் அஷ்டாங்க யோகமுறைமையும் ஷடங்க யோகமுறைமையும் பேசப்படுகின்றன. அவை சிவயோகம் எனும் சிறப்புடையவை. ஞானபாதத்தில் முப்பொருள் உண்மை பேசப்படுகின்றது. அத்துடன் மோக்ஷத்திற்கான உபாயங்களும் கூறப்படுகின்றன. இத்தகைய தன்மையில் சிவாகமங்கள் சைவ வாழ்வியல் பற்றியும், சைவ வாழ்வியற் தத்துவம் பற்றியும் விரிவுபடக் கூறுகின்றன.

## சைவமரபின் பரந்த தன்மை

சைவமரபு விந்தியமலைக்கு தெற்காக விளங்கும் பிரதேசத்திலேயே நிலை கொண்டது எனும் கருத்து சுப்ரபேதாகமத்தில் பேசப்படுகின்றது. இம்மரபினை அடியொற்றியே,

'தென்னாருடைய சிவனே போற்றி'

எனக் கூறி இருக்கலாம். இருப்பினும், காஷ்மீர தேசத்தில் மலர்ந்த சிவாகம மரபுகளும், சைவசித்தாந்த மரபுகளும் தென்னிந்தியாவிலேயே நிலை கொண்டன எனலாம். மிக நீண்ட பாரம்பரியத்தில் வைதிகமரபும், இதிகாசபுராணமரபுகளும் பல்வேறுபட்ட சமய ஒழுகலாறுகளும் இணைந்ததன்மையில் சைவ சமயத்தின் தனித்துவம் பல்வேறு மாற்றங்களையும் மாறுதல்களையும் பெற்றதோடு புதிய புதிய பரிணாமங்களையும் எதிர்கொள்ளவும் தலைப்படுகின்றது. இந்நிலையில் தற்காலத்தில் இதனை சிந்தித்து அதனை இனங்கண்டு கொள்வது காலத்தின் தேவையாக விளங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சைவத்தின் மேன்மை**

சிவாகமமரபில் தனித்துவம் பெறும் தெய்வ வடிவம் சிவவடிவம் ஆகும். சிவனது மரபில் சிவாலயங்கள் கலைத்துவத்துடனும், விதிமுறைப்படியும் அமைய வேண்டிய விதிமுறைகளை சிவாகம விதிகள் நன்கு வலியுறுத்திக் கூறுகின்றன. இந்நிலையில் சிவாலயம், சிவால வழிபாடு, சிவாலய நித்திய நைமித்தியக்கிரியைகள், சிவத்தியானம், சிவயோகம், சிவஞானம் என சைவம் சார்ந்த மர பல ஒன்றிணைகின்றன. அந்நிலையில் சிவாலயங்களே முக்கியத்துவமுடையனவாக மிளர்கின்றன.

**சிவாலயம் -சிறப்பும் தனித்துவமும்**

சிவாலயங்கள் எவ்வாறு அமையத்தக்கன என்றும், சிவனது பரிவாரங்கள் மற்றும் பூசைமரபுகள், போன்ற இன்னோரன்ன அம்சங்கள் சிவாகமங்களில் பேசப்படுகின்றன. அவ் வகையில் பரிவாரத் தெய்வங்களின் விரிவும் தனித்துவம் பெறுகின்றன. சிவாகமரபில் சிவனை விடுத்து சக்தி, விநாயகர், சுப்பிரமணியர், விஷ்ணு, வைரவர் என பல்வேறு மரபுகள் விரிவு பெற்றாலும் அவை எல்லைப்படுத்தப்பட்டனவாய் அமைந்தன. அத்தகைய மரபுகளை மீறி சிவாலயங்களை நிகர்த்தது ஏனைய தெய்வங்கள் வளர்ச்சி பெறவும் தலைப்பட்டன. அந்நிலையில் சிவாலயம் எனும் தனித்துவமும் சிறப்பும் மரபு குன்றவும் மாற்றம் பெறவும் தலைப்பட்டன.

**சைவத்தின் புதிய பரிணாமம்**

சைவ சமயம் சிவாகம மரபுகளை நிலைக்கலனாகக் கொண்டது. அந்நிலையில் புராண மரபுகளுடன் இணைந்த பண்புகள் பல சிவாகம மரபுகளாக்கப்படும் தன்மை பெறலாயின.

அஷ்டப்பிரகரணத்தில் மோக்ஷகாரிகை 'சிவாகம சாஸ்திரம் எனும் தனிதத்துவத்தில் அவை பிற சமய மரபுகளைக் கூறாத சிறப்பும் அதே வேளை பிற சமய மரபுகளைக் ஏற்காத மரபும் காணப்படுகின்றது'. எனும் கருத்தில் அண்மைக்கால புதிய பரிணாம மரபில் சிவனது உயர்ந்த தன்மைகள் புதிய மரபுக்கு இட்டுச் செல்லப்படுவது கவனத்தில் கொள்ளத்தக்கதாகின்றது.

சிவன் ஏனைய தெய்வங்களுக்கு பரிவாரமகும் அதே வேளை சிவாகம மரபில் சிறு தெய்வங்களும், ஏனைய நெறிமுறைகளுடைய தெய்வங்களும் பெரும் தெய்வமாகும் மரபுகள் காணப்படுவதோடு புராணமரபில் உயர்வு பெற்ற விரத அனுஷ்டான மரபுகள் ஆலயத்தை மையமாகக் கொண்ட புதிய பரிணாமமும், சிவனடியார்களையும் விடுத்து மார்க்கதர்சிகளாக விளங்குவோர் வழிபடத்தக்க தன்மையில் மாறிவரும் வழிபாட்டு முறைகளும் சைவ சமயம் சார்ந்த புதிய பரிணாமத்தை திசை திருப்புவதாக அமைகின்றது.

**நிறைவுரை**

சைவமும் சிவாகமமரபும் இன்று உலகளாவிய ரீதியில் பரந்த செல்வாக்கைப் பெற்று வருவது கண்கூடான உண்மையாகின்றது. மேலும் சைவ சித்தாந்த மரபும் பரவிவருகின்றது. இந்நிலையில் சிவ வழிபாட்டு மரபானது பல்வேறுபட்ட புதிய பரிணாமங்களைப் பெற்று சிறு தெய்வங்களாகவும் கிராமிய மரபுடையதும் விளங்கியவை இன்று பெருந்தெய்வமாகிய சிவவழிபாட்டிற்கு நிகராக வழிபடப் பெறும் தன் தன்மைக்குரியதாகின்றது. இவை சைவத்தின் தனித்துவத்தையும், மேன்மையையும், உயர்வையும் சிதைவடையச் செய்யும் புதிய பரிணாமங்களாகும். இவ் வகையில் சைவத்தின் சைவவாழ்வியலையும், சிவவழிபாட்டு மரபுகளையும் பண்டைய மரபுவழுவாது சிவாகம மரபின் படி வழிபட்டு பயன்பெறுவது காலத்தினால் சிந்திக்கத்தக்க மிகப் பெரும் சேவையாக அமைகின்றது.

'மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை நூல்கள்

01. மூலநூல்கள்

1) வடமொழி மூலநூல்கள்

1. **காரணாகமம்** :- (1921), பூர்வபாகம், 1ம் பாகம், மயிலை அழகப்படுதலியார் (பதி.), சிவஞானபோத யந்திரசாலை, சிந்தாரிப்பேட்டை, சென்னை. (கிரந்தவிபி)
2. (1927), உத்தரபாகம், 2ம் பாகம், மயிலை அழகப்பதலியார் (பதி.),சிவஞானபோத யந்திரசாலை, சிந்தாரிப்பேட்டை, சென்னை. (கிரந்தலிபி)
3. **காமிகாகமம்:** 1978) (பூர்வபாகம்), ஸ்ரீ சுவாமி நாத சிவாச்சாரியார் (பதி) தென்னிந்திரய அர்ச்சகர் சங்கம், சென்னை. (தேவநாகரி)
4. (1988), (உத்தரபாகம்), ஸ்ரீசுவாமிஜநாதசிவாச்சாரியார் (பதி), தென்னிந்திய அர்ச்சகர் சங்கம், சென்னை. (தேவநாகரி)
5. **வீராகமம்** (N.D), The orcentel research Institute University of masor (தேவநாகரி) Disital library)
6. **வாதுளாகமம்** (1921), மயிலை அழகப்பமுதலியார் (பதி.), சிவஞானபோத யந்திரயந்திரசாலை, சிந்தாரிப் பேட்டை, சென்னை( கிரந்தலிபி)
7. **சுப்ரபேதாகமம்**:- ((1907), மயிலை அழகப்பமுதலியார் (பதி.), சிவஞானபோத யந்திரசாலை, சிந்தாரிப்பேட்டை, சென்னை. (கிரந்தரிபி).
8. **மகுடாகமம்** (1977), பூர்வபாகம், சி.சுவாமிநாதசிவாச்சாரியர் (பதி.) தென்னிந்திய அர்ச்சகர் சங்கம், சென்னை (கிரந்தலிபி).
9. **ருத்ரயாமளம்** (ND), சரஸ்வீதபதிப்பகம், கல்கத்தா, (தேவநாகரி)
10. **சார்த்தத்தரிசதி காலோத்தராகமம்**, (1979), பட்டராமகண்டரது உரையுடன், N.R. Bhatt. (பதி.), பிரெஞ்சு இந்தியவியல் நிறுவனம், பாண்டிச்சேரி (தேவநாகரி)
11. **சிந்த்யாகமம்** (2006) (கையெழுத்துப்பிரதி), பிரெஞ்சு இந்தியவியல் நிறுவனம், பாண்டிச்சேரி, (Digital library) (தேவநாகரி)
12. **ரௌரவாகமம்** (1961) பாகம் I, N.R. Bhctt (பதி.) பிரெஞ்சு இந்தியவியல் நிறுவனம், பாணிடிச்சேரி.
13. **அஷ்டபிரகரணம்** (1988), Pt.Srivrajavalabha Dvivedi (Ed.) யோகதந்திகிரந்தமாலா – 12, வாரணாசி. (தேவநாகரி)
14. **ஸ்ரீமத்கிரணாகம மஹாதந்திரம்**, (1932) சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கம், தேவகோட்டை (கிரந்தலிபி)
15. **சிவாகமபரிபாஷாமஞ்ஜரி,** (1988), பிரெஞ்சு இந்தியவியகி நிறுவனம், பாண்டிச்சேரி (தேவநாகரி)
16. **சைவசித்தாந்த பரிபாஷை** (1928), சிவாமசித்தாந்த பரிபாலன சங்கம், தேவகோட்டை (கிரந்தலிபி)
17. **அபிக்ஞானசாகுந்தலம்,** (1974)M.R. Kale, (பதி.), மோதிலால் பெனர்சிதாஸ் லிமிடெட், நியூதில்லி.
18. **சௌந்தர்யலஹரீ,** (1944), ஆதிசங்கரர், தேதியூர் சுப்பிரமணியசாஸ்திரிகள் (பதி.), கிரி பிரஸ், சென்னை

தமிழ்

1. **திருமந்திரம்**, (1993), திருமூலர், மௌனாச்சிரமம், கொழும்பு.
2. **திருமந்திரம்** (1957) பாகம், 1,2, திரு இராமநாதபிள்ளை உரையுடன் சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம். சென்னை
3. **திருமந்திரம்,** (1933, ம.பாலசுப்பிரமணியமுதலியார் (பதி) சைவசித்தாந்த மகாசமாஜம், சென்னை.
4. **திருமந்திரம்**, (2003), காசிமடம், திருபனந்தாள் ஆதீனம் வெளியீடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
Love is God

**LONDON SIVAN KOVIL TRUST**

**இலண்டன் சிவன் கோயில் அறக்கட்டளை**

Charity Registration No. 1051516
4a, Clarendon Rise, Lewisham, London SE13 5ES
Tel: 020 8318 9844 Fax: 020 8318 2108
www.londonsivankovil.org.uk e-mail: sivan.kovil@yahoo.co.uk

**Board of Trustees:**

**President:**
Dr. T. Sriskandarajah

**Vice President:**
Dr. S. Somasegaram

**Secretary:**
Dr. S.Rajasundaram

**Asst Secretary:**
Mr. V. Krishnanandharajah

**Treasurer:**
Mr. S. Sukumar

**Asst Treasurer:**
Mrs. V. Gengatharan

**Building & Finance. Sub Committee Chairman**
Dr. S.Sivathasan

**Community Service. Sub Committee Chairman**
Mr. T. Arulthas

**Cultural Activity Sub Committee Chairman**
Mr. S.Yogarajah

K V. Kanesamoorthy
Dr.(Mrs.) V.M.Karunakaran
Mr. S.Parameswaran
Dr. S.Navaratnam
Mr. N. Sivasubramaniam
Mrs. R.Sritharan
Mr. S. Suthaharan

**Bankers:**
1. Barclays Bank plc
Dartford Branch
2. Lloyds Bank plc
Billericay Branch
3. Natwest
Kingston Upon Thames

**Auditors:**
B.W.Chatten
Brentwood

**Solicitors:**
Nathan(KP) & Co

உ
சிவமயம்

## வாழ்க! வளர்க!!

நாம் புலம் பெயர்ந்து அன்னிய நாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் எமது பாரம்பரியங்களாகிய சமயம், மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றைப் பேணிப்பாதுகாக்க வேண்டிய மிகமுக்கியமான பொறுப்பு எமக்கு உண்டு. அதுமட்டுமன்றி எமது வருங்காலச் சந்ததியினருக்கு அதனை விளங்க வைத்து அவர்களை இவற்றைப் பின்பற்றி வாழவழி வகுக்க வேண்டியதோர் கடமையும் உண்டு. இந்த விடயங்களை நடை முறைப்படுத்துவது சுலபமான விடயமல்ல. ஆனால் இந்நாட்டில் சமயத்திற்கும், சமூகத்திற்கும் தொண்டாற்றி இன்று நாற்பதாவது வருஷ நிறைவினைப் பெற்றிருக்கும் சைவ முன்னேற்றச் சங்கம் (UK) இவ்விடயத்தில் சாதனைபடைத்துள்ளது என்பதனை நாம் பெருமையோடும், மகிழ்ச்சியோடும் கூறிக்கொள்கிறோம். இறைவனது திருவருளும், சங்க அங்கத்தவர்களது பேருக்கமும், மக்களது ஆதரவும் நிரம்பப்பெற்று சிறப்புடன் இயங்கிக் கொண்டிருக்கும் இச்சங்கம் தனது நாற்பதாவது ஆண்டு நிறைவினை 28.10.2017 சனிக்கிழமையன்று நடாத்துவதையிட்டு நாம்மிக்க மகிழ்ச்சியடைகிறோம். மேலும் இச்சங்கமானது பன்முகப்பட்ட துறைகளில் மேலோங்கிச் சென்று தமிழ் உலகிற்கு தொண்டாற்ற வேண்டும் எனக்கூறி யாவற்றிற்கும் திருவருள் துணை நிற்க வேண்டும் என இலண்டன் லூயிஷம் சிவபுரம் என்னும் புண்ணிய ஷேத்திரத்தில் கோயில் கொண்டருளி திருவருள்பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீஅபீதகுஜாம்பாள் சமேத ஸ்ரீஅருணாசலேஸ்வரப் பெருமானது திருத்தாளினை வணங்கி எமது மனமார்ந்த நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்

இங்ஙனம்

**ஆலய பரிபாலன சபை**
**சிவாச்சாரியார்கள்**
**சைவக் குருக்கள்**
**ஓதுவார் மூர்த்தி**

**OUR SERVICES: Temple Activities - Meditation - Library - Community Hall for Social Activities, Weddings and Cultural functions - Education for Language, Music & Culture - Funeral Religious Services.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KATPAKAPATHY



# SHREE KARPHAHA VINAYAGAR TRUST (TEMPLE)

*Charity No: 1092252*
**2 - 4, Bedford Road, Walthamstow, London E17 4PX**
Tel: 020 8527 3819 | Web: katpakapathy.com | Email: katpakapathy@gmail.com

**Board of Trustees:**

**President**
Mr M. Gopalakrishnan

**Secretary**
Mr.C.P.Thiagarajah

**Asst. Secretary**
Mr.S.Rajeeve

**Treasurer**

**Asst. Treasurer**
Mrs A. Sakthivel

நாம் கல்வியின் காரணமாகவோ அல்லது தொழில் காரணமாகவோ நாட்டுச் சூழல் காரணமாகவோ புலம் பெயர்ந்து வெளி நாடுகளில் வந்துள்ளோம்.எமது இரண்டாம் மூன்றாம் தலைமுறையினர் இங்கு வெளிநாட்டுச் சூழலில் வளரத் தொடங்குகின்றனர். இந்நிலையில் எமது மூல பண்பாட்டு மரபுகளை நாம் கைவிடாது காப்பாற்ற வேண்டிய அவசியத்தை ஆரம்ப காலத்தில் வந்த பலர் சிந்தித்துள்ளனர். அதற்கான பணிகளை தொடக்கினர்.ஆலயங்கள் அமைத்தல் சைவ சங்கங்கள் நிறுவுதல்.தமிழ் பாடசாலைகள் போன்ற பல சமூக முன்னெடுப்பு ஸ்தாபனங்கள் முளை விட்டன.இன்று பல பெரிய விருட்சமாக வளர்ந்து வந்துள்ளன.

புலம் பெயர் நாட்டில் எமது சைவத்தையும் தமிழையும் வளர்க்க ஆலயங்கள் சமயம் தமிழ் சார்ந்த நிறுவனங்கள் பெரும் பங்களிப்பு செய்கின்றன.இவற்றுள் சிகரம் வைத்தால் போல் பல இடர்ப்பாடுகளுக்கு மத்தியிலும் சைவ முன்னேற சங்கம் தமது பணிகளை ஆரம்பித்து நாற்பது ஆண்டுகளை நிறைவேற்றி உள்ள நிலையில் பல வழிகளிலும் சமுதாயத்திற்கு உதவி உள்ளமை இங்கு குறிப்பிட வேண்டியதாகும்.கலசம் என்ற சஞ்சிகை மூலம் சமய அறிவுகளை மக்களுக்கு பரிமாறிக் கொண்டு வருகிறார்கள்.இது முதன்மையானது.

மற்றும் நால்வர் பாடசாலைநடத்தி தமிழ் வளர்த்தல். இளம் கலைஞர்களை ஊக்குவித்தல்.மூத்தோர் கருத்தரங்கு .சைவ சித்தாந்த வகுப்பு.இளையோருக்கான சைவ சமய வகுப்புகள்.அத்துடன் சிதம்பர நடராஜ ஆலயப் பணிகள் மூலம் வேத சிவாகம மரபு பேணுதல்.எமது சமய இலக்கிய பொக்கிஷமாகிய பெரிய புராணத்தை பல ஆலயங்களில் பல அறிஞர்கள் மூலம் உரை நிகழ்த்தி வந்துள்ளமை மிகவும் பாராட்டத்தக்க வேண்டியதாகும்.நாயன்மார்களுடைய அரும் பெரும் அருட் பணிகள் வரலாற்றை எத்தனை முறை கேட்டாலும்இறை அருள் நமக்கு கிடைக்கிறது என்ற தத்துவத்தை வெளிப்படுத்திய பெருமை சைவ முன்னேற்ற சங்கத்தைச் சாரும்.

அத்துடன் ஆலயங்கள் தர்மபணியை செய்ய வேண்டும் சமய நிறுவனங்கள் சமய வழிபாடு மட்டுமன்றி சமூகத்திற்கு எவ்வாறு உதவலாம் என்ற வகையில் சைவ முன்னேற்ற சங்கமும் தாயகத்தில் ஆதரவு அற்றவர்களுக்கு தமது நிதி உதவி செய்து வரும் அறப்பணியும் பாராட்டத் தக்கது.

இவ்வருடம் இலங்கையில் நாற்பது வசதியற்ற தம்பதியினருக்கு நாற்பது திருமணங்கள் நிறைவேற்றிய மிகப் பெரும் புண்ணிய கைங்கர்யத்தை செய்துள்ளனர்.இது இவர்களது வரலாற்று சாதனை.

இவர்களது மற்றுமொரு பெருஞ் சேவை சைவமக்கள் போற்ற வேண்டியதாகும்.இறந்த ஒருவருக்கான தகனக் கிரியைகளை பொறுப்பெடுத்து செய்து வருவது.அதற்குரிய சைவக் குருக்களை காலம் தோறும் இலங்கையில் இருந்து வரவழைத்து அந்திமக் கிரியைகளை செய்து வருகின்றமை.அதற்கான ஒரு இடத்தை கடற்கரையில் எடுத்து முறைப்படி இறந்த ஆத்மா நற் கதி அடைய அவர்கள் ஆற்றும் சேவை அளப்பரியது.

இவர்கள் பணி பல பல கோணங்களில் சைவத் தமிழ் மக்களுக்கு சென்று வருகிறது.இளையோர் மூத்தோர் இளம் கலைஞர் ஆன்மீகச் சான்றோர் ஈழத்தில் அல்லலுறும் மக்கள்.மலர் வெளியீடு அந்திமக் கிரியைகள் போன்ற சமூக நலத்தின் அத்தனை உயிர் நாடிகளையும் பராமரித்து எமது சைவ சமூகத்தின் ஆணிவேராக உள்ள சைவ முன்னேற்ற சங்கத்தை நாமும் கை கொடுத்து உதவுவோம்

சீரிய பணிகள் பல சிறப்புடன் ஆற்றி சைவமும் தமிழும்
நேரிய முறையில் நிறைந்து பரவிட நித்தமும் நற் சமூக
காரியம் கடல் கடந்தும் காத்து வரும் சைவ முன்னேற்ற சங்கம்
வாரி வழங்கும் பணிகளால் வையகம் முழுதும் வாழி வாழி

**ஆலய சிவாச்சார்யர்கள்**
**நிர்வாகத்தினர்**
**கற்பகபதி கற்பக விநாயகர் கோவில்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ முன்னேற்றச் சங்கம் (UK) 40ஆவது ஆட்சிக் குழு உறுப்பினர்கள்
## SAIVA MUNNETTA SANGAM (UK) 40TH YEAR COMMITTEE MEMBERS



வ. இ லோகநாதன்   வி.செ. வாமனானந்தன்   தி ஆதீசன்   சிவ தம்பு   அ. குணராசா   ச. சந்திரகோபால்

ஜெகேந்திரபோஸ் – சு.இரத்தினராசா – மா. இரவிந்திரதாஸ் – வை. சிவனருட்செல்வர்
ச. குகராஜா – வசந்தா மகாதேவன் – புவனேஸ்வரி சபாரட்ணம் – விஜி கனகேந்திரன்

சரோஜா கனகசபேசன் – க. பாலசிங்கம் – வி. நாகரட்ணம் – கு. பரமேஸ்வரன் – மா. இந்துசேகரன்
சதாசிவம் ஆனந்தத்தியாகர் – சோ. நிரஞ்சன் – கு. சிதம்பரப்பிள்ளை – த. இரவீந்திரமோகன் – வ.இ. இராமநாதன் – கா. சூரியகுமார்

*உற்றோர் எல்லாம் உறவினர் அல்லர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2002 – 2003

26th Year Management Committee

President &Trustee
Mr V R Ramanathan

Vice-President & Trustee
Mr T Kanagasabai

Hon. General Secretary & Trustee
Mr S Anandathiyagar

Hon. Treasurer & Trustee
Mr S R Pasupathy

Trustees
Dr V Balasegaram
Mr W Nagaratnam
Mr V Sellathurai
Mr C Sithamparapillai
Mr N Sivarasan

School Secretary
Mrs P Uthamakunan

Publication Secretary
Mr Siva Asokan

Religious Secretary
Mr R Pathmanathan

Building Project Secretary
Mr G Paramesvaran

Social Secretary
Mr V C Vamananthan

Membership Secretary
Mr T Jeganathan

Assistant Treasurers
Mr J Gunasegaram
Mrs B Linganandan

Committee Members
Mr Saravanan Anandathiyagar
Mr S Atputhananthan
Mrs V Kanagenthiran
Mr M Natkunathayalan
Mr D Rabindramohan
Mr K Sivagurunathapillai
Miss K Subramaniam
Mr S Thamboo

## 2003 – 2004

27th Year Management Committee

President &Trustee
Mr T Kanagasabai

Vice-President & Trustee
Mr S R Pasupathy

Hon. General Secretary & Trustee
Mr S Anandathiyagar

Hon. Treasurer & Trustee
Mr J Gunasegaram

Trustees
Dr V Balasegaram
Mr W Nagaratnam
Mr V R Ramanathan
Mr V Sellathurai
Mr C Sithamparapillai

School Secretary
Mrs P Uthamakunan

Publication Secretary
Mr S Thamboo

Religious Secretary
Mr Saravanan Anandathiyagar

Building Project Secretary
Mr G Paramesvaran

Social Secretary
Mr V C Vamananthan

Membership Secretary
Miss K Subramaniam

Assistant Treasurers
Mr V R Loganathan
Mr D Rabindramohan

Committee Members
Mr S Atputhananthan
Mrs V Kanagenthiran
Mr M Natkunathayalan
Mrs B Perinpanathan
Mr M Ravendradas
Mr K Sivagurunathapillai

## 2004 – 2005

28th Year Management Committee

Vice Patrons
Dr. (Mrs) Indra Siva-yoham
President &Trustee
Mr S R Pasupathy

Vice-President & Trustee
Mr S Anandathiyagar

Hon. General Secretary & Trustee
Mr V R Ramanathan

Hon. Treasurer & Trustee
Mr W Nagaratnam

Trustees
Dr V Balasegaram
Mr T Kanagasabai
Mr V Sellathurai
Mr C Sithamparapillai
Mrs P Uthamakunan

School Secretary
Miss K Subramaniam

Publication Secretary
Mr S Thamboo

Religious Secretary
Mr D Rabindramohan

Building Project Secretary
Mr G Paramesvaran

Social Secretary
Mr V C Vamananthan

Examination Secretary
Mr R Pathmanathan

Membership Secretary
Mr Saravanan Anandathiyagar

Assistant Treasurers
Mr S Balasingam
Mr N Sivarasan

Committee Members
Mr S Atputhananthan
Mrs V Kanagenthiran
Mr V R Loganathan
Mr M Natkunathayalan
Mrs B Perinpanathan
Mr M Ravendradas
Mr K Sivagurunathapillai

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2005 – 2006

29th Year Management Committee

Vice Patrons
Dr. (Mrs) Indra Siva-yoham
President &Trustee
Mr S Balasingam

Vice-President & Trustee
Mr V C Vamananathan

Hon. General Secretary & Trustee
Mr S Anandathiyagar

Hon. Treasurer & Trustee
Mr W Nagaratnam

Trustees
Mr V R Loganathan
Dr N Navaneetharajah
Mr S R Pasupathy
Mr V R Ramanathan
Mr C Sithamparapillai

Building Project Secretary
Mr G Paramesvaran

Examination Secretary
Mr K Sivagurunathapillai

Membership Secretary
Mr T Kanagasabai

Publication Secretary
Mr S Thamboo

Religious Secretary
Mr D Rabindramohan

Social Secretary
Mr R Nadarajah

School Secretary
Mrs K Jegendirabose

Assistant Treasurers
Mr N Sivarasan
Mrs P Uthamakunan

Committee Members
Mrs S Ahtheesan
Mr S Atputhananthan
Mrs V Kanagenthiran
Mr V Loganathan
Mr K Mageswaran
Mr M Ravendradas
Mr V Sellathurai

## 2006 – 2007

30th Year Management Committee

Vice Patrons
Dr. (Mrs) Indra Siva-yoham
Dr. V Balasegaram
Mr R Pathmanathan
President &Trusttee
Mr S Balasingam

Vice-President & Trustee
Mr V C Vamananathan

Hon. General Secretary & Trustee
Mr S Anandathiyagar

Hon. Treasurer & Trustee
Mr V R Ramanathan

Trustees
Mr V R Loganathan
Mr W Nagaratnam
Mr S R Pasupathy
Dr N Navaneetharajah
Mr C Sithamparapillai

Building Project Secretary
Mr G Paramesvaran

Examination Secretary
Mr K Sivagurunathapillai

Membership Secretary
Mr T Kanagasabai

Publication Secretary
Mr S Thamboo

Religious Secretary
Mr D Rabindramohan

Social Secretary
Mrs V Kanagenthiran

School Secretary
Mrs P Uthamakunan

Assistant Treasurers
Mrs K Jegendirabose
Mr N Sivarasan

Committee Members
Mrs S Ahtheesan
Mr V Loganathan
Mr R Nadarajah
Mr M S Pathmanathan
Mr M Ravendradas
Mr V Sellathurai
Mr P Vilventhraraja

## 2007 – 2008

31st Year Management Committee

Vice Patrons
Dr. (Mrs) Indra Siva-yoham
Dr. V Balasegaram
Mr R Pathmanathan
President &Trustee
Mr S Balasingam

Vice-President & Trustee
Mr V C Vamananathan

Hon. General Secretary & Trustee
Mr D Rabindramohan

Hon. Treasurer & Trustee
Mr V R Ramanathan

Trustees
Mr W Nagaratnam
Mr G Paramesvaran
Mr S R Pasupathy
Mr C Sithamparapillai
Mrs P Uthamakunan

Building Project Secretary
Mr M S Pathmanathan

Examination Secretary
Mr K Sivagurunathapillai

Membership Secretary
Mr V R Loganathan

Publication Secretary
Mr S Thamboo

Religious Secretary
Mr S Anandathiyagar

Social Secretary
Mrs V Kanagenthiran

School Secretary
Mrs S Ahtheesan

Assistant Treasurers
Mr V Jegendirabose
Mr R Nadarajah

Committee Members
Mrs B Kanagasabesan
Mrs P Nadarajah
Mr S Niranjan
Mr M Ravendradas
Mr I T Sampanthan
Mr V Sellathurai
Mr P Vilventhraraja

அடினும் ஆவின் பால் தன் சுவை குன்றாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2008 – 2009

32nd Year Management Committee

Vice- Patrons
Dr (Mrs) Indra Siva-yoham
Dr V Balasegaram
Mr R Pathmanathan

President &Trustee
Mr S Balasingam

Vice-President & Trustee
Mr V C Vamanananthan

Hon. General Secretary & Trustee
Mr D Rabindramohan

Hon. Treasurer & Trustee
Mr V R Ramanathan

Trustees
Mr W Nagaratnam
Mr G Paramesvaran
Mr S R Pasupathy
Mr C Sithamparapillai
Mrs P Uthamakunan

Building Project Secretary
Mr V Jegendirabose

Examination Secretary
Mr K Sivagurunathapillai

Membership Secretary
Mr V R Loganathan

Publication Secretary
Mr S Thamboo

Religious Secretary
Mr M Ravendradas

Social Secretary
Mr P Vilventhraraja

School Secretary
Mrs S Ahtheesan

Assistant Treasurers
Mr R Nadarajah
Mr S Niranjan

Committee Members
Mr S Anandathiyagar
Mr K Jegatheeswaran
Mrs V Kanagenthiran
Mrs P Nadarajah
Mr I T Sampanthan
Mr V Sellathurai
Mr M Yasotharan

## 2009 – 2010

33rd Year Management Committee

Vice- Patrons
Dr (Mrs) Indra Siva-yoham
Dr V Balasegaram
Mr R Pathmanathan

President & Trustee
Mr V C Vamananathan

Vice-President & Trustee
Mr S Thamboo

Hon. General Secretary & Trustee
Mr D Rabindramohan

Hon. Treasurer & Trustee
Mr V R Ramanathan

Trustees
Mr S Balasingam
Mr W Nagaratnam
Mr G Paramesvaran
Mr C Sithamparapillai
Mrs P Uthamakunan

Building Project Secretary
Mr V Jegendirabose

Examination Secretary
Mr K Sivagurunathapillai

Membership Secretary
Mr S Anandathiyagar

Publication Secretary
Mr M Yasotharan

Religious Secretary
Mr M Ravendradas

Social Secretary
Mr P Vilventhraraja

School Secretary
Mr V R Loganathan

Assistant Treasurers
Mr R Sivanantharajah
Mr S Tharmarajah

Committee Members
Mr K Jegatheeswaran
Mrs P Nadarajah
Mr R Nadarajah
Mrs V Kanagenthiran
Mr I T Sampanthan
Mr V Sellathurai
Mr S Niranjan

## 2010 – 2011

34th Year Management Committee

Vice- Patrons
Dr (Mrs) Indra Siva-yoham
Dr V Balasegaram
Mr R Pathmanathan

President & Trustee
Mr V C Vamananathan

Vice-President & Trustee
Mr G Paramesvaran

Hony. General Secretary & Trustee
Mr D Rabindramohan

Hony. Treasurer & Trustee
Mr W Nagaratnam

Trustees
Mr S Balasingam
Mr S Niranjan
Mr V R Ramanathan
Mr I T Sampanthan
Mr C Sithamparapillai

Building Project Secretary
Mr V Jegendirabose

Examination Secretary
Mr K Sivagurunathapillai

Membership Secretary
Mr M Ravendradas

Publication Secretary
Mr V R Loganathan

Religious Secretary
Mr K Jegatheeswaran

Social Secretary
Mr P Viventhraraja

School Secretary
Mrs P Uthamakunan

Assistant Treasurers
Mr S Anandathiyagar
Mrs P Nadarajah

Committee Members
Mr A Cumarasamy
Mrs B Kanagasabesan
Mrs V Kanagenthiran
Mrs V Mahadevan
Mrs P Sabaratnam
Mr V Sivanarudchelvan
Mr M Yasotharan

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2011 – 2012

35th Year Management Committee

Vice- Patrons
Dr (Mrs) Indra Siva-yoham
Dr V Balasegaram
Mr R Pathmanathan
President & Trustee
Mr V C Vamananan̈than

Vice-President & Trustee
Mr G Paramesvaran

Hony. General Secretary & Trustee
Mr K Jegatheeswaran
Mr D Rabindramohan

Hony. Treasurer & Trustee
Mr W Nagaratnam

Trustees
Mr S Balasingam
Mr V R Loganathan
Mr S Niranjan
Mr C Sithamparapillai

Building Project Secretary
Mr M Yasotharan

Examination Secretary
Mr K Sivagurunathapillai

Membership Secretary
Mr V R Ramanathan

Publication Secretary
Mr I T Sampanthan

Religious Secretary
Mr S Anandathiyagar

Social Secretary
Mrs P Sabaratnam

School Secretary
Mr P Viventhraraja

Assistant Treasurers
Mr V Jegendirabose
Mr V Sivanarudchelvan

Committee Members
Mrs B Kanagasabesan
Mrs V Kanagenthiran
Mr S Kugarajah
Mrs P Nadarajah
Mr R Nadarajah
Mrs Sri Ponnuthurai
Mrs K Rajakulasooriyar

## 2012 – 2013

36th Year Management Committee

Vice- Patrons
Dr (Mrs) Indra Siva-yoham
Dr V Balasegaram
Mr R Pathmanathan
President &Trustee
Mr V C Vamananan̈than
Vice-President & Trustee
Mr G Paramesvaran

Hon. General Secretary & Trustee
Mr S Anandathiyagar

Hon. Treasurer & Trustee
Mr W Nagaratnam

Trustees
Mrs B Kanagasabesan
Mr V R Loganathan
Mr S Niranjan
Mr D Rabindramohan
Mr C Sithamparapillai

Building Project Secretary
Mr M Yasotharan

Examination Secretary
Mr K Sivagurunathapillai

Membership Secretary
Mr V R Ramanathan

Publication Secretary
Mr V Sivanarutchelvar

Religious Secretary
Mr M Ravindradas

Social Secretary
Mrs P Sabaratnam

School Secretary
Mr P Vilventhraraja

Assistant Treasurer
Mr R Nadarajah
Mr I T Sampanthan

Committee Members
Mr M Indusegaran
Mr V Jegendirabose
Mrs V Kanagenthiran
Mr S Kugarajah
Mrs V Mahadevan
Mrs P Nadarajah
Mrs Sri Ponnuthurai

## 2013 – 2014

37th Year Management Committee

Vice- Patrons
Dr (Mrs) Indra Siva-yoham
Dr V Balasegaram
Mr R Pathmanathan
President & Trustee
Mr S Anandathiyagar

Vice-President & Trustee
Mr D Rabindramohan

Hon. General Secretary & Trustee
Mr S Niranjan

Hon. Treasurer & Trustee
Mr V R Ramanathan

Trustees
Mr V R Loganathan
Mr W Nagaratnam
Mr G Paramesvaran
Mr C Sithamparapillai
Mr V C Vamananthan

Building Project Secretary
Mr S Balasingam

Examination Secretary
Mr V Jegendirabose

School Secretary
Mr S Kugarajah

Religious Secretary
Mr M Ravendradas

Social Secretary
Mrs P Sabaratnam

Publication Secretary
Mr V Sivanarutchelvar

Membership Secretary
Mr M Yasotharan

Assistant Treasurers
Mr M Indusegaran
Mr S Thamboo

Committee Members
Mrs A Gunarasa
Mrs B Kanagasabesan
Mrs V Kanagenthiran
Mrs V Mahadevan
Mrs P Nadarajah
Mr S R Pasupathy
Mrs Sri Ponnuthurai

அறைக்கிலும் சந்தனம் தன் மணம் மாறாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2014 – 2015

38th Year Management Committee

Vice- Patrons
Dr (Mrs) Indra Siva-yoham
Dr V Balasegaram
Mr R Pathmanathan

President & Trustee
Mr S Anandathiyagar

Vice-President & Trustee
Mr D Rabindramohan

Hony. General Secretary & Trustee
Mr M Indusegaran

Hony. Treasurer & Trustee
Mr S Niranjan

Hony. Deputy Gen. Secretary & Trus-tee
Mr V R Loganathan

Trustees
Mr S Balasingam
Mr W Nagaratnam
Mr S R Pasupathy
Mr V C Vamananathan

Building Project Secretary
Mr G Paramesvaran

Examination Secretary
Mr V Jegendirabose

Membership Secretary
Mr C Sithamparapillai

Overseas Project Secretary
Mr V R Ramanathan

Publication Secretary
Mr V Sivanarudchelvan

Religious Secretary
Mr M Ravendradas

Social Secretary
Mrs P Sabaratnam

School Secretary
Mr S Kugarajah

Assistant Treasurers
Mr S Thamboo

Committee Members
Mrs B Kanagasabesan
Mrs V Kanagenthiran
Mrs V Mahadevan
Mrs Sri Ponnuthurai
Mr S.Ratnarajah
Mr S Subramaniyam
Mr M Yasotharan

## 2015 – 2016

39th Year Management Committee

Vice- Patrons
Dr (Mrs) Indra Siva-yoham
Dr V Balasegaram
Mr R Pathmanathan

President & Trustee
Mr S Anandathiyagar

Vice-President & Trustee
Mr D Rabindramohan

Hony. General Secretary & Trustee
Mr M Indusegaran

Hony. Treasurer & Trustee
Mr S Niranjan

Hony. Deputy Gen. Secretary & Trus-tee
Mr S Balasingam

Trustees
Mr W Nagaratnam
Mr V R Ramanathan
Mr C Sithamparapillai
Mr S Thamboo

Building Project Secretary
Mr G Paramesvaran

Examination Secretary
Mr V Jegendirabose

Membership Secretary
Mr S Ratnarajah

Overseas Project Secretary
Mr V C Vamananathan

Publication Secretary
Mr V Sivanarudchelvan

Religious Secretary
Mr M Ravindradas

School Secretary
Mr S Kugarajah

Social Secretary
Mrs P Sabaratnam

Assistant Treasurers
Mr V R Loganathan

Committee Members
Mrs S Ahtheesan
Mrs B Kanagasabesan
Mrs V Kanagenthiran
Mrs V Mahadevan
Mrs Sri Ponnuthurai
Mrs G Sooriyakumar

## 2016 – 2017

40th Year Management Committee

Vice- Patrons
Dr (Mrs) Indra Siva-yoham
Mr R Pathmanathan

President & Trustee
Mr S Anandathiyagar

Vice-President & Trustee
Mr D Rabindramohan

Hony. General Secretary & Trustee
Mr M Indusegaran

Hony. Treasurer & Trustee
Mr S Niranjan

Hony. Deputy Gen. Secretary & Trus-tee
Mr S Balasingam

Trustees
Mr W Nagaratnam
Mr V R Ramanathan
Mr C Sithamparapillai
Mr S Thamboo

Building Project Secretary
Mr G Paramesvaran

Examination Secretary
Mr V Jegendirabose

Membership Secretary
Mr S Ratnarajah

Overseas Project Secretary
Mr V C Vamananathan

Publication Secretary
Mr V Sivanarutchelvan

Religious Secretary
Mr S Kugarajah

School Secretary
Mrs S Ahtheesan

Social Secretary
Mrs B Kanagasabesan

Assistant Treasurers
Mrs G Sooriyakumar

Committee Members
Mrs S Chandragopal
Mrs A Gunarasa
Mrs V Kanagenthiran
Mr V R Loganathan
Mrs V Mahadevan
Mrs Sri Ponnuthurai
Mr M Ravendradas
Mrs P Sabaratnam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

# இங்கிலாந்துப் புலம்பெயர் தமிழ்மொழி தமிழிலக்கிய வளர்ச்சியில் சைவமுன்னேற்றச் சங்கத்தின் (ஐ.இ). பங்களிப்பு

முனைவர் பட்ட ஆய்வாளர் ரீற்றா பற்றிமாகரன்

சைவமுன்னேற்றச் சங்கம் (ஐ.இ) சிவப்பணியில் நாற்பதாவது ஆண்டினை நிறைவு செய்து நிற்கும் மகிழ்ச்சியான நேரத்தில் இங்கிலாந்துக்குப் புலம்பெயர்ந்த தமிழர்களின் தமிழ் மொழி தமிழ் இலக்கிய வளர்ச்சியில் ஆற்றியுள்ள பங்களிப்பை மிகச்சுருக்கமாக எடுத்து நோக்குவதே இச்சிறு ஆய்வின் நோக்காகவும் போக்காகவும் அமைகிறது. தமிழ்மொழிக்கும் தமிழிலக்கியத்திற்கும் சைவமுன்னேற்றச் சங்கம் இங்கிலாந்தில் ஆற்றிவரும் பணிகளை எல்லாம் முழுதுமாக எடுத்து நோக்கித் திறனுரைக்க இவ்விடம் போதியதல்ல என்பதினால் அதனுடைய தமிழ்மொழி தமிழிலக்கிய பணிகளின் பயன் குறித்த தத்துவார்த்த விளக்கமாகவே இவ்வாய்வு வளர்கிறது.

21.08. 1977 இல் இங்கிலாந்தில் இலங்கைச் சைவமுன்னேற்றச் சங்கத்தின் முதலாவது வெளிநாட்டுக் கிளையாக சைவமுன்னேற்றச் சங்க இங்கிலாந்துக் கிளை தொடங்கப் பெற்ற அங்குரார்ப்பணக் கூட்டத்திலேயே கிளை அமைப்பாளராகிய திரு வ.இ. இராமநாதன் அவர்கள் உரையாற்றுகையில் " சைவமுன்னேற்றச் சங்கத்தின் வெள்ளி விழா ஆண்டில் அச்சங்கத்தின் முன்னாள் அங்கத்தவர்களாகிய யாம், அதன் முதலாவது கிளையை இந்நாட்டில் இன்று ஆரம்பிப்பது மிகவும் பெருமைக்கும் மகிழ்ச்சிக்குரிய விடயம். இக்கிளை இந்நாட்டில் தாய்ச்சங்கத்தின் நோக்கங்களை இயன்றளவு செயற்படுத்துதல், தாய்ச்சங்கத்தின் ஆக்கபூர்வமான பணிகளுக்கு பொருளாதார வழியில் உதவி செய்தல் என்பனவற்றை முக்கிய நோக்கங்களாக கொண்டு இயங்கும். இக்கிளை ஆரம்ப காலத்தில் மிகச்சிறிய அளவில் செயற்பட்டு வந்தாலும், நாளடைவில் விரிவான அளவில் பணிபுரியுமென எதிர்பார்க்கின்றேன். ஆரம்பகாலப் பணிகளாக இந்நாட்டில் உள்ள சைவ அன்பர்களின் இல்லங்களில் பஜனைப் பிரார்த்தனைக் கூட்டங்களை நடாத்துதல், தமிழ் புதுவருடப்பிறப்பு, நவராத்திரி, தைப்பொங்கல் போன்ற வைபவங்களைக் கொண்டாடுதல், **சைவச்சிறார்களுக்குச் சைவசமயமும் தமிழ் மொழியும் கற்பித்தல்,** சைவமக்களின் இல்லங்களில் நடைபெறும் மங்கல அமங்கல நிகழ்ச்சிகளில் கலந்து அவற்றைச் சைவசமய முறைப்படி நடாத்த உதவுதல் என்பவையாக இருக்கும்" என்றார். இதன்படி சைவமுன்னேற்றச் சங்கத்தின் இங்கிலாந்துக் கிளையின் தொடக்கத்திலேயே அதன் செயற்பாடுகளில் ஒன்றாகச் சைவசமயமும் தமிழ்மொழியும் கற்பித்தல் முன்னெடுக்கப்பட்டதைக் காண்கிறோம். எனவே இங்கிலாந்துப் புலம்பெயர் தமிழ்மொழி தமிழிலக்கிய வளர்ச்சியில் நாற்பதாண்டுகள் தொடர்ந்து பயணிக்கும் ஒன்றாக சைவமுன்னேற்றச் சங்கம் (ஐக்கிய இராச்சியம்) அரும்பணியாற்றி வருகிறது எனலாம்.

சைவமுன்னேற்றச் சங்கத்தின் தமிழ்மொழி தமிழிலக்கியப் பணிகள் என்பன ஆரம்பத்தில் உயர்கல்வி மற்றும் உயர்தொழில் என்பவற்றின் அடிப்படையில் இங்கிலாந்தில் வாழ்ந்து வந்த இலங்கைத் தமிழர்களைச் சிறப்பாக மையப்படுத்திய சேவையாக அமைந்தது. இந்த மையப்படுத்தலானது முதலில் பஜனை வழிபாட்டு முறைவழியாகத் தொடங்கப்பெற்றமையைக் காணலாம்.

இதற்கான வரலாற்றுக் காரணி ஒன்றையும் இவ்விடத்தில் சுட்டிக்காட்ட வேண்டி உள்ளது. இங்கிலாந்தில் தமிழ் இந்துக்களுக்கு என ஒரு தனியான வழிபாட்டு நிலையம் கூட இல்லாத நிலையில் சாயிபாபா பஜனைகளில் கலந்து கொண்டு அமைதி காணும் நிலை இந்துக்களுக்கு ஏற்பட்டது. இதனால் இங்கிலாந்தின் தமிழ் இந்துக்களுக்கும் சாயிபாபா பஜனைக் குழுக்களுக்கும் இடையில் மிகநெருக்கமான தொடர்புகள் வளர்ந்தன. இந்த நிலையில் தமிழ்த் திருமுறைகளுடன் வழிபாட்டு முறைமை ஒன்று தோற்றிவிக்கப்பட்டாலே யாழ்ப்பாணச் சைவமரபு இங்கிலாந்தில் காப்பாற்றப்படலாம் என்கிற காலத்தின் தேவை ஒன்று ஏற்பட்டது.

இந்தத் தேவைக்கான தீர்வாகவும் சைவஅன்பர்களின் இல்லங்களில் பஜனை என்பது சைவமுன்னேற்றச் சங்கத்தின் இங்கிலாந்துக் கிளையால் முன்னெடுக்கப்பட்டது எனலாம். இங்கிலாந்தின் இந்த இந்துக்கள் இடையிலான பஜனைப் பண்பாட்டில் தமிழ்நிலைப்பாட்டில்

கலக்கினும் தண் கடல் சேறு ஆகாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுறைகள் முதன்மை பெற்றதன் வழியாகத் தமிழ்மொழியும் தமிழிலக்கிய நுகர்ச்சி விருப்பும் இங்கிலாந்துத் தமிழரிடை தொடர்வதற்கான சூழ்நிலையாக இது மாறியது.

மேலும் திருமணங்களுக்கு அவற்றை நடாத்தி வைப்பதற்கு ஐயர்மார் போதிய அளவு இல்லாத அக்காலத்தில் சைவமுன்னேற்றச் சங்கத்தினர் உயர்வாசக்குன்று முருகன் ஆலயத்தை நிறுவிய திரு சபாபதிப்பிள்ளை ஐயா அவர்களுடன் இணைந்து அவர் குரு நிலையில் நின்று திருமணங்களை நடாத்த மற்றவர்கள் அவருடன் இணைந்து தேவார திருவாசகங்களைப் பாடித் திருமண நிகழ்வுகளை நடாத்திய பதிவுகளும் உண்டு. திருமணங்கள் மண்டபங்களில் நடைபெறாது வசதிக்கேற்ப சிறிய இடப்பரப்பில் நிகழ்த்தப்பட்ட அக்காலத்தில் திருமணவிழாக்கள் தமிழர்கள் ஒருங்கிணையும் சமுதாய விழாக்களாகவும் இருந்துள்ளன.

இதன் வளர்ச்சி நிலையிலே இறுதிக்கிரியைகளிலும் தமிழிலே சிவபுராணம் பாடிடும் முறைமை ஆரம்பத்தில் சைவமுன்னேற்றச் சங்கத்தினரின் கடமைகளில் ஒன்றாகியது. இதன் வளர்ச்சி நிலையில் ஊரில் இருந்து முதன் முதல் ஒரு சைவக்குருக்களை இங்கிலாந்தில் இறுதிக்கிரியைகள் செய்வதற்காக தொழிலில் அமர்த்திய பெருமை சைவமுன்னேற்றச் சங்கத்திற்கே சாரும்.

இன்று இறுதிக்கிரியைகள் சைவமுறைப்படி சிறப்பாக நடைபெறவும் சுடலைகளிலும் சிவபுராணம் பாடி இறுதிக்கிரியைகளை நிறைவு செய்யவும் சைவமுன்னேற்றச் சங்கத்தினர் பேருதவிகள் புரிந்து வருகின்றனர். பின்னரும் சாம்பல் கரைக்கும் நிகழ்வுக்கான உதவிகளையும் சைவமுன்னேற்றச் சங்கம் சைவக்குருக்கள் வழியாகச் செய்து துன்பமான நேரத்தில் மக்களுக்கு உதவும் அமைப்பாகத் திகழ்கிறது. இந்த நிகழ்வுககள் திருவாசகத் திருப்பதிகங்கள் இங்கிலாந்துத் தமிழ் மக்களிடை தொடர்ந்தும் பேணப்படுவதற்கான வழிமுறைகளாகவும் திகழ்கின்றன.

சைவமுன்னேற்றச் சங்கத்தின் நால்வர் பாடசாலை தமிழ் இளம் பரம்பரையினர் சமய அறிவிலும் தமிழறிவிலும் வளர்வதற்கான அரும்பணிகளையாற்றி வருகின்றது. திருமுறை மரபில் நம்பிக்கை கொண்ட சைவமுன்னேற்றச் சங்கத்தினர் தங்கள் சிறுவர்களுக்கான சமயத் தமிழ் அறிவினை வளர்க்கும் பாடசாலைக்கும் நால்வர் தமிழ்ப்பாடசாலை எனப் பெயரிட்டது போல் 17.04.1994 ல் தொடங்கப்பெற்ற தங்களின் முதியோர் நிலையத்திற்கும் நால்வர் முதியோர் இல்லம் என்று பெயரிட்டனர். முன்னையது இளையோரின் சித்திக்கு வழிகாட்ட பின்னையது முதியோரின் முத்திக்கு மெருகூட்டும் தன்மையானதாகத் திகழ்கின்றன.

நால்வர் என்னும் சொல்லாட்சி தமிழர்களை இயக்குகின்ற மந்திரமொழி. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்னும் அருளாளர்கள் நால்வரும் "அவனே தானேயாகிய" சிவநெறியில் வாழ்ந்தவர்கள். சிறுவயதில் இந்த 'அவனே தானேயாகிய" நிலை குறித்து இளம் உள்ளங்களை தேடல் வழி அறியப்பழக்குதலுக்குச் சமயக்கல்வி இன்றியமையாததாகிறது பின்னர் தாங்கள் தேடிய அறிவை அவர்கள் தங்கள் மனதின் நினைவாக மாற்றுவதற்கு இறைவனில் அமிழ்ந்தி வாழ்தலே தமிழ்வாழ்வு தமிழர் வாழ்வு. அந்தத் தமிழ் வாழ்வை வாழ்ந்து "காமஞ்சான்ற கடைக்கோட்காலை ஏமஞ்சான்ற மக்களொடு துவன்றி அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும் சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே" என வாழும் காலம் முதியோர் என்னும் வீட்டாருக்கு மட்டுமல்லாது நாட்டாருக்கும் உலகத்தாருக்கும் சொந்தமாக வாழும் கிழவன் கிழத்தி என்னும் எல்லோருக்கும் உரிமையாளரான காலம்.

இந்தக் காலத்தில் நால்வராக அதாவது "அவனே தானோயாகிய" நிலையில் தம் வாழ்வை வெளிப்படுத்த வேண்டும். இதுவே வாழும் பொழுதே இறைவனைச் சார்ந்து இருவினை ஒப்பு நிகழ்ந்து சக்தி நிபாதம் சித்தித்து இவ்வுலகிலேயே சிவோகம்பாவ நிலை எய்தி என்றும் நிலையான பொருளாகிய 'சத்' உடனும் என்றும் அழியாத பேரறிவாகிய "சித்' உடனும் நான் என்றும் உள்ளேன் என்னும் சிவானந்தப் பெருநிலையை சச்சிதானந்தப் பெருநிலையை உயிர் அனுபவிக்கும் காலம் - வாழ்வின் நிறைவுக்காலம். இதுவே சைவமுன்னேற்றம். அதாவது சைவம் என்பது அன்புற்று அமரும் பெருநிலை. தன்னலம் விடுத்து மன்னுயிரெல்லாம் தன்னுயிராய்க் கருதி கம்பனின் மொழியில் தாமுளவாக்கி எந்த உயிர்க்கும் தீங்கு செய்யாது எல்லா உயிர்களையும் உலகையும் பேணுகின்ற போற்றுகின்ற சைவப்பெருநிலை எய்தும் நிலை.
இந்த அன்பில் முன்னேற்றம் காணுவதே சைவமுன்னேற்றம். அதனைச் செய்வதற்கு இளையோர் பாடசாலையை நால்வர் பாடசாலையாக முன்னெடுத்து நால்வர் வழிதனை அறிவாக்கி அதனையே தமிழ்வாழ்வாக்க இறைவனில் அமிழ்ந்தி வாழும் வாழ்வாக்கப்பழக்கி நால்வர் முதியோர் நிலையம் முதுமை வாழ்வை மறுமைவாழ்வை இவ்வுலகிலேயே சிவோகம்பாவ நிலையில் பெற்று சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயன் எனத் தாங்கள் வாழ்ந்த காலத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடிய செல்வத்தைக் கல்வியை ஆற்றல்அனுபவம் என்னும் வீரத்தை தங்கள் தமிழினத்திற்கும் தங்கள் மனிதசமுதாயத்திற்கும் பகிர்ந்து வாழப் பழக்கும் தமிழர்க்கும் தாரணிக்குமான பெரும் நிதியமாகத் தனிமையும் பாழ்படுத்தப்பட்டு விட்டோம் என்ற விரக்தியும் வாழ்வைப் பாதிக்காது காத்து நிற்பது சைவமுன்னேற்றக் கழகத்தின் இந்த முதியோர் நிலையம்.

இந்த வாழ்வின் இருஅந்தங்களுக்கும் இடையில் புறத்தில் இறைவனைக் கண்டு போற்றும் சரியையும் அகத்தில் இறைவனை உணர்ந்து ஏற்றும் கிரியையும் ஆலய வழிபாடுகள் வழியாக அனைவரும் பெற்றிடச் சிவகாமி உடனுறை சிதம்பரேஸ்வரர் ஆலயத்தை உருவாக்கி மனோபார்க் நகரத்தையே இங்கிலாந்தின் சிதம்பரமாக்கி சிதம்பரஇரகசியத்தையும் இங்கும் அமைத்து சிவப்பணி செய்து நிற்கிறது சைவமுன்னேற்றச் சங்கம்.

இறைவனும் இந்த சிவப்பணிகளுக்கு கருணை கூர்ந்து இறைவனுடன் கலந்து வாழப்பழக்கும் யோகத்தைத் தரும் யோகாநிலையமும் இங்கு அமைவுறச்செய்து கூடவே தான் ஞானத்தை அருள இங்கு திருவாவடுதுறை ஆதீனத்தின் சைவசித்தாந்த இரத்தினப் பயிற்சி மையத்தின் ஐரோப்பியக் கிளையாகவும் இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் சைவப்புலவர் தேர்வு மையமாகவும், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தின் திருமந்திரமும் வாழ்வியலும் பட்டயப்பயிற்சிப்பள்ளியாகவும், பண்ணிசை பயிலும் நிலையமாகவும், வேதவகுப்புக்கள், திருமந்திரத்தின் வழி அறிவினை வளர்க்கும் வகுப்புக்கள் எனப் பலநிகழும் ஞானப்பள்ளியாகவும் சைவமுன்னேற்றச் சங்கத்தை மாற்றி சைவமுன்னேற்றச் சங்கத்தின் வழி சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நாற்பாதங்கள் வழியாகவும் இங்கிலாந்துத் தமிழ் மக்கள் இறைவனோடு சேர்ந்து வாழ்ந்து இன்புற அருள் கூர்ந்து நிற்கின்றான்.

இந்த அருளாட்சியின் பின்னணியில் தமிழ் மொழி வளர்கிறது- தமிழ்க்கலைகள் வளர்கிறது- யோகப்பலம் பெறுகிறது – ஞானநிறைவு சித்திக்கிறது. இதுவே சைவத்தமிழ் வழி சைவமுன்னேற்றச் சங்கம் தமிழ்மொழிக்கும் தமிழிலக்கியத்திற்கும் தாயகத்தைப் போலவே இங்கும் தொடர்பறாத பணிவழங்கு நிலையாக உள்ளது. தமிழ்ச் சிறுவர்களுக்கான நூல்களை பதிப்பித்தல், சைவம் மற்றும் தமிழ்மொழி வளர்ச்சிக்கான நூல்களை இறுவெட்டுக்களை காணொளிகளை தாயகத்திலும் தமிழகத்திலும் இருந்து தருவித்து வழங்கல். இங்கிலாந்தில் தமிழ் மற்றும் சைவ நூல்களுக்கான வெளியீட்டு விழாக்களுக்கு நால்வர் மண்டபத்தை இலவசமாக வழங்கியும் மற்றும் தேவையான பலவழிகளிலும் உதவுதல். இசைத்தமிழ் நாடகத் தமிழ் வளர்ச்சிகளுக்குப் பலவழிகளில் உதவியும் கலைஞர்களை ஊக்கப்படுத்தியும் கலைகள் வளர உதவுதல். எல்லாவற்றுக்கும் மேலாகச் சைவம், தமிழ், தமிழர் சமுதாயம் ஆகியவற்றுக்கு இங்கிலாந்தில் இயன்ற பணி செய்தவர்களைத் தேர்ந்தெடுத்து ஆண்டு விழாக்களில் மதிப்பளித்தல் எனச் சைவமுன்னேற்றச் சங்கம் இங்கிலாந்தில் தமிழ்மொழி, தமிழிலக்கிய வளர்ச்சியில் அளப்பரிய தொண்டாற்றி நிற்கிறது.

சைவமுன்னேற்றச் சங்கத்தின் ஆன்மிகச் சேவைகளைப் பெறுவதற்கு இங்கிலாந்து வாழ் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் என்னை இறைவனே என்வினைக்கு ஏற்பச் செலுத்திக் கொண்டு இருக்கிறான் என்கிற உண்மையை உணர்ந்து நான் எதனையும் செய்வதில்லை, என்னைக் கருவியாக்கி அவனே என்னைச் செலுத்தி நிற்கிறான் என்பதன் அடிப்படையில் இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்கவென வாழ்த்தி வணங்கி இந்த உணர்வை மறைக்கின்ற ஆணவத்தை இறைவழிபாட்டால் ஒடுக்கி உயர்ந்திட வேண்டுமென்பதையே இந்நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இந்த பக்தியினை அதாவது உயிர் இறைவனில் அன்பினால் நிலைத்து அவனையே தன் வாழ்வாக வழியாகக் காண்கின்ற நிலையை எடுத்துரைக்கும் மனிதப் பேச்சாற்றலில் தெய்வத்தின் நிலைப்பேறே தமிழ்மொழி அதன் இலக்கியமாம் தமிழ் இலக்கியம் இந்த மனிதனை வாழ்வாங்கு வாழவைத்து வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் நிலைக்கான மனித அனுபவங்களைக் காட்சிப்படுத்தும் மொழிவளமே ஆகும். இயற்றமிழாக இறைவனில் வாழவைத்து அவனை உணர்த்தி, இசைத்தமிழாக உயிரை அவனைப்பாடி அவனில் ஒன்று சேரவைத்து நாடகத்தமிழாக தனது ஆன்மிக அனுபவத்தை யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என உலகுய்ய கண்டறிய வைப்பதே முத்தமிழ். இதனால் முத்தமிழும் இங்கிலாந்தில் சைவமுன்னேற்றச் சங்கத்தில் பல வழிகளில் வளர்கின்றது. இந்த தெய்வத் தமிழ்த்தன்மை உலகம் உள்ளவரை இங்கிலாந்தில் தமிழைத் தமிழிலக்கியத்தை நிலைப்படுத்த வேண்டுமென அவனருளாலே அவன்தாள் பணிந்து நாற்பது ஆண்டுகளாக வளர்ந்த சைவமுன்னேற்றச் சங்கம் நானிலம் உள்ளவரை நிலைக்கவென என்றும் இளமையாக உள்ள இன்தமிழால் வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

பெருமையும் சிறுமையும் தான் தர வருதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

உ
சிவமயம்
பிள்ளையார் துணை
"சகல செல்வங்களையும் அள்ளி வழங்கும்"
இலண்டன் ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலயம்
LONDON SRI SELVAVINAYAGAR TEMPLE
299 - 303 LEY STREET ILFORD, ESSEX IG1 4BN TEL / FAX :- 0208 911 8934
WWW.SRISELVAVINAYAGAR.ORG.UK E-Mail:- info@sriselvavinayagar.org.uk
*Registered Charity No. 1171912*

## இலண்டன் ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயம்

நிகழும் மங்களகரமான ஹேவிளம்பி வருடம்

ஐப்பசி திங்கள் 12ம் நாள் ( 28-10-2017)

சனிக்கிழமையன்று நடைபெறும் இலண்டன் சைவ முன்னேற்ற சங்க 40 வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு ,நமது செல்வ விநாயகர் திருக்கோவில் சார்பாக அளித்த வாழ்த்து மடல்

நாற்பதாம் ஆண்டு நிறைவு காணும் சைவமுன்னேற்ற சங்கமே

நானிலம் நின் புகழ் பரவட்டும்

நால்வர் நெறியோடு நடராசரின் துதிபாடும்

நானிலத்தவர் அனைவரும் நிம் தொண்டை வாழ்த்துவர்

நன்னெறியாம் சைவநெறி இலண்டனில் தழைத்தோங்க

நாற்பதாண்டு காலமாக பாடுபட்ட அனைத்து நல் உள்ளங்களுக்கும்

நானிலத்தில் நீடூழி வாழ்க .நற்தொண்டு சிறக்க

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"

இங்ஙனம்

ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய குருமார்கள்

மற்றும் நிர்வாக சபையினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## B. Vasantha Gurukkal BA (Hons)

சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர்

**சிவஸ்ரீ பா. வசந்தக் குருக்கள்**

கற்பகபதி ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில்

18 Chingford Road, Walthamstow, London, E17 4PJ

Home: 02085233802 |Temple: 02085273819 |

Mob: 07903707878 | Email: Vasanthan@live.co.uk




**ஆலயங்கள் மனத்திற்கு நிம்மதியை தருகின்றன.நெஞ்சுக்கு நிம்மதிஆண்டவன் சந்நிதி.**

**மனிதன் தனது வாழ்வை வளம் படுத்த பல வழிகளை பின்பற்றலாம். ஆனால் மனதைவளம்படுத்த ஆன்மீகம் பெரும் பங்களிப்பு செய்கிறது.** தெய்வம் சார்ந்தது தெய்வீகம் ,ஆத்மா சார்ந்தது ஆத்மீகம் , பஞ்ச பூதங்கள் சார்ந்தவை பௌதீகம், உலகம் சார்ந்தது லௌகீகம் ஆகும். மரபுகள் மாறாமல் செய்து வருவது ஐதீகம் எனப்படும். ஆலயங்களில் நடைபெறும் வழிபாடுகள் லௌகீக வாழ்வில் உலகியல் வாழ்வில் இருக்கும் மக்களுக்குஅதாவது எம் போன்ற சாதாரண மக்களுக்கு பௌதீக பொருட்கள் சார்ந்து ஆன்மீக இனைப்புடன் தெய்வீக அருள் கிடைக்கும் பிரதான தத்துவ நோக்கை நாம் காணலாம். ஞானிகள் ,அல்லது முனிவர்கள் ,சித்தர்கள்,யோகிகள் ,நாயன்மார்கள் ,ஆழ்வார்கள் என்பவர்களுடைய இறை அருள் தொடர்பு வேறு அவர்களைப் போல் நாம் எம்மை சிந்திக்க முடியாது,

நாம் எவ்வாறு வழிபட வேண்டும் என்பதை எமக்கு எடுத்து தருபவை ஆகமங்கள். சரியை கிரியை சம்பந்தமான வழிபாடுகள் எமக்கு உரியன. யோகம் ,ஞானம் தொடர்பு பட்டவை யோகிகள் ஞானிகள் ஆகியோருடைய வழிகள்.

இவ் ஆகமங்கள் ஆலயம் கட்டும் விதம் முதல் அங்கு எந்த எந்த மூர்த்திகளை எவ்விடத்தில் வைக்க வேண்டும், அங்கு எவ்வாறு பூஜைகள் நடைபெற வேண்டும் என்ற இறை வாக்கு சட்ட ஆன்மீக நூலக மதிக்கப்பட்டு வருகிறது. இவற்றிற்கு ஒத்துழைப்பாக சிற்ப நூல்கள் அமைகின்றன. சிற்ப சாஸ்திரம் உருவங்களின் அமைப்பு ,அளவுகள் என்பவற்றை தெளிவாக்குகின்றன. இவற்றுடன் இறைவனால் அருளப்பட்டு ரிஷிகளால் எமக்கு வழங்கப்பட்ட வேதங்கள் ஆலயங்களில் ஓதப்பட வேண்டும். வேதம் என்பது அறிவு எனப் பொருள்படும். ஆகமம் என்றால் செயல் . இதனை மந்திரம் . தந்திரம் என்று சொல்வார்கள். இங்கு மந்திரம் என்பது வேதங்களாகவும் தந்திரம் என்பது ஆகமங்களாகவும் போற்றப்படுகின்றன. இவை எமது ஆன்மாவில் உள்ள தீவினை என்ற நோய்க்கு மருந்து போன்றவை. இதனை அப்பர் சுவாமிகள் மந்திரமும் தந்திரமும் மருந்துமாகி தீராத நோய் தன்னை தீர்ப்பான் என்கிறார். எனவே இம் மருந்தை நாம் சரியாக பயன்படுத்த வேண்டும். முறைப்படி தீட்சை செய்து பூணூல் அணிந்து வேத சிவாகமங்கள் அறிந்த சிவாச்சார்யர்களின் அவசியம் பற்றி அனைத்து ஆகமங்களும் கூறியிருக்கின்றன. இதனைக் கடைப்பிடிப்பதில் பல ஆலயங்கள் முன்னிற்கின்றன.

ஆகமம் என்பதற்கு இறைவனிடம் இருந்து வந்தது. எம்மை இறைவனிடம் கொண்டு சேர்ப்பது எனப் பல கருத்துக்கள் கூறப்படுகின்றன. பொதுவாக அபிஷேகம் ,அவிவளர்த்தல் (ஹோமம்)அலங்காரம் . அமுது . ஆராதனை,(தூபம், தீபம்), . வேத பாராயணம் திருமுறை பாராயணம் இசை. மற்றும் கலைகள் சமர்ப்பணம் என்பவை ஆலய வழிபாடுகளின் பிரதான அம்சமாக இருப்பதை நாம் காண்கிறோம். இவை பௌதீகவியலோடு தொடர்புடையவையாகும். நிலத்துடன் தொடர்புடையது நெய்வேத்தியம், நீருடன் தொடர்புடையது அபிஷேகம். நெருப்புடன் தொடர்புடையது ஹோமம்.. தூபம் காட்டுதல்,சாமரை வீசுதல் வாயுவுடன் சம்பந்தமானது. மணி அடித்தல், பூவினால் அல்லது பத்திரத்தினால் அர்ச்சித்தல் , வேத ஓசை திருமுறை மற்றும் மங்கள இசைகள் யாவும் ஆகாயத்துடன் தொடர்புடையவை. இவை போலவே பூஜையின் நிறைவில் தரப்படும் பிரசாதங்களும் அமைந்து விடுகின்றன. பிரசாதங்கள் நிலத்தோடு தொடர்புடையவை. தீர்த்தம் நீருடன் தொடர்புடையவை, நெருப்புடன் தொடர்புடையது விபூதி. சந்தனம் . குங்குமம் . காற்றுடன் தொடர்புடையவை, பூ ஆகாயத்துடன் தொடர்புடையவை இவற்றின் ஊடாக எமக்கு அருள் கிடைக்கிறது என்பதால் ஆலயங்களுக்கு சென்றால் இவற்றைப் பெறுவதில் மிக ஆர்வமாக இருப்போம்முக்கியமாக விபூதி பெறுவதில் கூடிய கவனம் செலுத்துவோம். விபூதி அக்னியின் வடிவம் ஞான அக்னி. எமது பாவ வினைகளை சுட்டு எரிக்கிறது. வெந்துயர் தீர்ப்பது நீறு என்றார் சம்பந்த சுவாமிகள். . இறைவனது நாமம் சொல்லி நாம் அர்ச்சனை செய்வதும் எமது முன் ஜென்ம தீய வினை தீரும் என்பதாலேயாகும். நாமம் ஏற்ற நம் தீவினை நாசமேயாகும் என்பதும் அப்பர் சுவாமிகள் வாக்கு. நாம் எமக்கோ அல்லது எமது பிள்ளைக்ளுக்காகவோ ஒரு நல்ல காரியத்தை இறைவனிடம் வேண்டும்போது எமது அல்லது சம்பந்தப் பட்டவர்களின் பெயர்களை நட்ச்சத்திரங்களை ஏன் கூறுகின்றோம் என்றால் இந்த பிறவியில் இன்ன நட்சத்திரம் இன்ன ராசி இன்ன பெயர் உள்ள ஒருவரின் காரியம் நன்கு நிறைவேற வேண்டும் அவருக்குள்ள துயர் தீர வேண்டும் என்பதேயாகும். இதனை காம்ய பூஜையாக ஆகமங்கள் சொல்கின்றன. நித்ய நைமித்திய பூஜைகள் பரார்த்த பூஜையாகவும் நேர்த்தி அபிஷேகங்கள் மற்றும் அர்ச்சனைகள் காம்ய பூஜைககளாக, ஆத்மார்த்த பூஜைகளாக நாம் பின்பற்றுகிறோம்.

மற்றும் ஆலய வழிபாடுகள் இல்லற வழிபாடுகளில் சில்லறைக் காசு அல்லது பவுன் வைத்து பூஜை செய்ய வேண்டும் என்பதும் ஒரு நடைமுறை உள்ளது. இது சுவர்ண புஷ்பம் எனப்படும். காரணம் இவை ஒலி, ஒளி ஆகிய இரு அம்சங்களையும் கொண்டுள்ளவை. ஒலியை உள் வாங்கும் உலோகங்களாகவும் அமைகின்றன. அத்துடன் இலட்சுமி வாசம் செய்யும் இடமாகவும் கருதப்படும். சில்லறைக் காசு ஒளியின் வடிவம் இறைவனது மூல வடிவமாக ஒளியே கூறப்படுகிறது. ஒளியின் அம்சம் ஆரம்பத்தில் இருந்து நிறைவு வரை இருக்க வேண்டும் இதனால் பூஜையின் நிறைவில் தக்ஷனை வழங்கும் போது கூட அன்பர்கள் தாம் வழங்கும் பணத்துடன் சில்லறை வைத்து கொடுக்கும் பழக்கம் இன்று வரை நிலவி வருகிறது. அதனை நீர் விட்டு வாங்கும் வழக்கமும் உண்டு. எந்தப் பொருளும் தானமாக வழங்கும்போது நீர், அக்னி இரண்டும் சாட்சியாக அமைகிறது. சில்லறை அக்நியாகவும் விடப்படும் நீரும் சேர்ந்து தான வலிமையை உயர்த்துகிறது. இதுவே கன்னிகா தானத்திலும் உள்ளது.

ஆலய வழிபாடுகளில் தமது நிதியை ஆன்மீக வழியில் செலவழித்து மற்றவர்களையும் மகிழ்வு படுத்துவபர்களை உபயகாரர் என நாம் அழைக்கும் மரபு உண்டு. உபயம் என்றால் இரண்டு என்ற கருத்து காரரர் எனின் செயலாற்றுபவர் அதாவது தமது குடும்பத்தார்க்கும் அதேவேளை அனைவருக்கான நன்மை வேண்டியும் வழிபாடு ஆற்றுபவர் ஆன்மார்த்தமாகவும், பரார்த்தமாகவும் ஆலயத்தில் வழிபாடு செய்ய உதவுகின்றவர்கள். வீடுகளில் நாம் செய்யும் வழிபாடுகள் பெரும்பான்மையாக ஆத்மார்த்தமாகவே நிறைவடைந்து விடுகிறது. ஆனால் நாம் ஆலயத்தில் செய்யும் வழிபாடு அனைவருக்கும் கிடைக்கும் பரார்த்த வழிபாடாக அமைகிறது. ஆலயங்களுக்கு சென்று நாம் வழிபாட்டில் பங்கு கொண்டு வந்தால் எமக்கு நிம்மதி கிடைக்கும் ஒரு உணர்வு இருப்பதை நாம் உணர்கிறோம்..

நிம்மதி நிலைக்க நிமிர்ந்திடும் ஆலய மரபுகள் செம்மையாய் பேணி சிறப்புடன் செயலாற்றி
நம்மிடம் இருக்கும் தீவினை தீர்ந்து நல்வினை பெற பெம்மான் இறைவன் பாதம் போற்றி பணியாற்றுவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவமுன்னேற்றச் சங்கத்தின் நாற்பதாவது அகவையை முன்னிட்டு எழுதப்பெற்ற சங்ககீதம்

### அன்புடன் புலவர் சிவநாதன்



தொகையறா

சைவமும் தமிழும் வையத்தில் ஓங்கிடச்
செய்திட எழுந்தநற் சங்கம்!
தெய்வமே துணையெனத் தெளிந்தவர் கூடிடும்
தமிழ்ச் சைவமுன்னேற்றச் சங்கம்!
மெய்யறிவோடிளஞ் சந்ததி வாழ்ந்திடக்
கைதர வளர்ந்ததிச் சங்கம்!
தையலோர் பாகமாய்த் தில்லையில் ஆடிடும்
ஐயனைத் தொழுதிடும் சங்கம்!

பல்லவி

சைவமுன்னேற்றச் சங்கம்- இது
தமிழர் முன்னேற்றச் சங்கம்!
தில்லைக் கூத்தனை
உள்ளத் தேற்றியே
உலகையணைத்திடும் சங்கம்!

அநுபல்லவி

திருமுறையாலிசைத் தமிழ்மறைபாடிய
திருவடியார் தமையென்றும்
குருவழிபாடெனும் மரபுடன் போற்றியே
மகிழ்ந்திடும் மாண்புடைச் சங்கம்!

சரணம் (1)

நால்வர் தமிழை நாளும் பொழுதும்
நாவினில் ஏந்திடும் சங்கம்!
நால்வர் நெறியினில் நலலவை செய்தே
நற்பணி செய்திடும் சங்கம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நால்வர்கலைக்கூடம் தனிலே
நாடகம் நாட்டியம் பயில்வார்!
நால்வர் மூத்தோரின நிலையம்- அதில்
நம்முதி யோர் நலன் பெறுவார்!

சரணம் (2)

அன்புவாழ்வினை அறத்தின் பாதையை
இன்பமாய்க் காணும் சங்கம்!
எங்கள் மக்களின் துன்பவேளையிற்
பங்கெடுத்திடும் சங்கம்!
உள்ளத்துயர்வுதான் உண்மை உயர்வெனச்
சொல்லத் தோன்றிய சங்கம்!
உலக மக்களோர் குடும்பமாமெனும்
கொள்கை போற்றிடும் சங்கம்!

சரணம் (3)

கலசம் என்றொரு கவசமேந்தியே
கருத்துக் களம் காணும் சங்கம்!
அழகு தோரணம் ஆக்கி மின்னஞ்சல்
வழியிற் தமிழ் செய்யும் சங்கம்!
நிலவுசென்றிடும் மனிதன் அறிவினை
நிறைவு செய்கின்ற ஒளியை
அலகுசோதியன் அருள்வழங்கிடும்
என்று கூறிடும் சங்கம்!

சரணம் (4) வேறு

மூண்டகடற்கோளின் அழிவில்- உயிர்
போந்த பெற்றோரின் இழப்பால்
ஆழ்ந்த துயர்கொண்ட பாலர்- தமைக்
காக்க ஒரு நால்வர் கோட்டம்
ஈன்ற தாயக மண்ணில்
தோன்ற வழிசெய்த சங்கம்!
ஆண்டவன் சேவை அன்பே- என்று
ஈண்டு அறை கூவும் சங்கம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஞானிக்கு இல்லை இன்பமும் துன்பமும்

# கறை கண்டன் உறை திருக்கோவில் (திருக்கோணேஸ்வரம்)

-சாவித்திரி ஆனந்தன்.





"நிரை கழல் அரவம் சிலம்பொலியலம்பும்
நிமலர் நீறணி திருமேனி
வரை கெழுமகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலங்கொழிக்கும்
கோணமாமலை யமர்ந்தாரே"

வளங்கொழிக்கும் செல்வமாகிய விலைமதிப்பில்லா முத்துக்களைத் தனக்குள் பொதிந்து வைத்திருக்கும் ஆழ்கடலின் அலைகள் தரும் ஆரவார ஓசையின் பின்னணியோடு கோணமாமலை மீதமர்ந்து அருள்பாலிக்கும் எம்பெருமானாகிய கோணேசப் பெருமானைத் தனது ஞானக் கண்களால் தரிசனம் செய்து பரவசமாகி, திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் பாடிய தேவாரப் பதிகத்தின் ஒரு பாடல் இது.

கி.பி 7ம் நூற்றாண்டு காலப்பகுதியில் வாழ்ந்த சம்பந்தர் பாடிய இப்பதிகத்தின் எந்தவொரு பாடலை எப்பொழுது கேட்க நேர்ந்தாலும், அந்தப் பொழுதுகளிலெல்லாம் -

அன்று,

எம்பெருமான் மீது பக்தி மேலிடக் கசிந்துருகிப் பாடிய அந்தக் கணீர்க்குரலும்,

இன்று,

மாதுமையாள் சமேதராகக் கோணமாமலையிலிருந்து பக்தர்களுக்கு அருள் பாலிக்கும் கோணேச்சரத்தானுடைய திருவுருவமும் உணர்வுகளில் இரண்டறக் கலந்து எம்மையெல்லாம் ஆனந்தப்பரவசத்திலாழ்த்துபவை.

அத்துடன், மலையும் மலை சார்ந்ததுமான நிலம், காடும் காடு சார்ந்ததுமான நிலம், கடலும் கடல் சார்ந்ததுமான நிலம் ஆகிய மூன்றும் ஒன்று சேருமிடத்தில் அமைந்துள்ள கோணேச்சரத்தின் சிறப்பம்சமாகிய அதன் அற்புதமான இயற்கையழகை நிழற்படமாக எங்கள் முன் நிறுத்தி அழகு செய்யும் பாடல்களும் இப்பதிகத்தில் இதோ:

"தெழித்து முன்னரற்றுஞ் செழுங்கடற்றரளஞ்
செம்பொனு மிப்பியும் சுமந்து
கொழித்து வன்றிரைகள் கரையிடைச் சேர்க்கும்
கோணமாமலையமர்ந்தாரே...."

"விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை
வேங்கை வன்செருத்தி செண்பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவரும் பொழில் சூழ்
கோணமாமலையமர்ந்தாரே...."

திருக்கோணேச்சரம் என்ற பெயரை உச்சரிக்கும் போதே, எமது நெஞ்சங்களில் ஊற்றாகி வியாபிக்கின்ற ஒரு வகைப் பக்திப் பரவசம் என்றும் மெய்சிலர்க்க வைப்பது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொன்மை வாய்ந்த இந்தத் திருத்தலம், சைவசமயத்தினது ஒரு பெருமை என்பதற்குமப்பால், இது தமிழினத்துக்கான ஒரு மறுக்கமுடியாத வரலாற்றுச் சான்றாகவும் அமைந்துள்ளது எனவும் கூறலாம். திரிகூடம், கோகர்ணம், திருக்குணா மலை, தட்சிண கைலாயம், மச்சேச்சுரம் போன்ற வேறு வேறு பெயர்களைக்கொண்ட இத்தலத்தின் வரலாறு 3287 ஆண்டுகள் பழைமை வாய்ந்தது.

ஏறத்தாழ 3000 ஆண்டுகளுக்கு முன், திருமலையின் உச்சியிலும், இடையிலும் அடிவாரத்திலுமாக மூன்று பெருங்கோயில்கள் இருந்தன என்பர். வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட கோயில் ஒன்று, கடலின் ஓரத்தில் - மலையின் அடிவாரத்தில் கி.மு.306 அளவில் கடல் கோள் காரணமாக மூழ்கிவிட்டதாகச் சில ஆய்வுகள் கூறுகின்றன.

இராவணன் தென் இலங்கையை ஆட்சி புரிந்த காலத்தில், தட்சிண கைலாயம் எனப்போற்றப்படும் திருக்கோணேச்சரத்தை வழிபட்டு வந்ததாக "மட்டக்களப்பு மான்மியம்" என்ற நூல் கூறுகிறது.

இமயமலையிலிருந்து இராவணன் கொண்டு வந்த கோகர்ணலிங்கம், மகேந்திர மலையில் இப்பொழுதும் காணப்படுகிறது. கோகர்ணம் என்பது பசுவின் காது எனப்பொருள்படும். பசுவின் காது போன்ற தோற்றம் உடையதால் அது கோகர்ண லிங்கம் எனப்பெயர் பெற்றது.

திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் ஒரு தடவை தனது ஆன்மீகச் சொற்பொழிவில், அப்பர் பாடல் ஒன்றை மேற்கோள் காட்டி இந்தக் கோகர்ண தரிசனத்தின் முக்கியத்துவம் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்:

**"கால்களால் பயன் என் கறை கண்டம் உறை கோயில்**
**கோல கோபுர கோகர்ணம் செல்லாக்**
**கால்களால் பயன் என்?"**

*அழகிய கோகர்ண கோபுரம் கொண்டதும் கறைபடிந்த கழுத்துடையவனுமாகிய சிவனுடைய கோயிலுக்குச் செல்லாத கால்களால் என்ன பயன்?* என்று அப்பர் பாடினார்.

சிவபக்தனாகிய இராவணன் தனது தாயாருக்காகச் சிவலிங்கம் ஒன்றை உருவாக்க விரும்பிப்பெயர்த்த மலை தட்சிணகைலாயமாகிய கோணமாமலை என்று தட்சிணகைலாய புராணம் சொல்கிறது. மலைப் பாறையில் இராவணன் வெட்டு எனும் ஒரு மலைப் பிளவு காணப்படுவது இதற்குச் சான்று பகர்வதாய் அமைகிறது.

கடற் கோளில் அமிழ்ந்துபோன முதற்கோயில் பற்றிய ஒரு வரலாறு உண்டு. சோழ மண்டலாதிபதியாகிய மனுநீதி கண்ட சோழன் வர்ணராமேசுவரனுடைய கனவில் சிவன் தோன்றி, திருகோணமலையில் தனக்கு ஒரு கோயில் கட்டும்படி கூறியதாகவும் அவன் தனது மகனாகிய குளக்கோட்டனை இத்திருப்பணிக்காக இலங்கைக்கு அனுப்பி வைத்ததாகவும் வரலாறு சொல்கிறது. இந்தக் கோயிலின் ஒரு பகுதி கடலில் அமிழ்ந்ததாகவும் ஏறத்தாழ 1000 ஆண்டுகளின் பிற்பாடு, மாணிக்கராசன் என்ற அரசன் - சிவன், மாதுமை அம்பாள், லக்ஸ்சுமி நாராயணர் உள்ளிட்ட திரு உருவச்சிலைகளோடு கோவிலைப் புனருத்தாரணம் செய்வித்தான் எனவும் சில ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

சிவராத்திரி, சித்திரைப் புத்தாண்டு போன்ற விசேட தினங்களில் கோணேசப் பெருமான் நகர்வலம் வருதல் வழக்கம். போத்துக்கேயர் இலங்கையில் கால் பதித்தபின், 1624ம் ஆண்டில் வந்த சித்திரைப் புத்தாண்டு விசேடநாளில் மாதுமையார் சமேதராக எம்பெருமான் நகர்வலம் புறப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றுள்ளது போலவே, தமிழருடைய வரலாற்றுத் தலங்களை சிதைத்தழிக்கும் கீழ்த்தரமான – மனித நாகரிகமற்ற – போக்கை அன்றும் ஆக்கிரமிப்பாளர்கள் கொண்டிருந்தார்கள் என்பதற்குச் சாட்சியாக, கோணேசர் கோயிலை அழித்தொழிக்கப் போத்துகேயர் திட்டம் போட்டார்கள். சுவாமி வீதிவலம் வந்து கொண்டிருந்த சமயம் பார்த்து, பிராமணர் போல வேடமணிந்து போத்துக்கேயப் படை வீரர் சிலர் ஐயருடைய சன்னதிக்குள் புகுந்தார்கள். இந்தத் துட்டர்களின் தீய எண்ணத்தைப் புரிந்து கொண்ட சில அடியார்கள், அவசரம் அவசரமாகத் தம்மால் முடிந்த வரைக்கும் விக்கிரகங்களை மறைவாக எடுத்துக்கொண்டு ஓடிப்போய்க் கிணறுகளிலும் குளங்களிலும் போட்டார்கள். எனினும், கோயிலின் விலைமதிப்பற்ற பல பொருட்கள் போத்துக்கேயப்படை வீரர்களால் சூறையாடப்பட்டன.

இதில், ஆச்சரியப்படக்கூடிய ஒரு விசேடம் என்னவென்றால் - கி.பி.10ம் அல்லது 11ம் நூற்றாண்டில் வாழ்ந்ததாகக் கருதப்படும் அருணகிரிநாதர் கோணமாமலையான் மீது பாடிய எட்டுத் திருப்புகழ்களுள் ஒன்றில்,

**“நிலைக்கு நான் மறை மகத்தான பூசுரத் திருக்குணாமலை தலத்தாறு கோபுர”** – என்று மனம் நெகிழ்ந்து பாடிய கோயிலின் தலத்தாறு கோபுர அழகு போத்துக்கேயப் படைத்தளபதி “கொன்ஸ்டான் டீ சா” என்பவன் மனதிலும் ஏதோ ஒரு வகை ஈர்ப்பை ஏற்படுத்தியது போலும்! இதனால் அவன், கோவிலை இடித்தழிப்பதற்கு முன்பாக அந்தக் கோபுரம் உள்ளிட்ட கோயிலின் அமைப்பைத் தனது படைவீரன் ஒருவனைக் கொண்டு வரைபடமாக ஆக்கிய பிற்பாடே இடிக்கும் வேலையைச் செய்யப் பணித்தான்.

பின்னர் அவன், இந்த வரைபடத்தையும் கோயிலில் இருந்த கல்வெட்டுப் பிரதி ஒன்றையும் போத்துக்கேய மன்னனுக்கு அனுப்பி வைத்தான் என்பது வரலாறு கூறும் செய்தி. லிஸ்பன் நகரில் இப்பொழுதும் அந்த வரைபடம் உள்ளது என்பர்.

கோயிலை இடித்த ஆக்கிரமிப்பாளர்கள் பின்னர் அந்தக் கற்களைக் கொண்டு உருவாக்கிய திருகோணமலைக் கோட்டையில் கயல் சின்னம் பொறிக்கப்பட்ட ஒரு கல்லில் இப்பொழுதும், “முன்னே குளக்கோட்டன் மூட்டு திருப்பணியை” என்ற பாடல் வரி காணப்படுகிறது. கோட்டைச் சுவர்களில் இவ்வாறு அங்குமிங்கும் அரைகுறையாய்க் காணப்பட்ட சொற்றொடர்களைத் தொகுத்த அறிஞர்கள், சோதிட முற்கூறலுடன் அமைந்த அந்தக் கல்வெட்டு வரிகளின் முழுவடிவத்தைப் பின்வருமாறு தந்திருக்கிறார்கள்.

**“முன்னே குளக்கோட்டன் மூட்டு திருப்பணியை**
**பின்னே பறங்கி பிரிக்கவே**
**மன்னவ பின் பொண்ணாததனையியற்ற**
**உழித்தே வைத்து எண்ணாரே பின்னரசர்கள்**
**பூனைக்கண், புகைக்கண், செங்கண் ஆண்டபின்**
**தானே வடுகாய் விடும்”**

குளக்கோட்டனுடைய திருப்பணியால் அமைந்த இவ்வாலயத்தைப் பறங்கியர் உடைப்பார்கள் என்றும் பின்னர் அரசர்கள் இதைப் பேணமாட்டார்கள் என்றும் தொடர்ந்து வரக்கூடிய ஆக்கிரமிப்பாளர்கள் பற்றியும் கோவிலின் எதிர்காலம் பற்றித் தெளிவாகக் கூறியிருப்பது ஒரு சோதிட அதிசபம் என்றால் அது மிகையல்ல.

மலையின் அடியில், ஆழ்கடலுக்கு எதிரே மலைக்குகை போன்று, பண்டைக் கோவிலின் மூலத்தானத்தின் ஒரு பகுதி இப்போதும் எஞ்சியுள்ளது. அந்தக் கோவிலின் மிகுதி கடலின் அடியில் உள்ளதென 1961ல் ஆழ்கடல் ஆராய்ச்சி செய்த மக்.வில்சன் என்பவர் கூறியுள்ளார்.

1948ம் ஆண்டு, பிரித்தானியர் இலங்கையை விட்டு வெளியேறியபின், 1950ம் ஆண்டு, கோயில் இருந்த அதே இடத்தில் ஆலயம் அமைக்கத் தீர்மானம் செய்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி பாலேந்திரா என்பவர் தலைமையில், திருக்கோணேச்சர ஆலயத்தின் திருப்பணி சபை ஆரம்பமானது. காசியிலிருந்து சிவபெருமானை எழுந்தருளச் செய்தார்கள்.

திருமலையில் நகரசபையார் கிணறு தோண்டிய போது, மூன்றடி ஆழத்தில் சில விக்கிரகங்கள் கண்டெடுக்கப்பட்டன. மாதுமையார் சமேத கோணேசர், சந்திரசேகரர், பார்வதியார், பிள்ளையார், அஸ்திரதேவர் முதலாய தெய்வத்திருவுருவங்கள் வெளிப்பட்டன.

1944ல், கோட்டையினுள் நீர்த்தேக்கம் ஒன்று அமைக்க அகழ்வு வேலைகள் மேற்கொண்டபோது, வி'ஸ்ணு மகால'ட்சுமி விக்கிரகங்கள் கிடைத்தன.

போத்துக்கேயப் படைகளிடமிருந்து காப்பாற்றும் பொருட்டு ஆங்காங்கே சிவனடியார்கள் மறைவாகப் போட்டு வைத்த விக்கிரகங்களே அவை என்பது தெளிவாகும்.

இதைவிட, யாழ்.மாவிட்டபுரம் கோவிலைக் கட்டுவித்த மாருதப்புரவீகவல்லியின் மகன் நரசிங்கன் சீர்பாததேவி எனும் பெண்ணைத் திருமணம் செய்தபின், இலங்கையைப் பார்ப்பதற்காகத் தமிழகத்திலிருந்து இருவரும் கடல்வழியாகக் கப்பலில் வந்துகொண்டிருந்தார்கள். கோணேசர் ஆலயம் அமைந்திருந்த பகுதிக்கு நேராகக் கடலில் வந்தபோது, கப்பல் நங்கூரமிட்டதுபோல் அந்த இடத்திலேயே நின்றுவிட்டது. தொடர்ந்து ஒரு அடிகூடக் கப்பல் நகராமல் நின்றதையிட்டுக் கவலைகொண்ட சீர்பாததேவி விநாயகரை வேண்டி வணங்கினார். என்ன காரணம் என்று அறியும் பொருட்டுக் கப்பலோட்டியைக் கடலின் கீழே சென்று பார்க்கும்படி பணித்தார்.

அங்கே ஒரு தெய்வ அதிசயம் காத்திருந்தது! கடலின் ஆழத்தில் ஒரு விநாயகர் விக்கிரகம் காணப்பட்டது. கப்பலின் நகர்வுக்கு எந்த விதத்திலும் பாதிப்பு ஏற்படாத ஒரு ஆழத்திலேயே அந்த விக்கிரகம் இருந்தபோதிலும், இறைவனின் திருவுளப்படியே அது நிகழ்ந்திருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்ட நரசிங்கனும் சீர்பாததேவியும் அந்த விக்கிரகத்தைப் பத்திரமாக எடுத்துக் கப்பலில் சேர்த்தபின், கப்பல் நகரத் தொடங்கியது.

கடற்கோளில் அமிழ்ந்த கோயிலின் விக்கிரகம்தான் அது என்பதை அனைவரும் ஊகம் செய்து கொண்டார்கள்.

இவ்வாறு, வெவ்வேறு சந்தர்ப்பங்களில் கண்டெடுக்கப்பட்ட பழைய கோவிலின் திருஉருவச் சிலைகள் எல்லாம் மறுசீரமைக்கப்பட்ட புதிய கோயிலில் - பழைய கோவில் இருந்த அதே இடத்தில் பிரதிட்டை செய்யப்பட்டு 03-03-1963ல் மகா கும்பாபிசேகம் சிறப்புற நடந்தேறியது.

திருக்கோணேச்சுரர், இறைவி மாதுமை அம்பாள் சமேதராகக் காட்சி தரும் கோயிலின் தல விருட்சமாகிய கல் ஆலமரம், இப்போதைய கோயிலை அடுத்து, கோயிலின் வட முனையில் பாறையினுள்ளே வேர் வைத்துச் செழிப்பாக வளர்ந்து நிற்கிறது.

பாவங்களைத் தீர்க்கும் தீர்த்தமாக விளங்கிய கோயிலின் பாபநாசதீர்த்தம் ஆழமான ஒரு கிணறாக சுவாமி மலையின் தென் பக்கத்தில் இப்போதும் இருக்கிறது. இதைச் சுனை என்று கூற முடியாத அளவுக்குப் போத்துக்கேயர் பழைய கோவிலை இடித்துத் தீர்த்தக் கேணியையும் சுனையையும் தூர்த்துவிட்டனர். இப்பொழுதுள்ள கேணியும் தீர்த்தக் கிணறும் சேர்ந்த பெரிய கேணி ஒன்று முன்பு இருந்ததாக ஊகிக்கப்படுகிறது. அற்புதமான இந்தத் தீர்த்தத்தில் ஒரு சிறு பகுதியையாவது பாபநாசத்தீர்த்தக் கிணற்றின் மூலம் திருக்கோணேச்சரத்தான் தன் அடியார்களுக்குத் தந்தருளியிருக்கிறார் என்பது இதன் சிறப்பம்சமாகும்.

நாளும் கிழமையும் நலிந்தோர்க்கு இல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு, ஒரு நீண்ட வரலாற்றையே தனக்குள் பொதிந்து வைத்திருக்கும் திருக்கோணேச்சுரம்.

இத்தனை தடைகள் ஏற்படினும், எத்தனை இடர்கள் வரினும் என் அடியார்களுக்காக நான் என்றும் இங்கேயே இருப்பேன் என்று சொல்வது போல, இன்று – அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய ஒரு திருத்தலமாக அதே இடத்தில் கம்பீரமாக நிமிர்ந்து நிற்கிறது திருக்கோணேச்சுரம்.

தலையில் பிறை சூடியவனை, கறை கண்டனை, மாதுமை அம்பாள் சமேதராக வீற்றிருக்கும் எங்கள் கோணேசப் பெருமானை வணங்கி வரம் பெறுவதற்காகப் பக்த கோடிகள் கூட்டம் கூட்டமாக வந்து போகிறார்கள். இதைவிட, இயற்கையின் ஒரு அதிசயமாய் - குறிஞ்சி, முல்லை, நெய்தல் ஆகிய மூவகை நிலங்களும் சங்கமிக்கும் இடத்தில் அமைந்துள்ள கோவிலின் அமைவிடம், சுற்றுலாப் பயணிகளைப் பல்லாயிரக்கணக்கில் தன்வசம் ஈர்த்துக்கொண்.டிருக்கிறது.

ஆகமவிதிப்படி அமைக்கப் பெற்ற எம்பிரானுடைய ஆலயத்தில் கிழக்கு வாசல் பார்த்து கோணேசப் பெருமானும், தெற்கு வாசல் பார்த்து மாதுமை அம்பாளும் வீற்றிருந்து அடியார்களுக்கு அருள்பாலிக்கும் தெய்வத்திருக் காட்சியைக் காணும்போது பக்திப் பரவசத்தில் மெய்சிலர்க்கும்.

வசந்த மண்டபத்தில் முருகன், விநாயகப் பெருமான், வள்ளி தெய்வயானை, சோமஸ்கந்தர், சந்திரசேகரர் முகூர்த்தம், வீரசக்தி, அ்'டதேவர் ஆகியோருடைய திரு உருவச் சிலைகளுடன் ஒரு அன்னப்பட்சியின் சிலை வடிவமும் காணப்படுகிறது. திருவிழாக் காலங்களில் வசந்தமண்டபத்தில் விசேட பூசைகள் நடைபெறும். அ்'டதேவரும் வீதியுலாவுக்கு எடுத்துவரப்படுவார்.

இவை தவிர, நடேசர், பிரதோச மூர்த்தி, நால்வர் ஆகிய விக்கிரகங்களுடன் சேர்த்து நவக்கிரகங்களும் கோணேசர் கோயிலில் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளன.

தினமும் நான்கு காலப் பூசையும் திருவிழாக் காலங்களில் ஆறு காலப் பூசையும் சிறப்புற நடைபெற்று வருகின்றது. ஒவ்வொரு ஆண்டும் இரண்டு தடவைகள் கொடியேற்றம் நிகழ்கின்றது. பங்குனி உத்தர தினத்திலன்று கொடியேறி, தொடர்ந்து 18 நாட்கள் நடைபெறும் திருவிழா கோணேசப் பெருமானுக்காவும் ஆடிப்பிறப்பிலன்று கொடியேறி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெற்று, ஆடிப்பூரத்திலன்று நடைபெறும் தீர்த்தத் திருவிழாவுடன் நிறைவுறும் திருவிழா மாதுமை அம்பாளுக்காகவும் நடத்தப் படுகின்றன.

ஆரம்பத்தில் கம்சனாம்பிகா என்ற பெயருடன் அழைக்கப்பட்ட அம்பாள், பின்னர் மாதுமை அம்பாள் என்று அழைக்கப்படுவதாக ஒரு வரலாற்றுக் குறிப்பு சொல்கிறது.

கடந்து சென்ற நூற்றாண்டுகளிலெல்லாம் நிகழ்ந்த வரலாற்றுப் புயல்களுக்கு முகம் கொடுத்து, திருக்கோணேச்சரம் என்னும் இந்த ஆலயம் மீண்டும் நிமிர்ந்து நிற்கிறதென்றால், அது கோணேசப் பெருமானுடைய அருட்பார்வையின் விளைவினால் உண்டாகிய புதுமை என்றால் அது மிகையில்லை.

பாடல் பெற்ற இத்திருத்தலம், சைவ சமயத்தினருக்கான ஒரு வரலாற்றுப் பெருமையாய் இந்தப் பூவுலகம் உள்ளவரையும் நிமிர்ந்து கம்பீரமாய் நின்று நிலைத்து வாழும் என்பதில் ஐயமில்லை.

**“குரைகடல் ஓதம் நித்திலம் கொழிக்கும்**
**கோணமாமலை அமர்நதாரே” என்றும்,**
**“குருந் தொடு முல்லை கொடிதரும் பொழில் சூழ்**
**கோணமாமலை அமர்நதாரே” என்றும்,**

மாதுமை அம்பாள் சமேத கோணேசப் பெருமானை வாயாரப் பாடி, மனமார வேண்டி, தலை தாழ்த்தி வணங்கி, அருள் பெறுவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2



**VIKAS RATNA SIVASRI. K. PITCHAI GURUKKAL**
*Chief Priest, Sri Karpaga Vinayakar Temple,*
*Principal, Karpaga Vinayakar Veda Agama Vidhyalayam*
*Founder, Sivaneri Kazhakam*
*Secretary, Karpaga Vinayakar School,*
*Pillayarpatti – 630207 Sivaganga District, Tamilnadu, South India.*



உ

ஸ்ரீகற்பகவிநாயகர் துணை

16.10.2017

## வாழ்த்துரை

உலகின் மிகப்பெரிய சாம்ராஜ்யம் பிரிட்டன். பல மதத்தை சார்ந்தவர்களும் வாழும் இந்தநாட்டின் தலைநகரம் லண்டன் மாநகரம். இங்கு சைவம் வளர்க்கும் நமது சைவ முன்னேற்றச் சங்கத்தின் உயர்ந்த பணிகளை நேரில் கண்டு வியந்திருப்பவர்களில் நானும் ஒருவன். சைவசமயத்திற்கும் மொழிக்கும் சமுதாயத்திற்கும் நாற்பது ஆண்டுகாலம் அரும்பணி ஆற்றிவருவது போற்றத்தக்கதாகும். எதிர்காலத்தில் பல நல்ல திட்டங்களை அமுல்படுத்துவதுடன் நூற்றாண்டு விழா காணவும் எல்லாம் வல்ல ஸ்ரீகற்பகவிநாயகர் திருவடிகளைப் பிரார்த்தித்து வாழ்த்துகிறோம்.

அன்புடன்

K. Pitchai

SIVANERIKAZHAKAM
SIVAGANGAI DIST
PILLAYARPATTI-630 207

K.பிச்சைக்குருக்கள்
பிள்ளையார்பட்டி

Ph: 0091 (0)4577-264275. H/P: 00919443362320 / 9842462320
Website: www.pitchaianna.com / e-mail: pitchaianna@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ




# சிவாசார்யர் அறக்கட்டளை (பதிவு)

"ஸ்ரீ ஸாம்பமூர்த்தி சிவாசார்யர் ஸதனம்"

புதிய எண் 207, தம்பு செட்டித் தெரு, சென்னை - 600 001.

# SIVACHARYAR TRUST (Regd.)

"Sri Sambamurthy Sivacharyar Sadanam"

207, Thambu Chetty Street, Chennai - 600 001.

Phone : 98400 99954 Web. www.sivacharya.org




பெறுநர்:

சைவ முன்னேற்ற சங்கம்,
பிரித்தானியா.

அன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய சிவநேயச் செல்வர்கள் அனைவருக்கும் எங்களது பணிவான வணக்கங்கள். "சிவம்" எனில் அனைத்து வித நன்மைகளையும் தன்னுள் அடக்கி உள்ள பரம்பொருள் என்று ஆகமங்கள் கூறும் உண்மை. போஜதேவர் எனும் அரசர் "தத்வபிரகாசிகா" எனும் நூலில் "சித்கண: ஏகோ வ்யாபி.. .. .. "என்று "ஏக: " - "அத்விதீய:" சிவபெருமான் ஒருவரே பரம்பொருள் என்றும் அவரே இந்த பிரபஞ்சத்திற்கு காரணமானவர் என்றும் தெளிவுபடுத்துகிறார். நமது வழிகாட்டிகளாக விளங்கும் அனைத்து சிவத் தொண்டர்களும் இவ்வுண்மையை விளக்கிடவே முயற்சி செய்துள்ளனர்.

"வேதம் புதுமை செய்" என்ற மஹாகவி பாரதியாரின் வாக்கிற்கு ஏற்ப பிரித்தானியா ராஜ்யத்தில் சைவ முன்னேற்ற சங்கமானது ஸ்தாபிக்கப்பட்டு கடந்த நாற்பது ஆண்டுகளாக மிகச் சிறந்த முறையில் அனைவரும் தெரிந்து, தெளிந்திட தனது பணிகளை செய்து வருகிறது என்பது அனைவரும் அறிந்ததே. "முயற்சி திருவினையாக்கும் என்பதற்கு இணங்க பல கடுமையான சூழ்நிலைகளிலும் இடையறாது இந்த சிவத்தொண்டினை தாங்கள் செய்து வருவது அப்பெருமானின் சித்தமே. தங்களைப் போன்ற உயர்ந்த பக்குவமுடைய ஆன்மாக்களை அவரது தொண்டிற்கு அங்கமாக இருக்கச்செய்தல் என்பது சிவப்புண்ணியமே. தங்களின் சங்கத்துடன் எமது தந்தையார் சிவஸ்ரீ தி.ஷ. சாம்பமூர்த்தி சிவாசார்யர் அவர்களும் எங்கள் குடும்பத்தார் அனைவருமே அதீத அன்பு உடையவராக இருப்பதும் இறையருளே. சங்கத்தின் 17 ஆம் ஆண்டு நிறைவு விழாவில் எமது தந்தையாருக்கு " சைவாகம ஞான கலாநிதி " என்று கௌரவித்தது தனி ஒருவருக்கு என்று இல்லாமல் ஆதிசைவர்கள் அனைவரையும் சிறப்பித்ததாகவே நாங்கள் கருதுகிறோம்.

தங்களின் பணி மேலும் தொடர்ந்து சைவ உலகிற்கு குறிப்பாக இளையதலைமுறையினருக்கு ஒரு வழிகாட்டியாக விளங்கிடவும் தங்களின் அனைத்து விதமான தர்ம காரியங்கள் எவ்வித தடையுமின்றி வெற்றியடையவும் சிவப்பரம்பொருளின் சக்தியாக விளங்கிவரும், உலகத்திற்கு தாயாக அருள்பாலித்து வரும் எங்கள் அன்னை ஸ்ரீ காளிகாம்பிகையை பிரார்த்திக்கின்றோம்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

அன்புடன்

ஸ்வாமி சதாசிவோம் சிவாசார்யர்
தி.ஸா.காளிதாஸ சிவாசார்யர்
தி.ஸா.ஷண்முக சிவாசார்யர்
சென்னை , இந்தியா
18-10-2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ENFIELD NAGAPOOSHANI AMBAAL TEMPLE

## என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயம்

HINDU TAMIL CULTURAL ASSOCIATION (ENFIELD)

இந்து தமிழ் கலாச்சார சங்கம் (என்பீல்ட்)

61-65 Church Lane, Edmonton, London, N9 9PZ

Tel: 020 8884 3333/4333 info@ambaal.org www.ambaal.org Charity No: 1143043


# வாழ்த்துரை

என்பீல்ட் நாகபூசணி அம்பாள் துணை நிற்க.

அகவை நாற்பதை கொண்டாடும் சைவ முன்னேற்ற சங்கம் அரவணிந்த நாயகி அருளாலும், ஆரணி சடைகடவுள் ஆடவல்லான் அருளாலும் மேன்மேலும் சைவ சமுகபணி தொடர வாழ்த்துகின்றோம். பூமிப்பந்தில் பரந்து வாழும் ஈழத்தவர்கள் தாம் வாழும் பிரதேசங்களில் தமது சமூகத்திற்கும், தமது எதிர்கால சந்ததியினர்க்கும் நல்ல காரியங்களை செய்வதற்காக பல சங்கங்களையும் ஆலயங்களையும் நிறுவி தன்நலம் கருதாமல் பணி செய்கின்றார்கள் . அவ்வகையில் இலண்டனில் நாற்பது ஆண்டுகளிற்கு முன் இலங்கை சைவ முன்னேற்ற சங்கம் போன்று இங்கும் உருவாகப்பட்டதே சைவமுனேற்ற சங்கம் ஆகும்.

ஆரம்ப காலம் தொட்டு இன்று வரை தாம் கொண்ட கொள்கையிலிருந்து நழுவாமல் அறப்பணி ஆற்றி வருகின்றது. இன்று ஈஸ்ட்ஹாமில் சொந்த கட்டிடத்தில் ஆடவல்லானுக்கு சிதம்பரம் போன்றே ஆலயம் அமைத்து நித்திய, நைமித்திய, காமிய வழிபாடுகள் செவ்வனே ஆற்றி வருகின்றார்கள். அது மட்டுமின்றி ஆண்டுதோறும் சான்றோர்களையும் சிவாச்சாரியார்களையும் போற்றி பாராட்டி கௌரவப்படுத்தும் சங்கமாக இச்சங்கம் விளங்குகின்றது. இதுமட்டுமின்றி சிறார்களை ஊக்குவிக்கும் முகமாக பாடசாலை ஒன்றை நிறுவி தமிழ், சமயம், மற்றும் கலை வகுப்புகளையும் நடாத்திவருகின்றார்கள். அத்தோடு அரங்கேற்றம் செய்த மாணாக்கர்களை கௌரவிப்பு செய்து அவர்களையும் ஊக்குவிக்கின்றார்கள். இதற்கும் மேலாக அந்திம கிரியைகள் செய்வதற்கும் இலங்கையில் இருந்து சைவ குருமார்களையும் இங்கு அழைப்பித்து சிறப்பாக அந்திம கிரியைகளை செவ்வனே செய்து வருகின்றார்கள்.

சைவ சமயத்தின் முடிந்த முடிவாக ஏற்றுகொள்ளப்பட்ட சைவ சித்தாந்தம் பற்றிய அறிவு, புலம் பெயர்நாடுகளில் குறைவாக காணப்பட்டது. அதனை நிறைவு செய்யும் வகையில் திருவாவடுதுறை ஆதினத்தின் அருளாசியுடனும், அவர்களின் வழிகாட்டலிழும் சைவசித்தாந்த பயிற்சிப்பட்டறை ஒன்றை சைவப்பெரியார் வ.இ. இராமநாதன் அவர்களின் முயற்சியால் செந்நெறிச் செம்மல் ஆய்வாளர் யோ. பற்றிமாரன் அவர்களை முதன்மை ஆசிரியராக கொண்டு நிறுவினர். இவ் சைவசிந்தாந்த பயிற்சி பட்டறையில் பயின்ற பலர் இன்று இத்துறையில் பட்டம் பெற்று திகழ்கின்றனர். நூல்கள் உருவாக்கவும், சைவநெறியில் ஒழுகவும் சைவ முனேற்ற சங்கம் முதன்மை தாய் சங்கமாக விளங்குகின்றது. மேலும் சிறப்பாக நாற்பதாவது ஆண்டில் நாற்பது திருமணம் செய்து வைப்பது போற்றுதல்குரியது.

இத்தகைய உயர்ந்த பணிகளை ஆற்றும் சைவமுனேற்ற சங்கம் இலண்டனில் பல ஆலயங்களில் ஆண்டுதோறும் பெரிய புராணம் கூறும் 63 நாயன்மார்களின் வரலாற்றை தொடர் உரையாக ஆற்றி வருகின்றாகள் . இவ்வுரையை நிகழ்த்த சிறுவர் முதல் பெரியவர்கள் வரையுள்ள அறிஞர்பெருமக்களை கொண்டு நிகழ்த்துவது போற்றுதற்குரியது. அதுமட்டுமின்றி அறுபத்துமூவர் குருபூஜையும் நிகழ்த்தி வருகின்றார்கள். இலண்டனில் நடைபெறும் மாநாடுகள் தேர்திருவிழாக்கள் போன்றவற்றிக்கும் அனைத்து வகையான உதவிகளையும் புரிந்து வருகின்றார்கள். “தன் கடன் பணி செய்வதே” எனும் உயர்ந்த கருத்தை வேதமாக கொண்டு விளங்கும் சைவ முன்னேற்ற சங்கம் பணி தொடர என்பீல்ட் நாகபூசணி அம்பாளை பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

வளர்க பணி.

என்பீல்ட நாகபூசணி அம்பாள் ஆலய
சிவாச்சாரியார்கள், அடியார்கள்.

தெய்வீகத் திருப்பணியில்
இந்து தமிழ் கலாசார சங்கம் (என்பீல்ட்)

“ஆலயம் தொழுவது சாலவும் நன்று”

இரந்தோர்க்கு ஈவதும் உடையோர் கடனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
அகில இலங்கை இந்துமாமன்றம்
(இலங்கை இந்துமன்றஅமைப்புகளினதும் ஆலய நம்பிக்கைபொறுப்புகளினதும் ஒன்றியம்)
ALL CEYLON HINDU CONGRESS
(Federation of Hindu Religious Associations and Temple Trusts in Sri Lanka)

தலைவர்
President:
கந்தையாநீலகண்டன்
*KandiahNeelakandan*
*Phone: 2580807 (Res)*
*2371100 (Off) - Fax : 2371111*
*neela@mnlaw.lk*

பொதுச் செயலாளர்
Hony. General Secretary:
வேலுப்பிள்ளைகந்தசாமி
*VelupillaiKandasamy*
*Phone: 2586620 (Res)*
*Mobile: 071-5349150*
*vkandasami@gmail.com*

பொருளாளர்
Hony. Treasurer:
அ.கயிலாசபிள்ளை
*AbiramiKailasapillai*
*Phone: 2575566 (Res)*
*Fax : 2575472*
*hariomak@gmail.com*

18/10/2017

தலைவர் /செயலாளர்,
சைவ முன்னேற்றச் சங்கம் (UK),
இலண்டன்.

**வாழ்த்துச் செய்தி**

எமது சமயப் பெரியார், புத்திஜீவிகள் மற்றும் ஆன்மீகப் பற்றாளர்கள் ஒன்றிணைந்து இற்றைக்கு 40 ஆண்டுகளுக்கு முன்னர் ஐக்கிய இராச்சியத்தில் சைவ முன்னேற்றச் சங்கத்தை அமைத்து அதனூடாக சமய மற்றும் சமூகப் பணிகளை முன்னெடுத்து வருகின்றனர். அப்பணிகளின் உச்ச நடவடிக்கையாக இலங்கையின் பலபாகங்களிலும் வாழும் எமது இந்து சமூகத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள 40 மணமக்களை தேர்ந்தெடுத்து கடந்த 15-09-2017 ந் திகதி பம்பலப்பிட்டி மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஒத்துழைப்புடன் திருமணத்தை நிறைவேற்றி வைத்துள்ளனர். வெகுவிமரிசையாக இடம்பெற்ற இந்நிகழ்வில் மணமக்களின் உறவினர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து சிறப்பித்தனர். சைவ முன்னேற்றச் சங்கம் (UK) இன் முழு அனுசரணையுடன் நடைபெற்ற இந் நிகழ்வுக்கு தாலி, கூறை, மோதிரம் உட்பட மணமக்களுக்கும் குடும்பத்தினருக்குமான போக்குவரத்து செலவு, உணவு, பணப்பரிசு என்பனவும் இச்சங்கத்தால் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வை எமது தமிழ் சமூகம் பாராட்டியதுடன் இது தொடர்பான மெச்சுரைகள் சகல ஊடகங்களிலும் ஒலி-ஒளி பரப்பப்பட்டன.

இவ்வாறான போற்றுதலுக்குரிய சமய சமூகப் பணிகளை ஆற்றிவரும் சைவ முன்னேற்றச் சங்கம் (UK) தனது பணிகளை மேலும் விஸ்தரித்து எதிர்காலத்தில் சிறந்த சேவைகளை ஆற்ற வேண்டுமென எல்லாம்வல்ல சிவகாமி அம்பாள் சமேத நடராஜப் பெருமானை வேண்டி இச செய்தியை நிறைவு செய்கின்றேன்.

"மேன்மை கொள் சைவநீதி, விளங்குக உலகமெல்லாம்"

கந்தையா நீலகண்டன்
தலைவர்

வே.கந்தசாமி
பொதுச் செயலாளர்

தலைமையகம்: இல.91/5,சேர். சிற்றம்பலம் ஏ. கார்டினர்மாவத்தை,கொழும்பு– 02, இலங்கை.
Head Office: No 91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha, Colombo – 02, Sri Lanka.
தொ.பேசி/Phone : 2434990 www.hinducongress.lk தொ.நகல்/Fax : 2344720
hinducongress@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










HSB
SARAVANAA BHAVAN
VEGERTARIAN RESTAURANT

ILFORD · HARROW · EASTHAM · SOUTHALL
WEMBLEY · CROYDON · TOOTING





PLATINUM
LOUNGE

463 ALDBOROUGH RD S, ILFORD IG3 8JW
020 8111 1119

PARTY PARADISE

463 ALDBOROUGH RD S, ILFORD IG3 8JW
020 8553 9857



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# RiverSure

Financial Services

***Building Business on reputation is our goal***

## Need a mortgage?

Make sure it's the right one.



You've spent all that time finding the right home - surely you should spend some time finding the right mortgage. We can help you do just that. Your home may be repossessed if you do not keep up repayments on your mortgage.

**Get the right advice now, contact us on:**

Tel: 0208 905 8881 / 07956334347

LG05, China House, 401 Edgware Road,
London NW2 6GY

A fee of 1% of loan amount with minimum fee payable of £895 with an outset payment £295 payable when you apply for a mortgage, and balance to be fully paid upon receipt of offer. we will also be paid commission from the lender.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Past Presidents Messages

## முன்னாள் சங்கத் தலைவர்களின் எண்ணங்கள்

உ

சிவஞானச்செல்வி. சமுகசீலர். வைத்திய கலாநிதி

திருமதி இந்திரா சிவயோகம் FRCS(Eng.)FRC.Ophth

நேத்திர சத்திர சிகிச்சை நிபுணர்



**பதவிக்காலம்:** 1977 – 1978

தூக்கிய திருவடி உடைய திருச்சிற்றம்பலவரும் அருள்மிகு சிவகாமி அம்பாளும் கோயிலாகக் கொண்ட சைவ முன்னேற்ற சங்கத்தின் 40 பதாவது ஆண்டு விழா மிகச் சிறப்புடன் நடைபெற எம்பெருமான் பெருமாட்டியின் அருள் சம்பூரணமாகப்பெறவும், சங்கத்தின் சேவைகள் யாவும் திறம்பெற இயங்கவும் வாழ்த்தி,'

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க இமைப்பொழுதும் எம் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க' என விடை பெறும்

திருமதி. இந்திரா . சிவயோகம்

சுழியா வரும் புனல் இழியாது ஒழிவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Past Presidents Messages

## முன்னாள் சங்கத் தலைவர்களின் எண்ணங்கள்



பதவிக்காலம்: 1978 – 1982

Dr S. Navaratnam
5 Windy Hill
Hutton
Brentwood
Essex.CM132HF

10th October 2017

SAIVA MUNNETRA SANGAM UK is celebrating her 40th anniversary.

CONGRATULATIONS .

I wish to present a little fact about early history of the Sangam.

I remember in 1987 the sangam was begun as a branch of the Colombo based sangam by Mr. R. Pathmanathan,Mr VR Ramanathan and Mr.S.Ananthatha Thiyagar who had come to UK as students.

I was invited by Mr and Mrs Ramanathan to a Pooja function in the Runwell Hospital nurses quarters in Wickford, Essex. I was impressed by their dedication to the cause. They explained to me that the Sangam by holding prayer meetings in homes of Saivaite people could encourage the parents, children and others to understand some aspects of Saivaism and ways of worship. I agreed with their aims and objectives and offered my full support.

During that time I was an established consultant rheumatologist leading the department of Rheumatology at Basildon and Orsett hospitals.I was able to appoint doctors and therapists to work in the NHS department under my leadership. All the doctors and therapists some of them Tamils of Indian origin joined the Sangam on my advise as members and took active part. I was also playing an active social role among Tamils in UK being a founder member and past chairman of Standing Committee of Tamil Speaking people which was the first Registered charity for Srilankan Tamils in UK .My active involvement in Saiva munnetra Sangam brought in some of the senior well to do professionals like Dr K Arumugam,Mr NS

Kandiah,Mr Paramsothy,Mr Ratnasingam Mr Ramachandran Mr N Satchthanandan, Mr Gnanasoorian and several others who attended Pooja ceremonies and annual celebrations which were held in the lounge of our home where one hundred people could be contained .In annual Vizhas I used to arrange musicians from UK to perform . Some renouned speakers also participated .One of those speakers was Mr Varadarajan a minister from Indian High commission in UK.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Past Presidents Messages

முன்னாள் சங்கத் தலைவர்களின் எண்ணங்கள்

The Pooja ceremony was taken care of by the original organisers of the Sangam but the other activities were undertaken by ladies from the families involved and by well wishers who came from further afield in London.

I appreciated the Bhajans led by late Mrs Vasuki Pathmanathan who had a melodious voice and knowledge to sing Thevarams and devotional songs. Late Dr R Thayaparan , our close relative,who was a consultant Psychiatrist in the area joined the Sangam on my request and served as chairman after my retirement..During his tenure the Sangam was registered as a UK charity entirely by his hard work and expertise. This was an important milestone in the growth of the Sangam

We also conducted a School to teach children Saivaism and Tamil.

The school functioned in a ground floor room of our house for months,and then moved to primary school premises in Billericay in Essex.

After some years through the efforts of Mr Ramanathan the Sangam moved to East London where a large number of Tamils lived. Now the Sangam is well established. They are running a successful Tamil school and a Nadarajar temple.

I appreciate their dedication and diplomatic management of the organisation. Even though the office bearers change the core of the Sangam remains unshaken. I am pleased that the activities of the organisation draw wide support from the Tamil community in UK.

The Sangam is well known not only in UK but also in Srilanka and Canada.

I whole heartedly support the Sangam and feel proud to have been involved in their growth during the early years.The Sangam which was brought by three dedicated Saivaites like a sapling of Banian tree from Srilanka has grown spread around and provides shadow and service to Tamil community in UK and Srilanka taking part in many charitable activities. I wish them many more years of growth and service to humanity.

Navaratnam

Dr S.Navaratnam.FRCP.DCH.D.Phys.Med London.

பணையீது அல்லது நெடும் புனல் ஏகேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Past Presidents Messages

## முன்னாள் சங்கத் தலைவர்களின் எண்ணங்கள்

## மறைந்த முன்னாள் தலைவர்களின் குடும்பத்தினர் எங்களை வாழ்த்துகிறார்கள்



பதவிக்காலம்: 1982 – 1985

மறைந்த முன்னாள் தலைவர் DR.தயாபரன் அவர்கள் வெள்ளி விழாவின் போது எழுதிய வாழ்த்து: சமூக சேவையே சிறந்த சேவை என்ற தீர்வுடன் கடந்த 25 ஆண்டுகளாகப் பணி செய்யும் சைவ முன்னேற்றச் சங்கத்திற்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள். தொடர்ந்து இன்னும் பல காலம் மக்களுக்கு உதவி செய்ய வேண்டிய ஊக்கம், இச்சங்கத்திற்கும் அதன் உறுப்பினர்களுக்கும் தீராத ஆர்வமாக இருக்குமென எண்ணுகிறோம். மிக முக்கியமாக பிறநாடுகளில் இப்படியான உணர்வை வளரச் செய்வது கடினம். இந்தக் கடுந்தொழிலை செய்ய வேண்டிய மன உறுதியை, உள்ளத்தை எல்லாம் கடந்து இருக்கும் எங்கும் உள்ள எல்லாம்வல்ல உருவம் இல்லாத பரம்பொருள் ஊக்கம் தரும் என்று வணங்குகின்றேன்

இ. தயாபரன் 25.08.2002

சங்கம் தொடர்ந்து நல்ல பணிகள் செய்து இன்னும் பல்லாண்டுகள் சிறப்புடன் திகழ வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

திருமதி சிவகுமாரி தயாபரன் 18.10.2017



பதவிக்காலம்: 1985 – 1988

I have been given this opportunity to wish our beloved Saiva Munnetta Sangam a very Happy 40th Birthday. Our late father, Dr V Balasegaram had the privilege of holding the position of President from 1986-1988; a role which he thoroughly enjoyed.

My father believed the Sangam was more than a building or school, it was and always will be the people who represent it. It was their passion to deliver services through Hindu concern which allowed the Sangam to flourish and to help so many people.

So on behalf of my late father, my mother and family I would like to wish Saiva Munnetta Sangam UK very Happy 40th Birthday, may your good work continue for many more years to come.

Arunan Balasegaram 18.10.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Past Presidents Messages

## முன்னாள் சங்கத் தலைவர்களின் எண்ணங்கள்



### திரு. கு. சிதம்பரப்பிள்ளை (1989 - 1995)

**பதவிக்காலம்:** 1988 – 1995

அடியேனுக்கும் சைவ முன்னேற்றச் சங்கத்திற்கும் உள்ள தொடர்பு ஒரு நீண்டகால உறவாகும். கொழும்பில் கடந்த 65 வருடங்களாக இயங்கிவரும் தாய்ச் சங்கத்திற்கு 1970ல் எனக்கு சேவையாற்றும் பலன் கிடைத்தது. அதன் காரணமாகவும் திரு. இராமநாதன் அழைப்பினால் 1984ம் ஆண்டு ஐ. இ. சைவ முன்னேற்றச் சங்கத்தின் சாதாரண உறுப்பினராக இணைந்து கொண்டேன். அன்றுதொட்டு இன்றுவரை விசுவாசமாக பல தொண்டுகள் செய்து மக்கள் சேவை மகேசன் சேவை என்பதைப் பின்பற்றி வந்துள்ளேன். உன் கடமையைச் செய் பிரதிபலனை எதிர்பார்க்காதே. பதவியைச் தேடிச் செல்லாதே அது உன்னை நாடி வர வேண்டும். இவ் வகையில் சங்கத்தின் ஆட்சிக்குழு உறுப்பினராக, உப தலைவராக, தலைவராக, அறங்காவலராக, அங்கத்துவச் செயலாளராக பல பதவிகளை வகித்து தொடர்ச்சியாக 32 வருடங்கள் சேவையாற்றி மனத்திருப்தியுடன் நடைபெறப் போகின்ற 40வது ஆண்டு விழாவிற்கு இந்தச் சிறு குறிப்பை அனுப்புவதில் மட்டற்ற மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகின்றேன்.

எனது தலைமைப் பதவிக் காலத்தில் (1989-1995) சங்கம் ஒரு புதிய பரிணாமம் பெற்றது. முன்பு வீட்டு பஜனை, சமய நிகழ்ச்சிகளை உறுப்பினர்களின் இல்லங்களில் நடத்திய காலம் மாறி "சைவ சமய/இந்து கருத்துணர்வினூடாக சமூக சேவை" என்ற கோட்பாட்டிற்கு வடிவம் கொடுக்கப்பட்டது. 1990ல் மரணக் கிரியைகளை சங்கம் ஆரம்பித்தது. ஆனால் 1999ல்தான் சைவக் குருக்கள் இலங்கையிலிருந்து வரவழைக்கப்பட்டு பணியில் ஈடுபடுத்தப்பட்டார். இச்சேவை தொடர்ந்து நடைபெறுகின்றது. கடந்த 6 வருடங்களாக இதன் தொடர்பாளராக இருந்து பல கிரியைகளை ஒழுங்கு படுத்தி ஆத்ம திருப்தி அடைந்துள்ளேன். 1993 தை மாதம் கலசம் எனப்படும் காலாண்டு சஞ்சிகை வெளியீடு ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரை தொடர்கிறது. 1994 ஏப்பிரல் மாதத்தில் நால்வர் முதியோர் நிலையம் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து நடைபெறுகின்றது. சைவ முன்னேற்றச் சங்கத்தின் வளர்ச்சியில் ஒரு முக்கிய அம்சம் 1995 ஏப்ரலில் பூர்த்தியாகியது. சங்கத்திற்கென ஒரு மனை வாங்கப்பட்டது. 6 ஆண்டுகளாக வீடு வீடாகச் சென்று பணம் சேர்த்தும், வங்கியில் பெற்ற கடனாலும் இம்முயற்சி திருவினையாகியது. எமது பணிகள் பல இதில் நடைபெற்று வருகின்றன. இதே மனையில் கடந்த 9 வருடங்களாக அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத நடராஜப் பெருமான் அருள் பாலித்து வருகின்றார். அவனின்றி அணுவும் அசையாது. ஆலயம் தொழுவது சாலவும் நன்று. மனமது செம்மையானால் மந்திரம் ஜெபிக்கத் தேவையில்லை. அத்தோடு சங்கத்தின் இலவச சட்ட ஆலோசகராகப் பணி செய்து வருகின்றேன். இவ்வாறான சமூக சமய பணிகளை 40 வருடமாக நான் செய்வதற்கு ஊந்து சக்தியாகவும் முக்கிய காரணமாகவும் இருப்பவர் எனது இல்லத்தரசியாகும்.

சைவ முன்னேற்றச் சங்கத்தைப் பொறுத்தவரையில் சைவ சமயத்தையும் அதனூடாக சமூகப் பணி, இளம் சந்ததியினருக்கு எமது காலாச்சாரம் பண்பு தமிழ் மொழி கற்றல் போன்றவற்றை கடந்த 40 வருடங்களாகச் செய்து வருவதற்கு இறையருளும், மக்கள் ஆசியும் கிடைத்துள்ளது. சைவ சமயக் கோட்பாட்டிற்கு அமைய உண்மை, தூய்மை, கடமை, கண்ணியம், சுயநலமற்ற பொது நலத்துடன் எமது சங்கத்தினர் பலர் பணியாற்றுகின்றார்கள். இது தொடர வேண்டும். பொன் விழா, வைர விழா எனப் பல விழாக்களைக் காண்போம். வாருங்கள் எங்களுடன் சேர்ந்து சேவை செய்யுங்கள். முக்கியமாக இளம் சந்ததியினர்தான் எமது எதிர்காலம். சைவ முன்னேற்றச் சங்கம் உங்கள் உடமை. அதனை வளர்ப்பதும் பாதுகாப்பதும் உங்கள் கடமை.

வாழ்க சைவ முன்னேற்றச் சங்கம்.
வளர்க அவர்களின் பணி.

குமாரசாமி சிதம்பரப்பிள்ளை
அறங்காவலர்/ சட்ட ஆலோசகர்

ஐயம் புகினும் செய்வன செய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Past Presidents Messages

## முன்னாள் சங்கத் தலைவர்களின் எண்ணங்கள்

### திரு. இ. பத்மநாதன்



பதவிக்காலம்:
1995 - 1998

சைவ முன்னேற்றச் சங்கம் இந்த நாட்டில் அங்குராப்பணம் செய்யப்பட்ட நாள் என் கண் முன் நிற்கின்றது. 21.8.1977 அன்று தெரிவு செய்யப்பட் ஆட்சிக் குழுவின் பன்னிரண்டு உறுப்பினர்களில் அடியேனும் ஒருவனாக இணைந்து கொண்டேன்.

அந்தச் சங்கம் படிப்படியாக வளர்ந்து இன்று 40 வயதைப் பூர்த்தி செய்வதை எண்ணிப் பெருமிதம் அடைகின்றேன். 1995 முதல் 1998ம் ஆண்டு வரை சங்கத்தின் தலைவராகக் கடமை புரிய இறைவன் எனக்கு ஒரு சந்தர்ப்பத்தைத் தந்தது எனக்குக் கிடைத்த பாக்கியமாகும்.

இன்று இந்தச் சங்கம் வளர்ந்து ஸ்ரீசிவகாமி அம்மை சமேத சிதம்பரேஸ்வரப் பெருமானின் அழகிய அருள் மிக்கத் திருக்கோயிலுடன் திகழ்வது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. ஓர் ஆலயம் அமைத்துக் கொண்டு பணிகளைத் தொடரும் நீங்கள் விரைவில் ஆலயத்தை விரிவாக்கி அதன் வாயிலாகச் சங்கத்தின் பலதரப்பட்ட சேவைகள் மக்களுக்குச் சிறப்பாக அமைய வேண்டுமென இறைவனை வணங்கி வாழ்த்துகிறேன். ஆண்டு விழாவின் வெற்றிக்கும் எனது வாழ்த்துக்கள்.

வணக்கம்.

---

### திரு வி. நாகரட்ணம்



பதவிக்காலம்:
1995 - 1998

சைவ முன்னேற்றச் சங்கத்திற்கு கடந்த 33 வருடங்களுக்கு மேலாக செய்த சேவையை பெருமையாக எண்ணுகின்றேன். ஆரம்பத்தில் ஆட்சிக்குழு அங்கத்தவனாகச் சேர்ந்து, பின் ஒரு வருடத்தில், சங்கம் இயங்குவதற்கு ஒரு கட்டடம் தேவையென்று ஆட்சிக்குழு கருதியபோது, என்னை அதன் கட்டடத் திட்டச் செயலாளராக 6 வருடங்கள் பணியாற்றச் செய்தது.

இக் காலத்தின்போதுதான் தற்போது சங்கம் இயங்கும் இக்கட்டடம் வாங்கியதையிட்டு நான் மிகவும் பெருமையடைகின்றேன். பின் சைவ முன்னேற்றச் சங்கத்தின் பொருளாளராக தெரிவு செய்யப்பட்டு 4 வருடங்கள் பொருளாளராக இருந்து பின்பு சங்கத்தின் உப-தலைவராக பணியாற்றியதைத் தொடர்ந்து 1999ம் ஆண்டளவில் அதன் தலைவராக தெரிவு செய்யப்பட்டேன். இக் காலத்தில்தான் சங்கத்தின் தேவைகளுக்காக "இசை இன்பம்" என்ற நிகழ்ச்சியை தொடர்ந்து மூன்று வருடங்களாக நடத்தி அதில் கிடைத்த நிதியைக் கொண்டு சைவ முன்னேற்றசங்க கட்டடத்தில் திருத்த வேலைகளை முன்னெடுத்தோம். பின்பு மீண்டும் சங்கத்தின் பொருளாளராகி, தற்போது அதன் காப்பாளர்களில் ஒருவராக இருந்து வருகின்றேன்.

சைவ முன்னேற்றச் சங்க சேவைக்காலத்தின்போது என்னோடு இணைந்து சேவை செய்த அனைத்து ஆட்சிக்குழு உறுப்பினர்களுக்கும் என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

வி. நாகரட்ணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Past Presidents Messages

## முன்னாள் சங்கத் தலைவர்களின் எண்ணங்கள்

சிவமயம்

"தொண்டர் திலகம்"

**வ.இ.இராமநாதன்**

3 The Orchard,
Wick Ford,
Essex
SS12 0HB
England
00441268 766624
*vrramanathan@hotmail.com*



**பதவிக்காலம்:**
2001 – 2003

மதிவளர் சடைமுடி மன்று ளாரைமுன்
துதிசெய்யும் நாயன்மார் தூய சொல்மலர்ப்
பொதிநலன் நுகர்தரு **புனிதர் பேரவை**
விதிமுறை உலகினில் விளங்கி வெல்கவே. (பெரியபுராணம்)

இந் நாட்டில் கடந்த நாற்பது ஆண்டுகள் சைவசமய கருத்துணர்வூடாக சிவநெறிக்கும் செந்தமிழுக்கும் நல்ல சமய சமூக பணிகள் ஆற்றி இன்று அதனுடைய நாற்பதாவது ஆண்டு நிறைவு விழாவை பிரித்தானியா நாட்டில் மிக சிறப்பாக கொண்டாடும் இச் சங்கத்தில் கடந்த 40 ஆண்டுகள் தொடர்ந்து தொண்டாற்றக் கிடைத்தமை அடியேனுக்கு வாழ்வில் கிடைத்த பெரும் பாக்கியமாக கருதுகின்றேன். அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் பொழிந்த இறைவனுக்கு முதற்கண் நன்றி கூறி பிரார்த்திக்கின்றேன்.

1965ஆம் ஆண்டு தொடக்கம் 1974ஆம் ஆண்டு வரை கொழும்பு கொம்பனித்தெரு அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய ஆலய மண்டபத்தில் வளர்ந்து வந்த கொம்பனித்தெரு சைவ முன்னேற்ற சங்கத்தில் பத்து ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றி இந் நாட்டிற்கு 1975ஆம் ஆண்டு வந்த போது அச் சங்கத்தின் பிதாமகன் எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய தெய்வத்திரு. கந்தையா பாலசுப்பிரமணியம் அவர்கள் எனக்கு விடுத்த அன்பு வேண்டுகோளிற்கு அமைய 1977 ஆகஸ்ட் 21ஆம் திகதி அன்று அன்பர் திரு சதாசிவம் ஆனந்ததியாகர் அவர்களுடன் சேர்ந்து அடியேன் வாழ்ந்து வந்த ரன்வெல் என்னும் கிராமத்தில் 46 ஸ்டாப் கவுசஸ் றோட், ரன்வெல், விக்போர்ட்,எசெக்ஸ், SS11 7PZ என்ற முகவரியில் அமைந்த இல்லத்தில் மங்களகரமாக திருவிளக்கேற்றி அங்குரார்ப்பணம் செய்து பிரித்தானியா நாட்டில் ஆரம்பித்து வைத்தேன்.

நால்வர் நெறியில் நாற்பது ஆண்டுகளாக இச் சங்கத்தை தொண்டுள்ளமும், தியாகசிந்தையும் கொண்ட பதின்மூன்று தலைவர்கள் நல்ல முறையில் அவ்வப்பொழுது இருந்த ஆட்சிக்குழுவினரின் உதவியுடனும் அங்கத்தவர்களின் ஆதரவுடனும் மிகவும் திறம்பட நடாத்தி, இந் நாட்டில் பலரும் போற்றும் ஒரு சமய சமூக ஸ்தாபனமாக அங்கீகாரம் பெற்று கொடுத்துள்ளார்கள். இத் தருணத்தில் இவர்கள் யாபேரையும் சிரம் தாழ்த்தி வணங்குவதோடு, பாராட்டி நன்றி கூறி மகிழ்கின்றேன்.

பிரித்தானியா சைவ முன்னேற்ற சங்கம் இந் நாட்டில் ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி வாழையடி வாழையாக.... இன்னும் பற்பல ஆண்டுகள் இந் நாட்டிலும், கடல்கடந்தும் பல நிறைவான சமய சமூக பணிகளை ஆற்றி எமது வருங்கால சந்ததியினருக்கு எமது சமயத்தையும் மொழியையும் பாதுகாக்கும் ஒரு அரணாக விளங்கும் என யான் உறுதியாக நம்புகின்றேன். இப்பாரிய அறப்பணியை ஏற்று வருங்காலத்தில் சங்கத்தை வழி நடத்த வரும் தலைவர்களும், ஆட்சிக்குழு உறுப்பினர்களும் தொண்டுள்ளத்தோடு தமது பணிகளைச் செய்யவேண்டும் என மிக பணிவாக வேண்டுகின்றேன்.

இலங்கைத்திருநாட்டில் பத்து ஆண்டுகளும் அதனைத் தொடர்ந்து பிரித்தானியா நாட்டில் 40 ஆண்டுகளும் மொத்தமாக 50 ஆண்டுகள் சைவ முன்னேற்ற சங்க ஆட்சிகுழுவில் தொடர்ந்து தொண்டாற்றும் பேறு கிடைத்தமை அடியேனது வாழ்நாளில் இறைவன் தந்த பெரும் கொடையாகும்.

2017ஆம் ஆண்டு தனது நாற்பாதாவது ஆண்டு நிறைவு விழாவை கொண்டாடும் இந்நேரத்தில் இச் சங்கம் சூரிய சந்திரர் உள்ளவரை இந்நாட்டில் சிவநெறிக்கும், செந்தமிழுக்கும், சமுதாயத்திற்கும் பணிசெய்ய, சைவ முன்னேற்றச் சங்கத்தில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் எல்லாம் வல்ல ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத சிதம்பரேஸ்வரப்பெருமானின் திருவருளும் நால்வர் பெருமக்களது குருவருளும் கிடைக்கப் பிரார்த்தித்து விடைபெறுகின்றேன்.

"மேன்மை கொள் சைவ நிதி விளங்குக உலகமெல்லாம்"

தொண்டர் திலகம்
சைவநெறிக் காவலர்

திரு வயிரமுத்து இரத்தினம் இராமநாதன்
16 ஆகஸ்ட் 2017

*"LOVE ALL SERVE ALL"*

அஃகமும் காசும் சிக்கெனத் தேடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Past Presidents Messages

## முன்னாள் சங்கத் தலைவர்களின் எண்ணங்கள்

### திரு. ஆ. கனகசபை



பதவிக்காலம்:
2003 – 2004

சங்கத்தின் புனிதமான தலைமைப் பதவிகளைப் பொறுப் பெடுத்தவர்களுள் நானும் ஒருவன். நான் முதலில் அங்கத்துவச் செயலாளராகக் கடமை புரிந்து அதன் பின் பல பதவிகளை வகித்து என்னால் இயன்ற பணியைச் செய்ய உதவினேன். எனது தலைமைப் பதவிக் காலத்தில் இறந்தவர்களுக்கான சேவையை சைவ முறைப்படிச் செய்ய சைவக் குருக்கள் ஒருவரை இந்நாட்டிற்கு முதன்முறையாக வரவழைக்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டு அது வெற்றி கண்டது. இதனால் இங்கே இங்கிலாந்து சைவத் தமிழ் சமுதாயம் நல்ல பயனைத் தொடர்ந்து பெறுகின்றார்கள்.

சங்கம் இப்படியான அரும் சேவைகளுடன் தமிழ்ப் பாடசாலை, நடராஜர் ஆலயம் எனப் பலதரப்பட்ட வழிகளில் மக்களுக்கு நல்ல சேவையைச் செய்து வருகின்றார்கள். அத்துடன் இலங்கையில் வாழும் வசதி குறைந்த குடும்பங்களுக்குப் பல வகைகளில் நிதியுதவி செய்தும் வருகிறார்கள். இதையிட்டு மிக்க மகிழ்ச்சி. இவ்வகையில் இச்சங்கம் மேலும் வளர்ந்து இன்று நாற்பதாவது ஆண்டைக் கொண்டாடுகின்றது என்றால் இப்பெருமை இச்சங்கத்தை வளர்த்த அனைவருக்கும் சாரும். இனியும் இச்சங்கம் பல்லாண்டுகள் நல்ல சேவைகள் செய்து என்றும் சிறப்புடன் திகழ வேண்டுமென எனது நல்லாசிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்கின்றேன்.

நன்றி வணக்கம்.

---

### திரு. இ. பசுபதி



பதவிக்காலம்:
2004 – 2005

1999ம் ஆண்டு சைவ முன்னேற்றச் சங்கத்தின் ஆட்சிக் குழுவில் இணையும் நல்ல வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. ஒரு செயற்குழு உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டு பின் துணைப் பொருளாராகக் கடமை புரிந்து சங்கத்தின் பொருளாளராகவும் தலைவராகவும் பணி செய்யும் சந்தர்ப்பம் எனக்கு இறையருளால் கிடைத்தது.

இன்று நாற்பதாவது ஆண்டை சங்கம் கொண்டாடுகிறது என்றால் அந்த மகிழ்ச்சியை நானும் எனக்குள் உணர்ந்து கொண்டாடுகின்றேன். பல மாணவர்களுக்குத் தமிழ் கல்வியையும், சைவ அறிவையும் சொல்லிக் கொடுத்துவரும் சிறப்பான பணியைச் செய்து வரும் இவர்களின் சேவை மகத்தானது. இது போன்ற இன்னும் பல வழிகளில் அயராமல் உழைத்துக் கொண்டிருக்கும் இவர்களுக்கு எனது வாழ்த்துக்கள்.

உண்மையான சில தொண்டர்களால் இச் சங்கம் நிலைபெற்று நிற்கின்றது. இப்படிப்பட்ட தொண்டர்கள் பலர் மேலும் இணைந்து இச்சங்கம் பல்லாண்டுகள் நல்ல சேவைகள் செய்து என்றும் சிறப்புடன் திகழ வேண்டுமென இறைவனை வணங்கி நல்லாசிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்கின்றேன்.

வணக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Past Presidents Messages

## முன்னாள் சங்கத் தலைவர்களின் எண்ணங்கள்



**பதவிக்காலம்: 2005 - 2009**

சைவ முன்னேற்றச் சங்கம் இவ்வாண்டு தனது 40 ஆண்டுகளை பூர்த்தி செய்து 41வது வருடத்தில் காலடி எடுத்து வைக்கிறது. 40 வருடங்கள் என்பது கிட்டத்தட்ட ஒரு மனிதனின் பாதி வாழ்நாள்.

இந்த 40 வருடங்களில் சங்கம் பல சேவைகளை வெற்றிகரமாக ஐக்கிய இராட்சியத்திலும் எமது தாய் நாட்டிலும் செய்து முடித்திருக்கிறது. அதில் இந்த வருடம் நடந்த "40ல் திருமணங்கள் 40" ஒரு வைரமாக எங்கள் நினைவில் பதியப்பட்டுள்ளது.

நமது சங்கம் வளர்வதற்கு பலர் பல வழிகளில் உழைத்திருக்கிறார்கள். சிலர் தங்கள் குடும்ப நேரத்தையும் அலுவலக நேரத்தையும் கூட சங்கத்தின் வளர்ச்சிக்குத் தருகிறார்கள் தந்து கொண்டும் இருக்கிறார்கள். வேறு சிலர் 40 வருடமாக, தொடர்ந்து உழைத்திருக்கிறார்கள்.

பல பேர் இலைமறை காயாக இருந்து உழைக்கிறார்கள். குறிப்பாக தமிழ் பாடசாலை ஆசிரியர்கள், யோகா வகுப்பு ஆசிரியர்கள், கலசம், தோரணம் ஆசிரியர்கள் என பலர் சங்கத்தின் வளர்ச்சிக்கு ஊதியமில்லாமல் உழைக்கிறார்கள். இவர்களையும் இந்த நேரத்தில் நினைவு கூர்ந்து நன்றி தெரிவித்து சங்கம் மேலும் வளர வேண்டுமென நடராஜப் பெருமானை வேண்டி வழிபடுகிறேன்.

உன் கடன் எனைத் தாங்குதல்

என் கடன் பணி செய்து கிடப்பதே

**சூரிப்பிள்ளை பாலசிங்கம்**
பட்டையக் கணக்காளர்

உண்டி சுருங்குதல் பெண்டிற்கு அழகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Past Presidents Messages

## முன்னாள் சங்கத் தலைவர்களின் எண்ணங்கள்



பதவிக்காலம்: 2009 - 2013

சமுதாயத்தின் தேவை கருதி பஞ்சபாண்டவர்களைப் போன்று ஐந்து பேர் சேர்ந்து ஐக்கிய இராச்சியத்தில் ஆரம்பிக்கப்பட்ட சைவ முன்னேற்றச் சங்கம் (UK) தனது நாற்பதாவது ஆண்டு நிறைவு விழாவை கொண்டாடி வருகின்ற இவ்வேளை எனது மனதில் பெரும் மகிழ்ச்சி பெருகுகின்றது.
எனது தொலை நோக்கு சிந்தனையில் உதித்த இளையவர்களை உள்வாங்கி புதிய சிந்தனையோடு சைவ முன்னேற்றச் சங்கம் இளையவர்களை சமுதாய சிந்தனையோடும் கலை கலாச்சார விழுமியங்களோடும் வாழ வழிவகுக்க வேண்டும் என்ற சிந்தனை இன்று நனவாகிக் கொண்டிருப்பதை அறிய பெருமகிழ்ச்சியடைவதோடு, இரு கரம் கூப்பி இளையவர்களை வந்து இணைந்து செயற்படுமாறு வேண்டி நிற்கின்றேன்.

எனது தலைமைக் காலத்தில் பல முயற்சிகள் மூலம் சங்கத்தை நல்ல முறையில் செயற்பட உறுதியளித்து இருந்தபோது என்னோடு தோள் நின்று உழைத்த அனைத்து ஆட்சிக்குழு, நலன் விரும்பிகளுக்கு இன்று 40ஆவது ஆண்டு நிறைவு விழாவில் நன்றி கூறுவதோடு இனி வரும் காலத்தில் சைவ முன்னேற்றச் சங்கம் நல்ல சேவைகளைச் செய்ய எனது முழு ஒத்துழைப்பை வழங்குவதோடு, வெளிநாட்டுத் திட்டச் செயலாளராக கடமையாற்றி 40இல்40 திருமணங்களை நடத்தியதில் பெரு மகிழ்வடைவதோடு, சைவமுன்னேற்றச் சங்கத்திற்கு எனது வாழ்த்தையும், நன்றியையும் தெரிவித்து மகிழ்வோடு நிறைவு செய்கின்றேன்.

என்றும்
V.C. வாமனானந்தன்
வெளிநாட்டுத் திட்டச் செயலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பெருமையுடன் 21 வது வருடத்தில்

# RUBY'S
CATERING

020 8799 7180

www.rubyscatering.co.uk - mail@rubyscatering.co.uk

| உன்னத உணவு | வைபவ மண்டபம் | மகோன்னத உபசரிப்பு |
| --- | --- | --- |





திருமணம் – பிறந்த நாள் – பூப்புனித நீராட்டு விழா

கலாச்சார நிகழ்ச்சிகள் – விருந்து உபசாரம்

அரங்கேற்றம் – வளைகாப்பு – பெயர் சூட்டும் விழா





ACCREDITED SRILANKAN CATERERS @

Hilton   THISTLE HOTEL   Holiday Inn

உட்பட பிரபல ஹோல்களில் அங்கீகாரம் பெற்ற

தரம் மிகு இலங்கை மற்றும்

தென்னிந்திய உணவுத் தயாரிப்பாளர்கள்.......

Tel: 020 8799 7180

mail@rubyscatering.co.uk - www.rubyscatering.co.uk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sri Merupuram Mahabhadrakali Amman Devasthanam,
ஸ்ரீ மேருபுரம் மஹாபத்ரகாளி அம்மன் தேவஸ்தானம், லண்டன்
271 Forest Road, Walthamstow, London, E17 6HD, United Kingdom.
www.srimerupuramuk.org Tel : 0208 531 0872 email: merupuram@gmail.com

உ
ஓம் சக்தி

சைவர்களின் மகிமையை வெளிப்படுத்தும் சின்னம் திருநீறு. ஆலயங்களில் சைவர்கள் எவ்வாறு வழிபடுகின்றார்களோ, சைவசமயத்தை எவ்வாறு பேணிப் பாதுகாத்து வருகின்றார்களோ, அதற்கமைவாக லண்டன் மாநகரில் ஈஸ்ற்காம் பகுதியில் சைவ முன்னேற்றச் சங்கம் இன்றைக்கு முப்பத்தொன்பது ஆண்டுகளாக சைவ அந்தணர்களும், சைவப் பெருமக்களும் இணைந்து சைவமும், தமிழும் தழைத்தோங்கி வளர்த்து இன்று நாற்பதாவது ஆண்டைச் சிறப்பாக நடத்துவதையிட்டு நானும், லண்டன் வாழ் சைவர்களும் பெருமைப்படுகினறோம்.

" சந்தனம் பொதியச் செந்தமிழ் முனியும்
சௌந்தர பாண்டியன் எனும் தமிழ் மாறனும்
சங்கப் புலவரும் தழைத்தினி தோங்கிய
மங்கல பாண்டி வளநாடென்ப"

என்னும் சம்பந்தரின் கூற்றுக்கமைவாக சைவமும் தமிழும் தழைத்து மேன்மேலும் சிறப்புற அகிலமெல்லாம் போற்றி வணங்கும் சொர்ண சிம்மாசனேஸ்வரி ஸ்ரீ மேருபுரம் பத்திரகாளி அம்பாளின் பாதார கமலங்களை வணங்கி வாழ்த்துகின்றேன்.

" லோக சமஸ்த்தா சுகினோ பவந்து"

இங்ஙனம்
ஸ்ரீகயிலை காளிதாசன் சிவஸ்ரீ லிங்கலோகநாதக்குருக்கள்

ஓம்சக்தி

கீழோர் ஆயினும் தாழ உரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LONDON SWAMI AYYAPPA CENTRE
Address: 453 High Street North, Manor Park, London, E12 6TJ
Tel: 020 8586 6761 Email: info@londonswamiayyappacentre.org
Website: www.londonswamiayyappacentre.org

சைவ முன்னேற்ற சங்கம் - இங்கிலாந்து.

இறை பக்தியும், தமிழ் மணமும் ஒன்றாகி சேவை உள்ளம் கொண்ட அன்பர்களே வணக்கம்.

பொருள் தேட வந்த இடத்தில்; இறை அருளுடன், சேவையும் செய்து பிறருக்கு உதவும் அருளும் தேடிவைக்க வேண்டும் என்ற தொலை நோக்குடன் நாற்பது ஆண்டுகளிற்கு முன்பே நீங்கள் செயற்பட்டமைக்கு எமது சங்கம் இன்று உங்களுக்கு சிரம் தாழ்த்தி, கரம் கூப்பி, கண்கள் பனித்து நன்றி தெரிவிக்கின்றது. நாற்பது ஆண்டுகளிற்கு முன்பு தொடங்கப் பெற்ற சைவ முன்னேற்ற சங்கமானது, இன்று ஆலமரம் போல் தழைத்து, பல விழுதுகளைத் தாங்கி, பெருவிருட்சமாக இங்கிலாந்தில் கால் பதித்துள்ளது.

ஒவ்வொரு செயல்களின் பலனையும் அனுபவிப்பவர்கள் அதன் பின்னணியில் உள்ள உயர்ந்த எண்ணங்களையும், தியாகங்களையும், கடின உழைப்பையும் அறிந்து நன்றி மறவாது இருப்பது மனிதப் பண்பின் சிறப்பாகும். இதற்காக உழைத்த பலரையும் நாம் நினைந்து பாராட்டுவோம். வாழ்த்துவோம். சங்க வளர்ச்சியின் போது உறுதுணையாய் நின்று, இன்று உயிருடன் இல்லாது உணர்வாய் நிற்கும் அன்பர்களையும், அவர்களின் அருஞ் செயல்களையும் நாம் நினைவு கூர்ந்து போற்றுவோமாக.

"காலத்தினாற் செய்த உதவி சிறிதெனினும் ஞாலத்தில் மாணப் பெரிது' என்பது திருக்குறள் எங்கள் இலண்டன் ஐயப்ப நிலையமும் தங்களிடம் உதவி பெற்றிருக்கிறது. எங்களிற்கு உதவி தேவைப்பட்ட வேளையில், மனமுவந்து செய்த பல உதவிகளையும், எமது நிலையம் வளர்வதற்கு கொடுத்த ஆக்கத்தையும், ஊக்கத்தையும் நாங்கள் என்றென்றும் மறக்க மாட்டோம். எனவே, நீங்கள் செய்த உதவிகளிற்கு எமது மனமார்ந்த நன்றி நன்றி நன்றி!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LONDON SWAMI AYYAPPA CENTRE
Company No. 8953221

**LONDON SWAMI AYYAPPA CENTRE**
**Address: 453 High Street North, Manor Park, London, E12 6TJ**
**Tel: 020 8586 6761 Email: info@londonswamiayyappacentre.org**
**Website: www.londonswamiayyappacentre.org**

நாற்பதாவது ஆண்டைக் கொண்டாட விளையும் சைவ முன்னேற்ற சங்கம், தனது இனிய சேவையை விளக்குவதுடன், தமிழ்மொழியையும், சமயத்தையும் மேலும் வளர்க்க துணை புரியும் என்பது எங்கள் அசையாத நம்பிக்கை ஆகும். சைவ முன்னேற்றச் சங்கத்திற்கு அதன் பெருமையைக் கொண்டாட எல்லாத் தகுதியும் இருக்கின்றது. ஆதலால் நாற்பதாவது ஆண்டை மிகச் சிறப்பாகக் கொண்டாடுவீர். விழா மேலும் சிறப்படைந்து இனிதே நிறைவு பெற இறையருள் துணை நிற்க வேண்டுமென ஆசீர்வாதத்துடன் வாழ்த்துகிறோம்.

இப்படிக்கு

LONDON SWAMI AYYAPPA CENTRE
COMPANY NO. 8953221

கூர் அம்ப ஆயினும் வீரியம் பேசேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# மங்களபதி ஸ்ரீ வேல்முருகன் ஆலயம்

## Sri Vel Muruhan AAlyam

Http://www.muruhankovil.co.uk  ☎: 0208 333 1954  Fax: 0872 110 4150  ✉:muruhankovil@gmail.com


Mr Mugunthan Sathasiva Sharma
Sri Vel Muruhan AAlyayam,
4a Eastdown Park, Lewisham
London
SE13 5HS

அன்புள்ள சைவ முன்னேற்றச் சங்க அறங்காவலர், அங்கத்தவர்களுக்கு வணக்கம்,

மனித சுதந்திரத்தின் தயக்கமாம் ஐக்கியராச்சியத்தின் தலைநகர் லண்டன் மாநகரின் கிழக்குப்பகுதியில் 1997 ம் ஆண்டு தொடங்கி பல நல்ல பணிகளை மக்களுக்கு செய்து வருவது அனைவரும் அறிந்ததே.

பல பிரமாணங்களாக பரிமானித்து காலத்தின் தேவாயறிந்து சமூகப்பணி ஆற்றுவது இன்றியமையாதது. எவ்வாறு மருந்துகள் ரோகநிவாரணம் வழங்குகின்றதோ அதுபோலவே சமூக அமைப்புக்கள் எதிர்கால சந்ததியினர்களது தேவைகளை அறிந்து சைவ சமய கோட்பாடுகளுக்கு அமைய நிவாரணம் வழங்க முன்வருதல் இன்றியமையாதது.

அறம்காவலர்கள், அங்கத்தவர்களது துணை கொண்டு சைவ முன்னேற்றச் சங்கம் தமது சேவையினை தாயகத்திலும் லண்டன் மாநகரின் கிழக்குப்பகுதியில் செவ்வனே கடந்த 40 வருடங்களாக ஆற்றிவருவது மக்கள் மத்தியில் அறம்காவலர்கள் மற்றும் அங்கத்தவர்களுக்கு கிடைத்த அங்கீகாரம் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

எதிர்காலத்தில் சங்கம் மேலும் வளர்ச்சிகள் பற்பலகண்டது தேசங்கள் கடந்து சேவைதனை பூரிந்திட இறைவனை பிரார்த்திக்கின்றேன். இதுவரை காலமும் ஆற்றியபணி மேலும் சிறக்கவும் எதிர்கால கனவுகள் நித்ராசனமாவும் மங்களபதி ஸ்ரீ வேல்முருகன் கருணை பூரியட்டும்.

நன்றி வணக்கம்

திரு முகுந்தன் சதாசிவ சர்மா
பொதுச்செயலாளர்
மங்களபதி ஸ்ரீ வேல்முருகன் சுவாமி ஆலயம்


Sri Vel Muruhan AAlyam, 4a Eastdown Park, Lewisham London SE13 5HS

Registered Charity No 1125790


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவை விட்டகலாதவர்



**38 ஆண்டுகள் தன்னுடைய தெய்விகக் குரலால் கூட்டுவழிபாடு மூலம் சங்க நிகழ்ச்சிகளில் எங்களுக்கு இறை பக்தியை ஊட்டி பரமனைப் பாடிப் பரவிய திருமதி வாசுகி பத்மநாதன் அவர் கள் 23.03.2105 அன்று இறைவனை அடைந்தார்கள்.**

சங்கத்தின் முன்னேற்றத்திற்குத் துணை நின்றவர். வழிகாட்டியவர் சைவப் பெரியார்.
தமிழறிஞர் 21.08.2013 அன்று அமரத்துவம் எய்திய முத்துத்தம்பி சிவராசா
அவர்களையும்

சங்க ஆட்சிக் குழு உறுப்பினராக இருந்து எங்கள் பணிகளுக்குத் தோள் கொடுத்து
17.08.2013 அன்று அமரத்துவம் எய்திய திருமதி. சொர்ணகாந்தி சாமித்தம்பி அவர்களையும்

எங்களின் வளர்ச்சிக்காகத் தொண்டாற்றி மண்ணுலகை விட்டுப் பிரிந்த ஆத்மாக்கள்
அனைவரையும் நாம் நினைவில் கொண்டு பிரார்த்தனை செய்கின்றோம்.
ஓம் சாந்தி சாந்தி சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவயோக சுவாமிகள்

- திருமதி அருளாம்பிகை குணராசா



கற்பனைக் கடந்த சோதியான அளவிலா விளையாட்டுடைய இறைவன் ஆன்மாக்களை ஈடேற்றும் பொருட்டு காலத்துக்கு காலம் அருளாளர்களை தந்தருள்வார். சிவபூமியாம் ஈழத்திருநாட்டின் உச்சித்திலகமெனத் திகழும் யாழ்ப்பாணத்தில் தோன்றினார். எளிய தோற்றமும் எளிய வாழ்க்கையும் உடைய சுவாமிகள், தாயினும் நல்ல தனைவனாக எல்லோர் உள்ளத்தையும் அறிந்து கேட்காமலே அவரவர் விரும்பியதை அருள் புரிந்தார். எல்லாம் வல்ல சித்தராகிய யோக சுவாமிகள் நற்சிந்தனை என்னும் நல்லமுதத்தை அருளிச் செய்திருக்கிறார். எல்லாம் வல்ல குரு வணக்கமாக "என்னையெனக் கறிவித்தான் எங்கள் குருநாதன்" எனும் பாடல் வேதாந்த சித்தாந்த கருத்துக்கள் நிறைந்த எமக்கு வழிகாட்டும் பாடலாகும். நல்லூர்க் கந்தன் பேரில் பாடல்கள் பாடியிருக்கிறார்.

"நல்லூரான் திருவடியை நாள் நினைத்த
மாத்திரத்தில் எல்லாம் மறபேனடி கிளியே
இரவு பகல் காணேனடி" என்றும்

நால்வர் தேவார திருவாசகங்களின் சாரமாக பல நற்சிந்தனைகள் அருளிச் செய்திருக்கிறார். நீ யார் என்பதற்கு "நீ உடம்பன்று மனமன்று புத்தியன்று சித்தமன்று நீ ஆத்மா. ஆத்மா ஒரு நாளும் அழியாது இது மகான்களுடைய அனுபவ சித்தாந்தம். இந்த உண்மை உனது உள்ளத்தில் நன்றாக பதியக்கடவது. ஆனால் நீ கவனிக்க வேண்டியது ஒன்றானது. அதாவது தரும நெறியின் பிசகாதே எவ்வுயிரும் பெருமான் முன்னிலை என்று சாதனை செய் கடவுள் உள்ளும் புறம்மும் உள்ளவர்" இதன்படி நடந்தால் மக்கள் சமாதானமாக சந்தோஷமாக வாழலாம். கடினமான கருத்துகளை இலகு தமிழில் அருளிச் செய்திருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னைத் தன்னால் அறிந்திட வேண்டுமே
நாமம் சொல்லுவோம் சிவ நாமஞ் சொல்லுவோம்
அந்தமும் ஆதியும் அகன்றோன் வருக
அண்ட சராசரம் அவன் திருமேனி
அன்னை பிதா குருவாகி ஆண்டுமாண்ட தெய்வம்
எங்கள் குருநாதன் எழில்நல்லை வாசன்
சிவநாமஞ் சொல்லித் தெளிவோமே
திருவடி கண்டு களியோமே
நல்லூரான் கிருபை வேண்டும் - வேறென்னவேண்டும்
நமைப்பிரியாதென நம்பிட வேண்டும்
ஒருபொல் லாப்புமில்லை என்ற மருந்து
இன்மை மறுமைக்கும் ஏற்ற மருந்து
ஓங்கார மேடையின் மேலேறி நின்றேன்
ஒன்றையுங் காணேனடி – குதம்பாய்

தேவார திருவாசகம் திருமந்திரம் திருக்குறள் தாயுமானவர் சித்தர்கள் பாடல் எல்லாம் நிறைந்ததுதான் சிவயோக சுவாமிகளின் இலகு தமிழ் அமுதப் பாடல்கள். யாழ்ப்பாணத்தில் நம் காலத்தில் தோன்றிய மகானைப் போற்றி அவர் நற் சிந்தனை எனும் அமுதத்தை நாளும் பருகி ஆனந்தமாக என்றும் வாழ்வோம்.

தெய்வத்தை நம்பு முழுமனத்தோடு நம்பு. உலகில் உனக்கினிதெனத் தோன்றும் எவற்றிலும் இனியதாக நினை. அதைவிட வேறில்லை என்று நினை. இருக்கும் போதும் நிற்கும் போதும் நடக்கும் போதும் நினை. உனது நரம்பிலும் தசையிலும் இரத்தத்திலும் தெய்வமென்னும் நினைவே நிறைவதாக. தானில்லை கடவுளே அருக்கிறாரென எண்ணு. கடவுளைக் கும்பிடுதலே வாழ்வின் இலக்காக வைத்துக் கொள். எவன் அதை நினைக்கிறானோ அவன் அதுவாகிறான். கடவுளை உனது உள்ளத்தில் வைத்து வளர்ப்பாயாக எல்லாம் அவருடைய செயலாகும். ஈற்றில் எல்லாம் அவனாகவே காணப்படும்.

குருபரன் அடியினை போற்றுதல் இன்பம்
குருபரன் அருட்பணி ஆற்றுதல் இன்பம்
குருபரன் அருள் வாக்கு ஆக்கிடும் இன்பம்
குருபரன் சரண்புகக் கூடிடும் இன்பமே. நற்சிந்தனை

எப்பவோ முடிந்த காரியம்
முழுதும் உண்மை
நாமறியோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 40ல் திருமணங்கள் 40 அழைப்பிதழ்

## சைவ முன்னேற்றச் சங்கம் (UK)

அடுத்து வரும் சில பக்கங்களில் இவ்வாண்டு வெற்றிகரமாக நிறைவேறிய

**40ல் திருமணங்கள் 40**

திட்டம் பற்றிய தொகுப்பைப் பார்க்கலாம்



## நாளைய கனவை நனவாக்கும் நாற்பது

**The best preparation for tomorrow is doing our best today**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sacred gifts serve a divine purpose

The Sangam has achieved 40 years of service to the community since its inauguration in 1977. By the grace of God and the support of our well-wishers, the Sangam has grown over the years and has undertaken numerous endeavours to help people, and reaching this significant milestone spurs us on to achieve even greater heights in community service.

To commemorate the 40th anniversary of the Sangam, various charitable ventures are being planned. One of our ventures is to organise the wedding ceremonies for 40 couples in Sri Lanka who have been affected by the war and, thus, are in an abysmal economic state.

The Sangam aims to fund the costs involved in organising a wedding, so that couples who are unable to proceed with wedded life due to financial constraints are able to do so. We humbly request your support in this venture to achieve our goal of organising 40 wedding ceremonies, to give these couples a helpful start to their family lives. Without the assistance of community-minded individuals, just like you, we aren't able to serve those in need.
100% of donations will go towards the ceremonies and none will be spent on administrative costs. Further information about this project can be found on the Sangam's website.



Please consider marking our 40th year anniversary with a gift for these young couples.

**"If you want to celebrate a happy occasion, do it by helping those who are in need."**

கொள்கையை சொல்லின் எவருக்கும் பகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமணத் திட்டத்தால் இல்வாழ்க்கையைத் தொடங்கியுள்ள திருநிறைச் செல்வர்களும் திருநிறைச் செல்விகளும்

பிரதீப் தயானி
வசந்தரூபன் ஜென்சி
காந்தரூபன் நந்தினி
பிரதீபன் கீர்த்தனா
லட்சுமிகாந்தன் நிஷாந்தினி
சக்திவேல் வேணுஷா
சந்திரன் டெல்சியா
சுரேஷ் ரதிதேவி
நவநீதன் நிலக்ஷா குமாரி
கெணடி றோஜிதா
ஜனாந்தன் கயந்தினி
அசோக்குமார் தர்மினி
விஜயகுமார் தாமரைக்குமாரி
ஜேசுதாசன் லிலோக்சனா
தயாபரன் மனோஜி
கணராஜன் தர்மினி
செந்துஷன் கஜந்தினி
தனுஜன் சதுர்ஷனா
கிருஷ்ணமூர்த்தி விசித்திரா
கபில்ராஜ் கிருஷாலினி
விஜயபாலன் அனோஜாகுமாரி

கசுன் கிசாந் தம்பிகா பிரியதர்ஷனி
லாரன்ஸ் செல்வி
கிராந்த ரமேஸ்குமார மதுஷாக்கி
பார்திபன் பரீதா
கஜிந்தன் தர்சினி
காமினி இராஷானி
பாலஸ்ரீதரன் நிரோஜா
முருகமூர்த்தி தர்மிளா
ரமேஷ்காந் யனுஜியா
சுசிகரன் விவேக்கா
சஞ்ஜீவன் ருக்சிகா
கபில்தேவ் புனிதயாழினி
கஜேந்திரன் நிவேதிகா
பிரிந்தன் சிந்துஜா
முகுந்தன் ரஜிதா
சதீஷ்குமார் பவானி
ருஷாந்தன் காஞ்சனா
டசியன் பமிலா
ரெஜீபன் சுகன்யா
கணோஜன் அஜந்தா
சன்ஜீவன் ருக்சிகா

நீங்கள் என்றென்றும் மனமகிழ்வுடன் இனியவர்களாக வாழ வேண்டுமென நாம் பிரார்த்தித்துக் கொண்டும் வாழ்த்திக் கொண்டும் இருப்போம்.

வாழ்க வளமுடன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







சான்றோர் என்கை ஈன்றோர்க்கு அழகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீராக் கோபம் போராய் முடியும்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நறுமணத் திருமணங்கள் நாற்பது

யாவும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளார்
யானும் நீயும் எவ்வழி யறிதும்
செம்புலப் பெயனீர் போல
அன்புடை நெஞ்சம் தாங்கலந் தனவே (குறுந்தொகை 40)

உலகின் ஒரு கோடியிலே, முன்பின் அறிமுகமற்று இருக்கும், ஆண், பெண் இணைகளை இல்வாழ்க்கையில் இணைப்பமுது ஊழே -திருக்கோவை

அன்ன மென்னடை அரிவையைத் தந்த மன்னிருந் தெய்வத்தை மகிழ்ந்துரைத்தது

என்ற துறையுள் " தெய்வத்தை மகிழ்தல்" என்ற பகுதியுள் கீழ்க் கடலிலே கிடந்த வளையின் துளையுள் மேல் கடலில் கிடந்த நுகம், அலைக்கரங்களால் எற்றுண்டு தானே பொருந்தினாற்போல் 40 இளந்தம்பதியினரை திருமண பந்தத்தால் இணைத்து ஒன்றுபடுத்திய பெருமையை இலண்டன் சைவ முன்னேற்றச் சங்கம் தனது 40 ஆவது ஆண்டுச் சாதனையாக இலங்கைத் தலைநகரில் நிகழ்த்திக் காட்டியது வியப்பிற்குரியது, பாராட்டுதற்குரியது.

கன்னிகாதான அறமே மிக உயர்ந்த அறமாக சாத்திரங்கள் கூறுகின்றன. திருமண வயது வந்ததும் இல்லறத்தில் இணைய முடியாமல் சமுதாயச் சீர்குலைவுகளில் சிக்கி சருகாக உதிர்கின்ற மக்களைப் பார்க்கின்றோம். அத்தகையவர்களைத் தேர்ந்து, அவர்களின் வாட்டத்தைப் போக்கி, உதவிகளைச் செய்து, சமூக அந்தஸ்து உள்ளவர்களாக உயர்த்தி சட்டப்படி ஒரு திருமணத்தை நடத்துவது என்பதே மிக அரிய செயல். ஆனால் அந்தச் சவாலைத் துணிவுடன் ஏற்று 40 திருமணங்களை ஒரே முகூர்த்தத்தில் நடத்துவது அதுவும் முறையாக வினை தீர்க்கும் விநாயகனின் திருமுன் அக்கினி வளர்த்து, அந்தணர், அறவோர் சாட்சியாக, முப்பத்து முக்கோடி தேவர்கள் சாட்சியாக, புதுப் பட்டாடைகள் பளபளக்க மங்கல மணமாலைகள் மார்பில் தவழ, புது மண மெருகு முகத்தில் பளிச்சிட, மங்கலத் திருநாண் பூட்டி மன்றத்தை தம்பதிகள் வலம் வந்தது கண்கொள்ளாக் காட்சி மட்டுமல்ல, பகீரதப் பிரயத்தனமுமாகும்

இலண்டன் சைவ முன்னேற்றச் சங்கத்தினரை எத்துணைமுறை பாராட்டினாலும் தகும். அவர்களது எண்ணக்கருவிற்கு உருவம் கொடுத்து உதவிகள் புரிந்த அகில இலங்கை இந்து மாமன்றத்தினரின் பணி மிக உயர்ந்தது. மற்றைய மன்றங்களும் இது போன்ற ஆக்கப் பணிகளுடன் இணைந்து கொள்ளலாம்..

மணவிழாக் கண்ட மண இணைகள் ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரோடி நிற்க மனம் நிறைந்து வாழ்த்துகின்றேன்

-கலாபூக்ஷணம், வித்துவான்
திருமதி வசந்தா வைத்தியநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒரு பார்வை
# நான் பார்த்த அதிசயத் திருமணம்

**சைவ முன்னேற்றச் சங்கம் (UK) 40ஆவது ஆண்டுவிழா 28-10-2017**

இந்த 40 ஆண்டுகளில் இலண்டன் சைவ முன்னேற்றச் சங்கம் லண்டனில் செய்துள்ள முயற்சிகள், தொண்டுகள், பணிகள் ஏராளம். லண்டனில் புலம் பெயர்ந்து வந்துள்ளவர்கள் எந்த விதத்திலும் குறைகளோடு இல்லாமல் இருப்பதற்காக, அவர்களின் குழந்தைகளுக்குத் தேவையான தமிழ், சமய வகுப்புகள், பரதநாட்டிய வகுப்புகள், மற்றும் சங்கீத, வாத்திய வகுப்புகள் நடத்தியும், வயது வித்தியாசம் பாராது அனைவருக்கும் யோகா வகுப்புகள் நடத்தியும், மூத்தோர்கள் வீட்டிலிருந்து கஸ்டப்படக்கூடாது என்பதற்காக மூத்தோர் சங்கமும் நடத்திக் கொண்டிருப்பதும், சங்கத்தினர் செய்யும் அனைத்துத் தொண்டுகளும் உலகம் முழுவதும் உள்ள மக்கள் அனைவரும் அறிந்து பயன்பெற வேண்டும் என்பதற்காக "தோரணம்" மின்னிதழையும் வெளியிட்டு, அத்துடன் காலாண்டிற்கு ஒருமுறை ஆன்மிக "கலசம்" இதழையும் வெளியிட்டு. அத்துடன் இங்கு வாழ்பவர்களுக்கு உதவும் வகையில் இறுதிக்கிரியைகளை அதற்குரிய குருக்கள் மூலமாக செய்தும் வருகின்றார்கள்.

இவை அனைத்துக்கும் மேலாக எமது தாய் நாட்டில் வறுமைக்கோட்டிற்கு கீழுள்ள, வயது வந்தும் திருமணம் செய்வதைக் கனவாகக் கண்டு கொண்டிருந்த 40 சோடி மணமக்களை வெகுசிரமத்தின் மத்தியிலும் தெரிவு செய்து அவர்களின் திருமணத்திற்குத் தேவையான தாலி, கூறை, பட்டுவேட்டி, சால்வை, மோதிரங்கள், அவர்களின் வாழ்வைத் தொடங்கி வைப்பதற்காக தேவைப்படும் பண உதவியையும், அவர்கள் செய்ததை அத்திருமண வைபவத்திற்கு லண்டனில் இருந்து கொழும்பு சென்றவர்களில் நானும் ஒருத்தி என்ற முறையில் அவர்களின் திறமைகளையும், நிர்வாகத்தையும் மகிழ்ந்து பெருமிதம் அடைந்தேன். அத்திருமணத்திற்கு சமூகமளித்த அனைவருக்கும் அவர்கள் பகல் போசனம் வழங்கிய திறமைகளையும் கண்டு வியந்தது மட்டுமல்லாது அங்கு மூத்தோருக்கு அவர்கள் வழங்கிய முன்னுரிமையையும் கண்டு நான் வியந்தேன். அவர்கள் கொழும்பில் நடத்தியதையும், இங்கு செய்யும் தொண்டுகளும் நடைபெற இருக்கும் 40ஆவது ஆண்டுவிழாவும் திறம்பட நடைபெற எல்லாம் வல்ல ஸ்ரீ செல்வவிநாயகப் பெருமானை வேண்டி, வணங்கி, வாழ்த்தி நிறைவு செய்கிறேன்.

இப்படிக்கு

கருணா சேனாதிராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "ஈசன் பாதத்தை நேசமுடன் தொழுவோம்"

-பாலன் சுதாகரன்(இலங்கை)

*ஆதி ஆதி காலம் தொட்டு வந்த மதமிது*
*ஆதி மூல நாயகனைக் கண்ட மதம் இது*
*ஓதி ஓதி உண்மைதனை உரைத்த மதம் இது*
*நீதி தேவன் கோயில் கொண்டு தளைத்த மதம் இது.*

சிவத்தை முழுமுதலாக கொண்ட சமயம் சைவ சமயமாகும்.

*"யாதொரு தெய்வம் கொண்டீர் அத் தெய்வமாகி ஆங்கே*

*மாதொரு பாகனார் தான் வருவார்"*

என்பது சைவக் கோட்பாடு இது சிவன் ஒருவனே என்ற தத்துவத்தை விளக்கி நிற்கின்றது. தன்னை ஒப்பார் ஒன்றும் இல்லாத் தலைமகன்" என்று திருமந்திரம் மொழிகின்றது. தனக்கென ஈடு இணையற்ற யாவர்க்குமான ஒரே தலைவனாகிய சிவபிரானே சைவத்தினதும் முதல்வன். சிவனே பரம்பொருள் : அவனே மெஞ்ஞானம் எனப் போற்றி வாழ்வது சைவ சமயமாகும்" தனக்குவமை இல்லாதவன்" எனப் போற்றப்படும் சிவபெருமானின் எண்குணங்களில் ஒன்றான பேரருள் உடமை அவர் சகல ஜீவராசிகள் மீதும் கொண்டுள்ள அன்பாகிய கருணை வெளிப்பாட்டை உணர்த்தி நிற்கின்றது. ஆகையால் தான் அவ்வேத நாயகனை "பசுபதி" என அழைக்கிறோம். அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ் என்பதற்கு வரைவிலக்கணமாக வாழ்ந்து காட்டிய நாயன்மார்களும் அன்பு

தேடாது அழிக்கின் பாடாய் முடியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழி நின்று அருளுரை வழங்கிய ஆன்மீகத் தலைவர்களும் சைவம் காட்டும் அன்பு நெறிக்கு உதாரண புருசர்களாகத் திகழ்கின்றனர்.

உயிர்களுக்கு நாம் செய்கின்ற அன்பை இறைவனுக்கு நாம் செய்த அன்புக்கு சமானம் என்பது மூதாதையர் வாக்கு இதற்கு எடுத்துக்காட்டாய் மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற வாசகத்திற்கு இணங்க வாழ்ந்தவர் இளையான் குடிமாற நாயனார் தமக்கு உணவில்லாத துன்பம் நோக்காது திருவமுது அளித்து வந்தார். பின் சிவபெருமான் திருவருளால் சிவலோகம் அடைந்தவர். அன்பின் சிறப்பை மேலும் வலியுறுத்துவதற்காக

***"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்***
***என்பும் உரியர் பிறர்க்கு"***

என்ற அடிகள் உள்ளத்திலே அன்புடையவர் தமது உயிரையும் பிறர்க்காய் கொண்டு வாழ வல்லவர் என திருவள்ளுவர் எடுத்துரைக்கின்றார். இதற்கு சான்று பகிர்வதாக மலை வேடராம் கண்ணப்பர் திருக்குடுமித்தேவர் மீது கொண்ட அன்பை "வங்கினைப் பற்றிப் போதாவல்லுடும்பு" என்று இனிமையாகப் பாடி வெளிப்படுத்தியிருக்கின்றார் சேக்கிழார். மரப்பொந்தை விட்டு விலகாத உடம்பு போல தேவரை எப்போதும் விட்டுப் பிரியாத கண்ணப்பர் தம் இறைவனுக்காக தன்னிரு கண்களையும் அர்ப்பணித்தார். அன்றியும் ஆதியும் அந்தமும் இல்லாதவனே அன்பின் நிமித்தம் தனது உதிரத்தை பாலாக்கி தாயிழந்து ஊணின்றித் தவித்த பன்றிக் குட்டிகளுக்கு கொடுத்தார். இதிலிருந்து சிவபெருமான் சகல உயிர்கள் மீதும் அன்புடையவர் என்பது தெட்டத் தெளிவாகின்றது. இதனாலன்றோ இவர் சகல சீவ தயாபரன் என்றும் அன்பினில் விளைந்த ஆரமுது என்றும் புகழுக்குரியவராகின்றார். மனிதர்கள் ஏனைய மனிதர்கள் பால் செலுத்தும் அன்பில்தான் உலகம் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. உலகத்தில் தோன்றிய கடவுள் சார்புடைய மதங்களும் கடவுள் மறுப்புச் சமயங்களும் கூட அன்பினை பெரிதும் போற்றி உரைக்கின்றன. திருவள்ளுவர் முதலிய அற நூலாசிரியர்களும் அன்பின் சிறப்பையும் இன்றியமையாமையையும் எடுத்துரைத்துள்ளனர். சைவர்களின் இறைவன் சிவன் அவர் யார்? அவர் இயல்பு எத்தகையது? என்ற வினாக்களுக்கு திருமூலர் தரும் விடை ஆழ்ந்த பொருட்சிறப்புடையது. அன்புதான் எங்கள் சிவன் சிவம் வேறு அன்பு வேறு என்பார் அறியாமை மிக்கவர்கள் இரண்டும் ஒன்றே என்று உணரும் உணர்வில் இறைமைப்பேறு வாய்க்கும்.

***''அன்பும் சிவமும் இரண்டு என்பர் அறிவிலார்***
***அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்***
***அன்பே சிவமானது ஆரும் அறிந்த பின்***
***அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே''***

என்பது அன்பின் சிறப்புரைக்கும் பாடலாகும்.

**சைவம் மனிதநேயத்தை வற்புறுத்தும் ஓர் அன்பு நெறி சிற்றுயிர்கள் இடத்தும் கருணை காட்ட வேண்டும் என்று அது வற்புறுத்துகின்றது.** இறைவன் உலகத்தையும் நுகர் பொருட்களையும் உயிர்கள் பெற்று இன்புறுவதற்கே படைத்தளித்தான். உயிர்களிடம் இருந்து இறைவன் அன்பு ஒன்றைத்தவிர வேறு யாதொன்றும் பெற விரும்புவதில்லை **ஆனால் சமயவாதிகள் சடங்கு நெறியில் பற்றுக் கொண்டு நின்று மனிதனின் பசிக்கு உணவிட விரும்பாது இறைவனுக்கு படையல் இட்டு மகிழ்கின்றனர். இறைவன் மனிதன் அளிக்கும் உணவையும் படையலையும் உண்டு மகிழ்கின்றானா என்றால் இல்லை. இறைவன் கவனத்திலும் கணக்கிலும் அவனுக்கு படைக்கப்படும் படையல் இடம் பெறுவதில்லை. அவன் கணக்கிலும் இடம் பெற விரும்பினால் பசித்திருப்போருக்கு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உணவளியுங்கள் அதுவே அவனை சென்றடையும் அரிய பெரு நெறியென்று காட்டுகிறார் திருமூலர்.**

*''படமாடக் கோயில் பகவற்கு ஒன்று ஈயில்*
*நடமாடக் கோயில் நம்பர்க்கு ஆங்கு ஆகா*
*நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்*
*படமாடக் கோயில் பகவற்கு அது ஆமே''*

நம்பர் என்ற சொல் நம்மவர் எம்மைப் போன்ற மனிதர்கள் என்ற பொருள் தரும். மனிதனின் உள்ளத்தில் இறைவன் குடி கொண்டுள்ளான். எனவே **மனிதர்கள் இறைவனின் நடமாடும் கோயில்கள். நடமாடும் கோயில்களாகிய நம் போன்ற மனிதர்க்கு ஒன்று கொடுப்பது இறைவனுக்கு கொடுப்பதற்கு ஒப்பாகும்.**

வாழ்க்கை நிகழ்வில் இருந்து அறிந்து கொள்ள முடிகின்றது. அமைச்சராக புகழ் கொண்டு வலம் வந்த திருவாதவூரருக்கு மர நிழலிலே தியானித்து நின்று தேவாசிரியரைக் கண்டு பக்திப்பரவசம் மேலிட அவர்மேல் கொண்ட அன்பினால் தம் பதவியைத் துறந்தார். தேனினுமினிய திருவாசகம் பாடினார். அன்பினால் இறைவனுடன் ஐக்கியமானவர் மாணிக்**கவாசகர்.**

*''வெள்ளைநிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ*
*வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ*
*வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல.......''*

என்று பாடிய ஈழத்துப் பக்திமான் விபுலானந்த அடிகளார் எல்லோர் உள்ளத்திலும் அனபெனும் வற்றாத பேருற்றாய் நிலைக்க வேண்டும் என்பதை உணர்த்த விரும்புவார் போல உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது என்று அற்புதமாக சைவத்தின் மெய்க்கருத்தை புலப்படுத்துகின்றார் அந்நியர் வருகையால் சைவம் அழிந்து சென்ற போது சைவம் மீது பேரன்பு கொண்ட நாவலர் பெருமான்**"புலால் உண்ணாதவன் மெய்ச்சுவை சமயி" என்று அடித்துரைக்கின்றார் இதினின்று சகல ஜீவராசிகளையும் எம்முடன் பிறப்புக்களாய் கொண்டு அன்பு நெறி வழுவாது வாழ வேண்டும் என்ற கருத்தை கூறுகின்றார் நாவலர்.** இதே போன்று அன்பு மார்க்கம் நின்று முத்தியெய்திய சைவப் பெரியார்கள் பலர். அவர்கள் சைவ மதத்திலேயே ஒழுகி தம் இறைவன் வழி பற்றி அகத்துறுப்பென் நன்னூலாளரால் சிறப்பிக்கப்படுகின்ற அன்பு வழியில் வாழ்ந்தெய்தியவர்கள்.

ஒரு முறை வணிகர் மரபில் அவதரித்த இயற்பகை நாயனார் சிவனடியார் மேல் கொண்ட அன்பை உலகறியச் செய்வதற்காக சிவபெருமான் அடியார் வேடம் அணிந்து அவர் மனைவியாரை தம்மிடம் தருமாறு கேட்டார். "எனக்குரிய பொருட்கள் எல்லாம் சிவனடியார்க்குரியதே" என்று திருவாய் மலர்ந்து தம் காதல் மனைவியாளை ஈந்தார். இதனைக் கண்டு **"அன்பனே செயற்கரியன செய்த தீரனே" என்று ஈசனார் விளித்து"அன்பர்க்கு இல்லை என்றாது ஈந்த நீ மனைவியுடன் முத்தி அடைவாய"**. என்று அருள் கூர்ந்தார்.

ஈஸ்வரனின் அடியவராய் இறைவனிடத்து மிக்க அன்புடையவராய் விளங்கிய செம்மனச் செல்வியாரிடம் கூலியாக பிட்டை பெற்று மண் சுமந்த கதை உள்ளத்தை உருக்குவது. இத்தகையதோர் பாக்கியத்தை பெற்று சிறப்புடன் வாழ்ந்தார் செம்மனச் செல்வி. இதே போன்று இறைவனிடத்தே மிகுந்த அன்பு கொண்ட பூசலார் அவர் மனத்திலேயே சிறந்த சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த மூலஸ்தானம் கோபுரங்களுடனான சிவாலயம் அமைத்து வழிபட்டார். அவர் மனக்கோயிலுக்கு பிரதிஸ்டை செய்யும் நாளில் காடவ மன்னனும் தான் அமைத்த கோயிலுக்கு பிரதிஸ்டை செய்ய எண்ணி இருந்தான். இதை உணர்ந்த

தொழுது ஊண் சுவையின் உழுது ஊண் இனிது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரம்பொருள் பூசலாரின் மேம்பட்ட அன்பிலே திளைத்து அவருடைய ஆலயத்திலேயே கோயில் கொண்டருளினார். இறைவனின் திருநாமத்தை சொல்வதனால் மட்டுமே இறைவனின் அருளுக்கு நாம் பாத்திரர்களாக ஆகி விட முடியாது. உள்ளத்தே பூரண அன்புடன் நாம் இறைவனின் திருநாமத்தை தியானித்தோமானால் இறைவனின் அருகாமையில் நாம் இருக்க வேண்டும். உள்ளத்தே தோன்றும் தூய அன்புதான் பக்தியாக பரிணாமம் கொள்கின்றது. நாம் நம் உறவுகளிடம் செலுத்தக்கூடிய அன்பானது பெரும்பாலும் ஏதோ ஒரு வகையில் சுயநலம் சார்ந்ததாகவே இருக்கின்றது. அதே வேளையில் ஒரு தாய் தன் குழந்தையிடம் செலுத்தும் அன்பானது சுயநலமற்று இருப்பதால் அந்தத் தாயன்பை தன் தெய்வத்திடம் அவள் கொண்டிருக்கும் பக்தி என்றே சொல்லலாம்.

**இறைவனிடமான நம்முடைய பக்தியானது இரண்டு வகைப்படும். ஒன்று அச்சத்தினால் விளைவது. மற்றது மாசற்ற அன்பினால் மலர்ந்தது. இறைவனை பூஜிக்கா விட்டால் நமக்கு ஏதும் கெடுதல் நேர்ந்து விடுமோ? வாழ்க்கையில் சோதனைகளை சந்திக்க நேரிடுமோ என்பது போன்ற எண்ணங்களினால் தோன்றும் பக்தியானதுதான் அச்சத்தினால் தோன்றும் பக்தி என்பது. இது உண்மையான பக்தி இல்லை.**

வேடர் குலத்தில் தோன்றிய கண்ணப்பர் சிவபெருமானிடம் கொண்ட பக்தியும், சபரி இராம பிரானிடம் கொண்டிருந்த பக்தியும் அவர்கள் மாசற்ற அன்பினால் மலர்ந்துதான். காலங்களைக் கடந்தும் அவர்களுடைய அந்தப் பக்தியானது தோற்றம் பெறுகின்றது.இறைவனிடம் இப்படி உள்ளன்புடன் பக்தி செலுத்தாதவர்களுக்கெல்லாம் இறைவன் அருகில் இருந்தாலும் கூட தொலைவில் இருப்பவனாகவே திகழ்வான். இதைத்தான் இருந்தும் இல்லாத நிலை என்பது.

குருசேத்திர யுத்தம் தொடங்கும் போது துரியோதனனும் அருச்சுனனும் கிருஸ்ணரிடம் உதவி கேட்டுப் பெறுவதாக வருகின்றார்கள். துரியோதனனை பொறுத்த மட்டில் அவனுக்கு படை வலிமையே பெரிதாகத் தோன்றுகிறது. அருச்சுனனோ கிருஸ்ணன் பரப்ரம்ம ஸ்வரூபீ என்பதனாலேயே அருச்சுனன் கிருஸ்ணனை நேசித்தான். அந்த நேசமானது இறைவனாம் கிரு'ணனை எப்போதும் அவனுக்கு அருகிலேயே இருக்குமாறு செய்தது.

துரியோதனனுக்கு கிருஸ்ணன் தன்னைப் போன்ற ஒரு சாதாரண மனிதன் தானே என்ற அலட்சியம். எனவே அவனால் கிருஸ்ணனை நேசிக்கவோ-பூஜிக்கவோ முடியவில்லை. ஆகையினால் இறைவன் துரியோதனனை விட்டு வெகு தூரத்திலேயே இருந்துவிட்டான். இப்படி துரியோதனனைப்போல இறைவனை அறியாமலும் உணராமலும் இருப்பவர்க்கெல்லாம் இறைவன் வெகு தூரத்தில் இருப்பவன் ஆவான் என்பதையே மாணிக்கவாசகர், **"புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்குழல்கள் வெல்க"** என்கிறார். அதே மகாபாரதத்தில் மற்றொரு நிகழ்ச்சி. கௌரவ சபையிலே அகௌரவப் படுத்தப்பட்ட போது கௌரவர்களின் கௌரவமற்ற செயல் கண்டு ஆன்றோரும் சான்றோரும் தலைகுனிந்து நின்றனர். அநாதரவான நிலையில் தன் இரு கரங்களாலும் மார்பினை இறுக்கப் பிடித்தபடி **"கிருஸ்ணா கோவிந்தா"** என்றெல்லாம் கதறிக் கதறி கண்ணனை அழைக்கினறாள் பாஞ்சாலி. கிரு'ஸ்ணனின் உதவி அவளுக்கு கிடைக்கவில்லை.

காரணம் அவள் என்னதான் கதறிக் கதறி கிருஸ்ணனை அழைத்தாலும் கூட இரு கரங்களினால் தன் மார்பை இறுக்கப் பிடித்துக் கொண்டிருந்தாள். இச் செயலானது பூரணத்துவம் பெறாததையே எடுத்துக் காட்டுகின்றது. தான் கதறியும் கண்ணனின் அருள் கிடைக்காத நிலையில் ஒரு கட்டத்தில் மார்பை இறுக்கப் பிடித்திருந்த தன் இரு கரங்களையும் கூப்பியவளாக பாஞ்சாலி கிருஸ்ணனை அழைக்கின்றாள். அவ் வேளையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகவான் கிருஸ்ணணின் அருளால் அவளது கௌரவம் கௌரவ சபையில் காப்பாற்றப்படுகின்றது.

பாஞ்சாலியைப் போல் தான் என்னும் எண்ணம் அகற்றி கரம் கூப்பி இறைவனை வணங்கும்போது நம்முடைய உள்ளமெல்லாம் மகிழும் படியாக இறைவனுடைய பூரண அருள் நமக்குக் கிடைக்கின்றது.**"கரம் குவிவார் உளமகிழும் கோன் கழல்கள் வெல்க"** என்றும் **"சிரம் குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க"** என்றும் சொல்கிறார். அதாவது தலையால் பணிந்து வணங்குபவர்களை இறைவன் ஆன்மிகத்தில் உயர் நிலைக்கு இட்டுச் செல்கின்றானாம்.

யோக நெறியில் ஆறு ஆதாரங்கள் சொல்லப் பட்டிருக்கின்றன. **மூலாதாரம்,சுவாதி'ட்டானம், மணிப்பூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை** என்பவைகளே அவை. சாதகன் ஒருவன் மூலாதாரத்தில் இருக்கும் குண்டலினி சக்தியை எழுப்பி ஒவ்வொரு ஆதாரமாக உயர்த்திக் கொண்டு செல்லும் நிலையில் அந்தந்த நிலைக்கேற்ற சக்தியை அடைகின்றான். இவ்விதமாக குண்டலினியை ஆக்ஞா எனப்படுகின்ற நெற்றிப் புருவங்களின் மத்தியில் கொண்டு நிறுத்தும் போது பல அபூர்வ சித்திகள் கைவரப் பெறுவதுடன் சாதகனுடைய உள்ளமும் சதாசர்வ காலமும் ஆனந்தத்திலேயே திளைத்திருக்கின்றது. இந் நிலையினை கரம் குவிவாரின் நிலைக்கு ஒப்பிட்டால் ஆக்ஞா சக்கரத்தில் சங்கமப்படுத்தி இறைவனுடன் ஐக்கியமாகும் நிலையை சிரம் குவிவாரின் நிலைக்கு ஒப்பிடலாம்.

பிறப்பெடுத்த ஒவ்வொருவருக்கும் இறைவனிடமே சென்று ஐக்கியமாக வேண்டும் என்பதுதான் இலட்சியமாக இருக்க வேண்டும்.அந்த இலட்சியம் ஒரு பிறவியிலேயே நிறை வேறிவிடும் என்பது சாத்தியமல்ல. அதற்கும் பல பிறவிகள் தேவைப்படலாம் பல பிறவிகள் கடந்த ஒரு நிலையில் நாம் இறைவனுடன் ஐக்கியமாக வேண்டுமானால் ஒவ்வொரு பிறவியிலும் இறைவனை நாம் நினைத்துப் போற்றியபடியே இருக்க வேண்டும்.

**பதி பசு பாசம்** ஆகிய முப்பொருள்களில் பாசம் என்பது உலகிலுள்ள அனைத்து ஆன்மாக்களிலும் குடி கொண்டுள்ளது. பற்று எனப்படும் இப் பாசமானது உலகியல் வாழ்வில் எம்மை ஈடுபடச் செய்து எமது ஆன்ம ஈடேற்றத்திற்குத் தடையாய் அமைவதுடன் பொறாமை வஞ்சகம் போன்ற தீய நெறிகளுக்கும் எம்மை இட்டுச் செல்லும்.உலகப் பற்றுக்களிலிருந்து நீங்கி உயிர்களிடத்தே அன்பும் இறைவனிடத்தே பக்தியும் கொண்டு வாழ்ந்தால் உயர்வு அடையலாம் என்பது சைவ சமயத்தின் நோக்கமாகும். இவ்வடிப்படையில் பற்றுப் பாசங்களை வேரோடு களைந்து வீடு பேற்றை அடைந்தவர் காரைக்காலம்மையார். உலக வாழ்வை வெறுத்த இவர் தமது தலையாலே நடந்து கைலாசத்தை அடைந்தார். அங்கு ஒளி பொருந்த வீற்றிருந்த மாதொருபாகரைக் கண்டு அன்புப் பெருக்குத் தெளிந்த நீராய் ஓட **"ஐயனே"** என்று உணரச்சி பொங்க அழைத்தார். பின் பெரும் ஆனந்தப் பரவசத்தால் **"நான் பாட நீ ஆட வேண்டும் அதை நும் திருவடிக்கீழ் இருந்து நான் இரசிக்க வேண்டும்"** என வேண்டினார். அப்பக்தையின் பேரன்பைக் கண்டு வியந்த நடராஜப் பெருமான் அவரின் விருப்பத்தை நிறைவேற்றி வைத்தார்.

இவ்வாறு இன்ப ஊற்றாம் அன்பு சைவ சமயத்தோடு எவ்வாறு ஒன்றித் தொடர்பு உடையதாய் விளங்குகின்ற தென்பது இதினின்று தெளிவாகின்றது. ஆனால் இன்றைய சமுதாயத்தில் மும்மலங்களாக **ஆணவம், கன்மம், மாயை** என்பன ஓங்கி நிற்கின்றன. இத்தகைய அஞ்ஞானத்தால் மக்களிடையே அன்பு கொஞ்சம் கொஞ்சமாக சுருங்கி வருகின்றது. அதனாலேயே பஞ்சமாபாதகங்கள் உலகில் தலைவிரித்தாடுகின்றன. இதை விடுத்து மீண்டுமோர் ஒளிமயமான அன்பு வாழ்க்கையை **நாம் கடைப்பிடிப்பதற்கு கடவுள் வழிபாடு, ஞானநூற் கல்வி, தொண்டு செய்தல், குரு வழிபாடு:. நல்லோர் சேர்க்கை,**

**நற்செயல் புரிதல் போன்ற சில செயற்பாடுகள் நம்மிடையே வளர்த்துக் கொள்ள வேண்டும். இக் கருமங்களைச் சிரமேற் கொண்டு அன்பு நெறியில் ஒழுகும் போது ஆணவத்தின் வலி குறைந்து மானிடர் மனித நிலை பெறுவர். இவ்வளர்ச்சி கருணை கைவரப் பெறுவர், தெய்வீகத் தன்மையை அடைவர்.**

..................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம் - அன்றைய மரபும் இன்றைய நிலையும்

-வழக்கறிஞர் செல்லத்தம்பி சிறீக்கந்தராசா, B.Sc.,LL.M

மேற்படி விடயம் தொடர்பில் புகலிட நாடுகளில், நான் பெற்ற அனுபவங்கள், நான் உணரும் சைவத் தேவைகள் என்பன பற்றி இந்தக் கட்டுரையில் சிந்திக்க முற்படுகின்றேன்.

சிவ வழிபாட்டினரின் இறைவனாகிய சிவன் ஐந்தெழுத்திற்கு உரியவன், ஐந்தொழில்களைப் புரிகின்றவன், ஐம்புலன்களை அடக்க உதவுகின்றவன். அப்படிப்பட்ட சிவனுக்கு ஆற்றுகின்ற வழிபாடும், ஐந்து என்ற எண்ணிக்கை கொண்டதாக இருக்க வேண்டும் என்பது காலம் காலமாகப் பின்பற்றப்பட்டு வருகின்ற நியதி. அந்த அடிப்படையில்தான், சிவ வழிபாட்டின்போது ஐந்து திருமுறைப் பாடல்ககளைப் பாடவேண்டும் என்ற நியதி தோற்றுவிக்கப்பட்டது என்று எண்ண இடமுண்டு.

யாழ்ப்பாணத் தமிழ் மக்களின் கலாசாரம் பஞ்சபுராணக் கலாசாரமென்றும்,(அதாவது திருமுறைக் கலாசாரம் என்றும்) கந்தபுராணக் கலாசாரம் என்றும் சொல்லப்படுவதுண்டு. கோயில்களில் பூசெய்தல் என்ற பூசை (பூசெய்) வழிபாடு நிறைவுறும்போது, பஞ்சபுராணம் பாடுகின்ற கலாசாரம் ஈழத்தமிழராலும், புலம் பெயர்ந்து வாழுகின்ற ஈழத்தமிழர்களாலும் இன்றும் போற்றி அனுசரிக்கப்படுகின்ற சமயப் பண்பாடாகும்.

**பஞ்சபுராணம் என்றால் என்ன?**

இந்தச் சொற்றொடரைத் தமிழ் இலக்கியத்தில் முதன்முதலில் எங்கே காண்கின்றோம்? என்ற வினா ஆராய்ச்சிக்குரியது. பல கோயில்களில் பதினாறுவகையான வழிபாடுகள் முடிவடைந்ததும், பஞ்சபுராணம் பாடுவது என்ற மரபு உண்டு. முதல் ஏழு திருமுறைகளிலிருந்து ஏதாவது ஒரு தேவாரம், பின்னர் திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணப் பாடல்களில் இருந்து ஒரு புராணப் பாடல் என்று ஐந்து திருப்பாடல்களைப் பாடி மகுடம் இடுவதே பஞ்சபுராணம் பாடுதல் என்பது என்று தஞ்சாவூர் பி..எம். சுந்தரம் அவர்கள் எழுதுகின்றார்.

ஆக, பஞ்சபுராணம் பாடும் முறை, வாழையடி வாழையாகத் தென் தமிழகத்திலும் ஈழத்திலும் இடம்பெற்று வருகின்ற மரபு என்பது தெளிவாகும். ஆனாலும் "பஞ்சபுராணம் பாடுதல்" என்பதும், "பஞ்ச மந்திரம் ஓதுதல்" என்பதும் ஒன்றா? வேறா? என்பதை ஐயுற்றுச் சிந்திக்கவும் வேண்டியுள்ளது. நாவுக்கரசரின் பாடலொன்று இங்கே நினைவுக்கு வருகின்றது:-

**பஞ்ச மந்திரம் ஓதும் பரமனார்**
**அஞ்ச ஆனை உரித்து அனல் ஆடுவார்**
**நெஞ்சம் வாழி நினைந்திரு மீயச்சூர்**
**எந்தமை யுடையார் இளங் கோயிலே** (5334)

மேற்படி பாடலில், பரமன்(சிவன்) பஞ்சமந்திரம் ஓதுகின்றவராகக் குறிப்பிடப்படுகின்றார். அவர் ஓதுகின்ற பஞ்சமந்திரம் எது? என்பது ஆராயப்பட வேண்டிய ஒன்று. பஞ்சமந்திரம் என்றால். ஈசானம், தற்புருசம், அகோரம், வாமதேவம், சத்தியோயாதம் என்பன என்று கூறுவது சரியா?

நாவுக்கரசரின் வேறொரு பாடல் நம்மையெல்லாம் சிந்திக்க வைக்கிறது:-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருந்தானை மந்திரிப்பார் மனத்துளானை
வளர்மதியஞ் சடையானை மகிழ்ந் தென்னுள்ளத்
திருந்தானை இறப்பிலியைப் பிறப்பிலானை
இமையவர்தம் பெருமானை உமையாள் அஞ்சக்
கருந்தான மதகளிற்றின் உரிபோர்த்தானை
கனமழுவாட் படையானைப் பலிகொண்டு ஊர் ஊர்
திரிந்தானைத் திருவானைக் காவுளானைச்
செழுநீர்த்திரளைச் சென்றாடினேனே (6874)

மேலே சொன்ன பாடலில் " மந்திரிப்பார்" என்ற சொல்லில் அடங்கியுள்ள "மந்திரம்" எது? "சிவாயநம" என்ற அஞ்செழுத்தா? பிறிதொன்றா? இவையும் ஆராயப்பட வேண்டியவையே.

சேக்கிழாரின் பெரியபுராணத்தில் வருகின்ற ஆனாயநாயனார் புராணத்தில் இடம்பெற்ற பின்வரும் பாடல் மனம் கொள்ளத்தக்கது:-

திசை முழுதும் கணநாதர் தேவர்கட்கு முன்னெருங்கி
மிசைமிடைந்து வரும் பொழுது வேற்றொலிகள் விரவாமே
அசைய உழும் குழல்நாதத்து அஞ்செழுத்தால் தமைப்பரவும்
இசைவிரும்பும் கூத்தனார் எழுந்தருளி எதிர் நின்றார்

மேற்காட்டிய பாடலில் பேசப்படுகின்ற அஞ்செழுத்தும், நாவுக்கரசர் தமது தேவாரத்தில் பஞ்சமந்திரம் என்று குறிப்பிடுவதும் ஒன்றா? வேறா? என்பதும் ஆராய்ச்சிக்குரியன.

பஞ்சமந்திரமும் அஞ்செழுத்து மந்திரமும் ஒன்றா? வேறா? என்பது எப்படி இருப்பினும், இறைவன் இசை விரும்பி என்பது சிவ வழிபாட்டினரின் நம்பிக்கையாக இருந்து வந்திருக்கின்றது என்பதை மறுக்கமுடியாது.

இறைவனை நாதத்திற்கு உரியவனாக, நாதனாக, இசை விரும்பியாகக் கண்ட நந்தமிழ் முன்னோர்கள், இசையற்ற இறைவழிபாடு உள்ளத்தை உருக்கிக் கள்ளத்தை வெளியேற்றி உள்ளத்தைத் தூய்மைப்படுத்த முடியாது என்றும், அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் என்ற உள மாசுகளைப் போக்கமுடியாது என்றும் உணர்ந்து, பாடல், ஆடல், பல்லியம் இசைத்தல் என்பனவற்றை, வழிபாட்டிற்கென்று முறைமைப்படுத்தி வைத்துள்ளார்கள் என்பது தெளிவு. இறைவனே இசையை விரும்பினான் என்பதற்குப் பெரியபுராணமே சான்று. "பெருகிய சிறப்பின்மிக்க அர்ச்சனை பாட்டேயாகும். ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக" என்று தூமறை பாடும் வாயினன் ஆகிய இறைவன், சுந்தரமூர்த்தி நாயனாரை நோக்கிச் சொன்னதாக வரலாறு. ஆகவே இறைவனைப் போற்றிப் பாடுவதன் மூலம் அவனை வழிபட்டு உய்யலாம் என்பது சான்றோர் துணிபு.

## நாவலர் என்ன சொன்னார்?

யாழ்ப்பாணத்து ஆறுமுகநாவலர் அவர்கள் எழுதிய சைவ **வினாவிடைகள்** பெருமைக்குரிய நூல்கள் ஆகும். முதலாவது சைவ வினாவிடையில் ஒரு கேள்வி வருகிறது. **" சைவ சமயிகள் ஓதவேண்டிய வேதங்கள் எவை"** என்பது அந்தக் கேள்வி. அக்கேள்விக்குரிய விடையாக அவர் கூறுவது **"தேவாரம், திருவாசகம் என்ற இரண்டுமாம்"** என்பது. ஆனால் அதே ஆறுமுகநாவலரின் இரண்டாம் சைவ வினாவிடையில் **"தேவாரத் தோத்திரங்களை எப்படிப் பாடல் வேண்டும்"** என்று கேட்டுவிட்டு, அதற்கு விடையாக **"தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் என்னும் அருட்பாக்களை, மனம் கசிந்துருக, கண்ணீர்வர, உரோமம் சிலிர்ப்பப் பண்ணோடு பாட வேண்டும்"** என்று கூறுகின்றார். ஆறுமுகநாவலரின் விடையை நோக்கும்போது, பன்னிரு திருமுறைகளில் அடங்காத பாடல்களை ஆறுமுகநாவலர் அவர்கள் தோத்திரங்களாக ஏற்றுக் கொள்ளவில்லை என்று எண்ணத் தோன்றுகின்றது. அப்படிப் பார்த்தால், புராணம் என்ற வகையில் சேக்கிழாரின் பெரியபுராணப் பாடல் அல்லாத பாடல் எதையும் ஆறுமுகநாவலர் ஏற்றுக் கொள்ளவில்லை.

அதாவது பன்னிரு திருமுறைகளுக்குள் அடங்காத புராணப் பாடல் எதையும் பஞ்சபுராணத்தில் சேர்க்க ஆறுமுகநாவலர் ஒருப்படவில்லை என்பது தெரிகிறது. அந்த நிலையில், **திருவிளையாடற் புராணம், கந்த புராணம்** ஆகியவற்றில் உள்ள பாடல்களை, பஞ்சபுராணத்தில் சேர்க்க்கூடிய பாடல்களாக ஏற்றுப் பாடும் நிலை எப்போது ஏற்பட்டது.? யாரால் ஏற்படுத்தப்பட்டது? என்பன புரியவில்லை. சிந்திக்க வேண்டிய விடயங்கள் இவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பஞ்சபுராணம்" என்ற சொற்றொடரின் நேர்கருத்தின்படி ஐந்து பாடல்கள் இருக்க வேண்டும். அப்படியிருக்க, பஞ்சபுராணம் பாடும்போது பதினாறாம் நூற்றண்டிற்குரிய அருணகிரியாரின் திருப்புகழையும் சேர்த்து ஆறுபாடல்களைப் பாடும் பழக்கம் எப்போது ஏற்பட்டது? என்பதுவும் புரியவில்லை. அதாவது ஆறாவது பாடலாகப் பாடப்படும் திருப்புகழ் எப்போது பஞ்சபுராணம் என்னும் கூட்டமைப்புக்குள் அத்துமீறி நுழைந்தது? என்பதை ஆராய்வது பயனுள்ள முயற்சி. எத்துணைப் பத்திமை நிறைந்திருந்தாலும், சிவவழிபாட்டிற்குரிய பஞ்சபுராணக் கூட்டமைப்புக்குள், முருக வழிபாட்டிற்குரிய அருணகிரிநாதரின் திருப்புகழ் நுழைந்ததைப் புரிந்து கொள்ள முடியவில்லை. முருகன், பிள்ளையார் ஆகிய சிவமூகூர்த்தங்களை மூவர்முதலிகள் வழிபடவில்லையென்பதும் மனங்கொள்ள வேண்டிய ஒன்று.

பன்னிரு திருமுறைகளுள் அடங்கியுள்ள திருமூலரின் திருமந்திரப் பாடல் எதுவும் இன்றைய பஞ்சபுராணம் என்ற ஐந்து பாடல்களில் இடம்பெறாமல், பன்னிருதிருமுறைகளில் அடங்காத, **திருப்புகழ், திருவிளையாடற்புராணப் பாடல்கள், கந்தபுராணப் பாடல்கள்** என்பன நுழைந்திருப்பது ஆச்சரியமாகவும், அபச்சாரமாகவும் தோன்றுகிறது இதுவும் ஆராயப்பட வேண்டும்.

தெரிந்தோ தெரியாமலோ நடந்துவிட்ட மேற்படி தவறுகள் போதாவென்று, வேறு பல சில்லறைப் பாடல்களும் பஞ்சபுராணம் என்ற போர்வையில் இப்போது இலண்டன் கோயில்களில் அரங்கேற முயல்கின்றன. கோயில்களை நடத்துவோரும் சைவப்பூசகர்களும் பஞ்சபுராணம் பாட ஆசைப்படுவோரும் விழிப்பாக இருக்க வேண்டிய காலகட்டம் இது. கண்டபாட்டுக்குக் கொண்டை முடிக்கும் பழக்கம் தவிர்க்கப்படல் வேண்டும். சிவதீட்சை பெறாதோர் கோயில்களில் பஞ்சபுராணம் பாடக்கூடாது என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

கவனவீனத்தாலும், அறிவீனத்தாலும், காழ்ப்புணர்வினாலும் அழிந்தவையும் அழிக்கப்பட்டவையும் போக, எண்ணாயிரத்து இருநூற்றைம்பது தேவாரப் பாடல்கள் மட்டுமே இப்போது வாழ்கின்றன. எண்ணாயிரத்திற்கு மேற்பட்ட தேவாரங்கள் இருந்தும், எண்பது தேவாரங்கள்தானும் நம்மிற் பலருக்குத் தெரியாது. தெரிந்த ஒரு சில தேவாரங்களையே திரும்பத் திரும்ப பாடிக்கொண்டிருப்பதை விட்டுவிட்டு, புதிய தேவாரங்களைப் புழக்கத்திற்குக் கொண்டுவர வேண்டியது தமிழர் கடன். தேவாரங்கள் தமிழர்களின் மந்திரங்கள் மட்டுமல்ல, தமிழர்களின் இலக்கியச் செல்வங்களும் கூட. இங்கும் தொய்வில்லாத விழிப்புணர்வு தமிழர்க்கு அவசியமாகின்றது.

**பெண்கள் பஞ்சபுராணம் பாடலாமா?**

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள" என்று வள்ளுவனால் போற்றப்பட்டு, "இல்லாளகத்திருக்க இல்லாததொன்றில்லை" என்று அவ்வையாரால் புகழப்பட்ட பெண்கள், பஞ்சபுராணம் பாடலாமா என்ற சர்ச்சை இலண்டன் வாழ் ஈழத்தமிழரைக் கலக்கிக் குழப்புகின்றது. பாடலாம் என்றும், பாடலாகாது என்றும் பேசப்படுகின்றது. ஆனால் சில கோயில்களில், பெண்கள் பஞ்சபுராணம் பாடும் நிலைமை நல்லவேளையாகத் தொடர்கின்றது. நாயன்மார் காலத்திலோ, அதன் பின்னரோ, சிவன் கோயில்களில், பாடவல்ல மகளிர் பஞ்சபுராணம் பாடினார்களா என்றால் பாடினார்கள் என்பதே மறுமொழி.

"பிங்கல நிகண்டு" என்றொரு சொற்றொகுதி உண்டு. அந்த நூல் ஆலயத்தில் சேவை செய்யும் பெண்களைப் "பண்மகள்", "பாடினி", "மாதங்கி", என்றெல்லாம் குறிப்பிடுகின்றது. இவர்களுக்குப் "பதியிலார்", "மாணிக்கத்தார்" என்ற பெயர்களும் இருந்திருக்கின்றன. இறைவனின் முன்னிலையில் திருஆலத்தி எடுக்கும் உரிமையைப் பெற்றிருந்தவர்கள் "மாணிக்கத்தார்" எனப்பட்டார்கள். இறைவன் முன்னிலையில் பாடுவது உருத்திரகணிகைகளின் கடமையாக இருந்து வந்திருக்கின்றது. சுந்தரமூர்த்தி நாயனாரின் மனைவியாகிய பரவையார் உருத்திரகணிகையர் குலத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனின் கருவறையில் நின்று இறைவனின் படிமத்தைத் தீண்டும் உரிமையும், தீபம் காட்டும் உரிமையும் தேவதாசியர்க்கு இருந்ததாக வரலாறு கூறுகின்றது. சிவதீட்சை பெற்ற தாசியர்க்குக் கோயிலில் ஆடுவதும் பாடுவதும் கடமைகளாக இருந்தன. விடிய வெள்ளெனக் கோயிலின் மகாமண்டபக் கதவுகளைத் திறப்பதும். இறைவனுக்கு பூசை நடைபெறும்போது பாடியாடிப் பரவுவதும், அவர்களின் பணிகளாக இருந்தன. பதினாறு வகையான வழிபாட்டு உபசாரங்களைப் பூசகர் புரியும்போது, முத்திரை காட்டி அபிநயம் பிடிப்பதும் அவர்களின் தொழிலாக இருந்து வந்திருக்கின்றது.

அலங்காரத் தாசிகள் எனப்பட்டவர்கள் ஆடல் வல்லாராய் இருந்தபோதும், வழிபாட்டின்போது பாடும் பணியையும் மேற்கொண்டிருந்தனர் என்பது தெரிகின்றது. தேவதாசி ஒருத்தி இறந்துவிட்டால், அவளுடைய இறுதிக்கிரியைகள் முடியும் வரைக்கும், அவள் சேவையாற்றி வந்த கோயிலின் பூசைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன என்று வரலாறுகள் விளம்புகின்றன. இறைவன் உறையும் கருவறையில் எரிகின்ற விளக்கிலிருந்து எடுத்துவரும் தீச்சுடரைக் கொண்டு அந்தத் தேவதாசியின் சிதைக்குத் தீமூட்டும் மரபும் வழக்கமும் தமிழ்நாட்டில் இருந்ததாகத் தெரிகிறது. இவ்வாறு கோயிலில் முன்னுரிமை பெற்றிருந்த பெண்கள் காலப்போக்கில் மதிப்பிழந்தனர். கோயில் அதிகாரிகள் அதற்கு காரணம் ஆயினர். இவற்றையெல்லாம் பார்க்கின்றபோது, கோயில்களில் பெண்கள் பஞ்சபுராணம் பாடுவதில் தவறில்லை என்றே தோன்றுகின்றது. ஏனையோர், அதாவது சிவதீட்சை பெறாதவர்கள், சிவவழிபாட்டினர் அல்லாத வேற்றுமதத்தார் ஆகியோர் கோயில்களில் பஞ்சபுராணம் பாடுவது தவிர்க்கப்படல்

வேண்டும். இதனைச் தமிழ்ச் சிவ வழிபாட்டினர் சிந்திக்க வேண்டும். இந்தக் கட்டுரை அவ்வாறு சிந்திக்கத் தூண்டும் என்றே நம்புகிறேன்.

............

சங்கப் பணியாளர்

2009ம் ஆண்டு முதல் சங்கத்தில் வேலை புரியும் சுப்பிரமணியம் என்று எல்லோராலும் அழைக்கப்படும் திரு. கிருஷ்ணமூர்த்தி ஜெயராம் அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Satash Community Care



உடற்குறைபாடு அல்லது மனநலக் குறைவு காரணமாக உங்களுக்கோ அல்லது உறவினருக்கோ உதவி தேவைப்படின் பல ஆண்டுகள் அநுபவமும் அங்கீகாரமும் பெற்ற எங்கள் சேவையை நாடுங்கள். அவரவர் தேவைகளுக்கேற்பப் பராமரிப்பைத் திட்டமிட்டு வகுத்துச் செயற்படுத்துவதில் எமது நிறுவனம் பாராட்டும் பரிசும் பெற்றது.

மேலதிக விவரம் அறிய எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

Orchid Bungalow
51 Mollands Lane,
South Ockendon RM15 6DH
Adult Services 01708 850555

Jasmine Bungalow
53 Mollands Lane,
South Ockendon RM15 6DH
Children Services 01708 851189

109-111 Molands Lane,
South Ockenden RM15 6DJ
Adult Services 01708 856592

Trinity Community Centre
East Avenue, London E12 6SG
Domicilary Care 0203 200 1047

www.satashcommunitycare.com

Letchmi Loganathan
07957 869620
letchmi@satashcommunitycare.com

Logan Loganathan
07956 377298
logan@satashcommunitycare.com

Sathian Loganathan
07949 755104
sathian@satashcommunitycare.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவொளி வளையம்
# ENLIGHTENMENT CIRCLE

"Empowering Humanity Through Yoga"

2 Salisbury Road,Manor Park,London E126AB
smsukyoga@gmail.com

Enlightenment Circle is an arm of Saiva Munnetta Sangam (UK) which has an aim to provide basic awareness of the science of Yoga to fellow human beings.

Our Prime Objective is to focus on the following:

1) Yoga Asana
2) Pranayam
3) Meditation
4) Healthy Eating
5) Self-development
6) Seeking the knowledge for wisdom
7) Helping People in Need
8) Animal Welfare
9) Embracing with Nature

There is a dedicated yoga hall built for this service. More than 2,500 adults and children have benefited in understanding the basics of Yoga.



**Adults Yoga Class**



**Kids Yoga Class**





**"More than 2,500 adults and children have benefited with the science of Yoga at Enlightenment Circle."**

email: smsukyoga@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Our outreach programme strives to serve people in need with basic help for day to day living, in any part of the world.

**Educational Materials- Sri Lanka**





**In the past 5 years we have touched the hearts of approximately 41,000 lives with an investment of £78,000 in various parts of the world. We were able to achieve this with the support of our yoga students and well-wishers.**

**Furniture to Schools- India**



**School Library Facility – Sri Lanka**



**Children in Need- Bicycles**



email: smsukyoga@gmail.com

சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை

| Type of Project | Details | Location |
|---|---|---|
| Anna Dhanam | Providing food for - Orphan Children, Mentally Challenged Children, Elders in war affected zones, Homeless, Destitute elders, Meals-on-wheels programme, Hands-on-Meals programme | Sri Lanka India Nepal Malaysia Ghana |
| Vidya Dhanam | Educational materials to underprivileged children, School furniture, School books distribution, School Library facility, Teaching aids | Sri Lanka India Ghana |
| Life Line | Water Pumps to help widows for vegetable farming, live stocks (Chicken & Sheep) for women headed families and elders, Sewing Machines for women headed families, small business start up, Artificial limbs, Wheel Chairs | Sri Lanka Nepal |
| Jala Dharma | Tube well construction for villages, Well construction for farming families | Sri Lanka |
| Mission for Vision | Cataract camps in the war affected zones for the under privileged | Sri Lanka |
| Children in Need | Provision of financial help for education, Transport facility (Bicycles), Solar Lamps, Funding for children school and University education | Sri Lanka |
| Vastra Dhanam | Clothes to the underprivileged | Sri Lanka |
| Hope for Life | Supporting Suicide Prevention programme | Sri Lanka |
| Pasu Dharma | Supporting animal sanctuary for cows | India |
| Life with Nature | Tree preservation programme and lives in woodlands (Shantham) | UK |
| Natural Disaster | Flood relief work, Earthquake relief and rehabilitation efforts | Sri Lanka India Nepal |
| Medical Camp | Dental camps in remote villages for the underprivileged | Nepal |

**Children in Need- Solar Lamps**



**Women Headed Family- Water Pump**



**Tube Well- Sri Lanka**



email: smsukyoga@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Clothes to the Needy- Sri Lanka**



**Cataract Camp- Sri Lanka**



**Food for Elders-Sri Lanka**



**Animal Welfare- India**



**Life with Nature- Woodlands (UK)**



We complement our delivery by partnering with the following organisations in addition to our own team of volunteers.

1. KM Foundation (Sri Lanka)
2. AEDU (UK)
3. Assist RR (UK)
4. Assist RR (Sri Lanka)
5. Rotary Club (Mullaithevu)
6. Vision 2020 (Sri Lanka)
7. Children Hunger Relief Fund (UK)
8. Sustainable Lively Source Trust (Sri Lanka)
9. Tech Out Reach (Malaysia)
10. Lions Club (Malaysia)
11. Heifer International (Nepal)
12. Akshaya Patra (UK)
13. Akshaya Patra (India)
14. Old Boys Jaffna Hindu (92 Batch) (UK)
15. Naalvar Kottam (Kalmunai)
16. Woodlands Trust (UK)

email: smsukyoga@gmail.com

ஒன்றே குலம் ஒருவனே தேவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நால்வர் தமிழ்க் கலை நிலைய தமிழாசிரியர்கள்




சதாசிவம் ஆனந்ததியாகர் – சுதர்சினி வாகீசன் – ஆனந்தி ரவீந்திரதாகூர் – சாந்தி மகேந்திரயோகம்
சந்திரகோஷி சிவநேசராஜா – வாசுகிதேவி சச்சிதானந்தன் – சக்தி ஆதீசன் – நளினி இராஜேஸ்வரன்
அம்பிகா சத்தியராஜன் – தாரிணி மாயவதீபன் – புஸ்பராணி இராசரட்ணம் – சுகந்தி இந்துசேகரன்
மதுரா இந்துசேகரன் – கோமதி விஜயராசா – கௌசலாதேவி சுந்தரமூர்த்தி – நிருஜா விக்னேஸ்வரன்
கெங்காதேவி ஜெயரட்ணம் – வசந்தி ஜெயபாலன் – குமுதினி இராஜகுமாரன்
கமலாம்பிகை பாலசுப்பிரமணியம் – பாஸ்கரி தயாளன் – வசந்தராணி இரவிந்திரதாஸ்
படத்தில் இடம்பெறாதவர்கள் – ஸ்ரீறஞ்சனி வீரசிங்கம் – அ. சர்வநாதன் – கலை ஆசிரியர்கள்

   

செந்தில்செல்வி வாமனானந்தன் – சுகிர்தகலா கடாட்சம் – ரஜி மோகனராஜ் – குமரன் இரவிந்திரதாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை சிவகாமி மாதரணி



Standing : வசந்தி ஜெயபாலன் சக்தி ஆதீசன் நிருஜா விக்னேஸ்வரன்
அன்னலட்சுமி ஜெயபாபு நளினி இராஜேஸ்வரன்
சுகந்தி இந்துசேகரன் பாஸ்கரி தயாளன்

Seated : கமலா பாலசுப்பிரமணியம் ஆனந்தி ரவீந்திரதாகூர்
வாசுகிதேவி சச்சிதானந்தன் சாந்தி மகேந்திரயோகம்
கௌசலாதேவி சுந்தரமூர்த்தி வசந்தா இரவீந்திரதாஸ்

Kneeling : அம்பிகா சத்யராஜன் கோமதி விஜயராசா தாரிணி மாயவதீபன்
சுதர்சினி வாகீசன் கெங்காதேவி ஜெயரட்ணம்
புஸ்பராணி இராசரட்ணம் ஸ்ரீறஞ்சினி வீரசிங்கம்

தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சதாசிவம் ஆனந்ததியாகட
அருமைநாதன் கூடவநாதன்
சுதடசினி வாகீசன்
ஆனந்தி ரவீந்திரதாகூட
சாந்தி மகேந்திரயோகம்
சந்திரகோஷி சிவநேசராஜா
வாசுகிதேவி சச்சிதானந்தன்
சக்தி ஆதீசன்
நளினி இராஜேஸ்வரன்
அம்பிகா சத்தியராஜன்

தாரிணி மாயவதீபன்
புஸ்பராணி இராசரட்ணம்
சுகந்தி இந்துசேகரன்
மதுரா இந்துசேகரன்
கோமதி விஜயராசா
ஸ்ரீரஞ்சினி வீரசிங்கம்
கௌசலாதேவி சுந்தரமூடத்தி
நிருஜா விக்னேஸ்வரன்
கெங்காதேவி ஜெயரட்ணம்
வசந்தி ஜெயபாலன்

குமுதினி இராஜகுமாரன்
கமலாம்பிகை பாலசுப்பிரமணியம்
பாஸ்கரி தயாளன்
வசந்தராணி இரவிந்திரதாஸ்
குமரன் இரவிந்திரதாஸ்
ரஜி மோகனராஜ்
சுகிடதகலா கடாட்சம்
செந்தில்செல்வி வாமனானந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலசம்




சைவ முன்னேற்றச்சஙகம் கடந்த பல ஆண்டுகளாக சைவத்திற்கும் தமிழ் மக்களுக்கும் ஆற்றிய சேவைகளை நீங்கள் யாவரும் அறிவீர்கள். அதன் ஒரு முக்கிய அங்கமாக 17-01-1993 ஆண்டு முதல் இன்றுவரை'**கலசம்**' என்றொரு ஆன்மிக சஞ்சிகையை காலாண்டிதழாக சை.மு.சங்கம் வெளியிட்டு வருகின்றது. ஆன்மிகம் தொடர்பான சமயக் கட்டுரைகளும் சமயப் பாடங்களும். சித்திரக் கதைகளும் திருக்குறட் கதைகளும் தமிழிலும் ஆங்கிலத்திலும் மாணவர்களும் பெரியவர்களும் விளங்கிக் கொள்ளக்கூடியவிதத்தில் தரப்படுகின்றது.

இந்த ஆன்மிக சஞ்சிகைக்கு இதுவரை ஆசிரியர்களாக திரு. சதாசிவம் ஆனந்ததியாகர், திரு. மு. நற்குணதயாளன், திரு. சி. அற்புதானந்தன் ஆகியோர் நற்பணியாற்றி வந்துள்ளார்கள் தற்போதைய ஆசிரியராக திரு.க.ஜெகதீஸ்வரன்பிள்ளை அவர்கள் பலரும் பாராட்டும் வகையில் பணியாற்றி வருகின்றார். சங்கம் இதுவரை 86 காலாண்டிதழ்களை இப் புலம் பெயர் நாட்டில் இருபத்தைந்து வருடங்களாக ஒரு ஆன்மிக சஞ்சிகையாக வெளியிட்டு வருவது ஒரு பெரும் முயற்சியாகும். அதன் மூலம் வரும் ஆன்மிகக் கருத்துக்களை நாமும் தக்க முறையில் உள்வாங்கி சைவ நெறி தழைத்தோங்க வாழ்வோமாக.!

## தோரணம்

இது ஒரு மாதாந்த மின்னஞ்சல் இதழாகும். சைவ முன்னேற்றச் சங்க வளர்ச்சியில் இதுவும் தன்னாலான பங்களிப்பைச் செய்து வருகின்றது. இது இ.மெயில் மூலம் உலகம் முழவதும் உள்ள



கிட்டத்தட்ட 3000வாசகர்களுக்கு சை.மு.சங்கம் தொடர்பான நிகழ்வுகளையும், குறுஞ் செய்திகளையும். சங்கத்தில் இடம்பெறும் நிகழ்வுகளின் படங்களையும் சங்கத்தில் நடைபெறும் ஒலி. ஒளி தொடர்பான வீடியொ பதிவுகளையும் வாசகர்களுக்கு 'தோரணம்' மாதமொருமுறை எடுத்துச் செல்கிறது. இதன் ஆசிரியராக திரு. வை.சிவனருட்செல்வனும் வடிவமைப்பாளராக திரு.சோ. நிரஞ்சனும் பணியாற்றுகிறார்கள். 2016ம் ஆண்டு மாசி மாதம் தொடக்கம் இதுவரை 21 வெளியீடுகள் மினனஞ்சல் இதழ்களாக வெளியிடப்பட்டுள்ளது.

**"கலசம்", " தோரணம்"** ஆகிய இரண்டு இதழ்களையும் .saivamunnettasangam.com என்ற இணையத்தளத்தில் மேற்குறிப்பிட்ட இரண்டு சஞ்சிகைகளையும் பார்வையிடலாம்

## ஏனைய வெளியீடுகள்






மாணவர்களின் தமிழ்மொழி, சைவசமய அறிவை ஊக்குவிக்குமுகமாக பல பாடப்புத்தகங்களை சங்கம் இதுவரை வெளியிட்டு வந்துள்ளது. அதன் தொடர்சியாக சென்ற வருடம் சைவ நெறி பாட நூல் ஒன்றும் வெளியிடப்பட்டது. இப் பாடப்புத்தகத்தை பெற விரும்புபவர்கள் சை-வமுன்னேற்றச்சங்கத்துடன் தொடர்பு கொள்ளலாம். தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இல. 02085144732 ஆகும்.

வ.சிவனருட்செல்வன்

வெளியீட்டுத்துறைச் செயலாளர்

**மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்**

திரை கடல் ஓடியும் திரவியம் தேடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**SRI RAJARAJESWARY AMMAN TEMPLE**
**ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயம்**
Parasakthi Hindu Temple Trust
No 4 Dell Lane, Stoneleigh, Surrey KT17 2NE
Tel: 020 8393 8147

ஓம்
சிவமயம்
பிள்ளையார் துணை

திரு.இ.குணசிங்கம்

தலைவர்

ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயம் ஸ்ரோன்லி

புலம் பெயர்ந்து வாழும் ஈழத் தமிழ் சமுதாயத்தின் மேன்மைக்காக கடந்து நாற்பது வருடங்களுக்கு மேலாக உழைத்து வருபவர்கள் சைவமுன்னேற்ற சங்கத்தினர். எங்கும் எதிலும் நல்லதைச் செய்து, சுப கருமங்களுக்கு ஆதரவு அளித்து வருபவர்கள் சைவ முன்னேற்ற சங்கத்தவர்கள். இச்சங்கம் புலம் பெயர்ந்து வாழும் ஈழத் தமிழ் மக்களுக்கு பல வழிகளில் சமயப்பணி, சமூகப்பணி, கல்விப் பணி மூலமாக உதவுவது மட்டுமல்லாமல், குறிப்பாக இம்மண்ணில் பிறந்த இளம் சிறார்களின் சமய அறிவுக்கும் தமிழ்மொழி வளர்ச்சிக்கும் ஒரு ஊன்றுகோலாக இருந்து பல வழகளில் உதவி வருகிறது.

ஈழநாட்டில் 1960 – 1970 களில் இரு பல்கலைகழங்களே இருந்தன. மிக திறமை வாய்ந்த ஒருசிலரே இன விகிதாசாரப்படி இப்பல்கலைகழங்களின் புகுமுகப் பரீச்சையில் தேர்ச்சிபெற்று பட்டப்படிப்புகள் கற்கமுடிந்தது. திறமை இருந்தும் பட்டப்படிப்புக்கு தேர்வு பெறமுடியாத மாணவர்கள் வெளிநாட்டில் வாழும் உறவினர் உதவியோடு இங்கு வந்து தமது படிப்பை பூர்த்தி செய்து பட்டங்கள் பெற்றார்கள். அவர்கள் வாடகை அறைகளில் தங்கி கல்வி கற்றார்கள். இவர்கள் தாம் கற்கும் தொழில் நுட்ப கல்லூரிகளில் ஒருவரையொருவர் சந்தித்து தம்மை அறிமுகம் செய்துகொண்டார்கள். மேலும் அவர்கள் எல்லோரும் மாலை நேரங்களிலோ அல்லது பொது இடங்களில் ஒன்றுகூடி கலந்தாலோசித்து இலண்டனில் இந்த சைவமுன்னேற்ற சங்கத்தை ஸ்தாபித்தார்கள். "சமயநம்பிக்கை, சமய பக்தி, சமயசேவை ஆகிய மூன்றும் இணைவதால் பிறக்கும் சமயநெறியே, மனித வாழ்க்கையை அறநெறியில் இட்டுச் செல்வதற்குரிய ஒரே வழியாகும். இத்தகைய சமயநெறியில் மக்கள் சமுதாயம் நிலைபெறும் போதுதான் மக்கள் வாழ்வு வளம்பெறும். மேலும் அவரவர் சமய நிலையே நாகரீக நிலையினை மதிப்பிடும் அளவுகோல்" என்ற விபுலானந்த அடிகளார் கூற்றை அடிப்படையாக கொண்டே சைவமுன்னேற்றச் சங்கம் உதயமானது.

இம்மண்ணில் வாழும் தமிழ்மக்கள் எதிர்காலத்தில் சமயம், ஒழுக்கம், தமிழர் கலை கலாச்சாரம் மொழிப்பற்றவர்களாக வளர்ந்து தவறான பாதையில் செல்லாமல் இருக்கவேண்டி அன்று ஞானி சபாதிப்பிள்ளை அவர்கள் எமக்கென ஒரு சமய அமைப்பு வேண்டும் எனப் போராடி வெற்றியும் கண்டார். அவர்கள் காட்டிய வழியினை துணையாக கொண்டு அந்நாளில் வழிதெரியாமல் திரியும் மாணவ சமுதாயத்தை அடையாளம் கண்டுபிடித்து ஒன்றுகூடி ஆலோசனைகள் நடாத்தினார்கள சைவமுன்னேற்றச் சங்க முன்னோடிகள். ஆவர்களின் அந்த முயற்சியால் உருவானது தான் இன்றைய சைவமுன்னேற்றச் சங்கம்.

தான் எடுத்துக்கொண்ட குறிக்கோளின்படி நாயன்மார் குருபூசையை தொடர்ந்து மாதத்தில் வரும் சனி அல்லது ஞாயிறுகளில் மாதத்தில் ஒரு நாளை தேர்ந்தெடுத்து பஜனை செய்தார்கள். 1960களில் புலம் பெயர்ந்து இந்த மண்ணில் வாழ்ந்தவர்கள் தம் கல்வித் புலமையால் வேலைகள் பெற்று உயர்பதவிகளில் அமர்ந்து வீடு, கார் முதலியன வசதிகளைப் பெற்று வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் விலாசங்களை தெரிந்து அவர்களை நாடி அவர் இல்லங்களில் மாதத்தில் ஒரு நாள் இந்த பஜனை செய்தார்கள். இந்த மண்ணில் தோன்றிய இளவல்களை அதில் இணைத்தார்கள். அவர்களுக்கு தமிழ்க் கலாச்சாரம், சமயம், தமிழ்க் கல்வி இவைகளை போதித்தார்கள். இதனால் அவர்களுக்கு தமது தாய் தந்தையர் வாழ்ந்த மண்ணின் மீதும், தமிழ்மொழி மீதும் தீரா பற்று உண்டாயிற்று. மேலும் இன்று போல் அன்று தமிழ் உணவுவிடுதிகள் எதுவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மண்ணில் தோன்றவில்லை. இப்படி எம் இன மக்கள் இல்லங்களில் பஜனை செய்வதன் மூலம் வாக்கு உருசியான தாய்மண் உணவுகள் கிடைத்தன. மிஞ்சியதை தாம் தங்யிருந்த அறைகளுக்கு எடுத்துச் சென்று வயிறா உண்டார்கள்.

"ஒவ்வொரு திட்டத்தை நிறைவேற்றுவதிலும் உள்ள கஷ்டங்களை மட்டும் யோசித்துக் கொண்டிருப்பவன் உலகத்தில் எந்தக் காரியத்தையும் சாதிக்கமாட்டான். கஷ்டத்தை உணர்ந்தாலும் அதற்குப் பரிகாரம் தேடுபவனே வெற்றி பெறுவான்." இதை நன்றாக உணர்ந்தவர்கள் இந்த சைவ முன்னேற்றச் சங்கத்தை உருவாக்கியவர்கள். அதனால் அன்றோ இன்று இச்சங்கம் ஆலமரம் போல் விழுதுவிட்டு இந்த மண்ணில் நிலைத்து நிற்கிறது. பெரிய மனிதர்களான இவர்கள், எப்பேர்ப்பட்ட பெரிய காரியத்தைச் சாதித்தாலும், அதைப்பற்றிப் பிரஸ்தாபிக்காமல் அடக்கமாகவே இருந்தார்கள். அவர்கள் சாதித்த காரியத்தைப் பற்றி வேறு யாராவது பேச முற்பட்டாலும், அந்தப் பேச்சில் கலந்துகொள்ள வெட்கப்பட்டார்கள். ஏன்னென்றால் பெரிய காரியங்களைச் சாதிப்பது அவர்களுக்குச் சர்வ சாதாரணம். இதுதான் இன்றைய சைவமுன்னேற்றச் சங்கம்.

இவர்கள் முயற்சிகள் என்றுமே வீண் போவதில்லை; முயற்சிகளுக்கு நேரக்கூடிய சோதனைகளை நாம் தாண்டிவரும்போது, சாதனைகள் நம்மையே தேடிவரும் என்பதற்கு ஓர் எடுத்துக் காட்டு. இன்றைய சைவமுன்னேற்றச் சங்கம். அதனாலன்றோ இச்சங்கம் காலத்தால் அழியாத பெரும்சேவைகளை ஆற்றும் பெரும் மன்றமாக இன்று உருவாகி வருகிறது. ஈழம் வாழ் சைவப் பெருமக்களுக்கு எது அத்தியாவசிய தேவையோ அதை அறிந்து சேவைசெய்யும் திறனுடைய நெறியாளர்களையும், சைவ அறிஞர்களையும், துடிப்பும் செயல் திறனும் மிக்க சிறார்களையும் தன்னகத்தே கொண்டியங்கும் ஒருபெருமன்றமாக இன்று சைவமுன்னேற்றச் வியாபித்துள்ளது. சைவசமயம் என்பது மானிடவர்க்கத்தை வாழ்விக்கும் அர்த்தமுள்ள குறிகோளைக் கொண்டது என்பதை நன்கு உணர்ந்தவர்கள் சைவமுன்னேற்றச் சங்கத்தை வழிநடாத்தி செல்பவர்கள். இங்கே போட்டிகள் இல்லை, பூசல்கள் இல்லை, புணர்ச்சிகள் இல்லை. கடமை, கட்பாடு, கண்ணியமும், மனிதவாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க நெறிகளையும் தன்னகத்தே கொண்டது சைவ சமயம் என்பதை அவர்கள் நன்கு அறிந்தார்கள்.

" யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி - ஆங்கே
மாதொரு பாகனார்தாம் வருவார்"

என்பதை கண்கூடாக உணர்ந்தவர்கள் சைவமுன்னேற்றச் சங்கத்தை வழிநடத்துவோர். இன்று இச் சங்கத்தின் சேவைகள் உலகநாடுகளின் இதயமாக விளங்கும் பெரியபிரித்தானியா முழுவதும் பரவி இருப்பது இலண்டனில் தென்மேற்குப் பகுதியில் எழுந்தருளியிருக்கும் இராஜராஜேஸ்வரி ஆலய தேவஸ்தானத்திற்கு மகிழ்ச்சியையும் பெருமையையும் தருகிறது.

இலண்டனில் இயங்கும் சைவமுன்னேற்ற சங்கத்தை வாழ்த்தி, இம்மன்றம், பொன்விழா, வைரவிழா, முத்துவிழா, நூற்றாண்டு விழா என்பவற்றையும் கண்டு ஓங்கி உயரவேண்டும் என்று ஸ்ரோலிப் பதியில் எழுந்தருளி அருளாட்சி செய்யும் இராஜராஜேஸ்வரி அன்னையை பிராத்திக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூன் முறை தெரிந்து சீலத்து ஒழுகு

## திரு. முரளீதரன் அவர்கள் நடத்தும் சைவ சிந்தாந்த கலந்துரையாடல் வகுப்பு







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவமுன்னேற்றச் சங்கத்தில் சைவசித்தாந்த திருமந்திரப் பயிற்சிகள்



சிவகாமி உடனுறை சிதம்பரேஸ்வரர் திருவருளால் ஞானநூல்களைப் பயின்று உயிர்கள் உய்ய வைக்கும் சைவசித்தாந்த வகுப்புக்களும் திருமந்திர வகுப்புக்களும் ஞாயிறு தோறும் நான்கு மணிநேரத்திற்கு கடந்த ஐந்து ஆண்டுகளாக தவறாது நடைபெற்று வருகின்றது. அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் சைவப்புலவர் தேர்வுக்கான பாடத்திட்ட அமைப்புக்குள் சைவசித்தாந்த வகுப்புக்கள் நடைபெறுகின்றன. சைவசித்தாந்தத்தில் - சிவஞானபோதம், சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம், உண்மைவிளக்கம், சங்கற்பநிராகரணம் ஆகிய நூல்களும், இலக்கியத்தில் - திருஞானசம்பந்தர் தேவாரம் முழுவதும், திருவாசகம் முழுவதும், திருமந்திரம் முழுவதும், பெரியபுராணத்தில் திருநாவுக்கரசர் புராணமும், தமிழ் இலக்கணத்தில் - தொல்காப்பியம் எழுத்திகாரம் நச்சினார்க்கினியர், தொல்காப்பியம் சொல்லதிகாரம் - சேனாவரையர், செந்தமிழ் இலக்கணம் பாகம் 2 (செய்யுளியலும் அணிகளும்), இலக்கண விருத்தியுரை முழுவதும், இவற்றுடன் உரைநடை, வரலாறு ஆகிய பாடநெறிகளும் கற்பிக்கப்பட்டு வருகிறது. சைவப்புலவர் தேர்வுகள் ஐரோப்பாவில் நடைபெறத் தொடங்கியது முதல் இதுவரை ஐவர் இத்தேர்வுகளில் இங்கிலாந்து ஜேர்மனி ஆகிய நாடுகளில் இறையருளால் சித்தி பெற்றுள்ளனர். இப்பட்டம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இந்துநாகரிகத்தில் முதுமாணிப்பட்டக் கற்கைநெறியில் சேர்ந்து படிப்பதற்கு ஏற்புடைய பட்டமாக, யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இலண்டனில் சைவப்புலவர் தேர்வு மையம் அமைவதற்குப் பலவழிகளில் உழைத்த சைவத் தமிழ்ப்பெரியார் செல்லத்துரைப் புலவர், செல்லத்துரை நாவரசன் ஆகியோரை இவ்விடத்தில் நன்றியுடன் நினைவுகூருகின்றோம்.

அதே வேளை சிதம்பரேஸ்வரப் பெருமானின் பெருங்கருணையால் ஆறுமுகநாவலருக்கு நாவலர் என்ற சிறப்புப் பட்டத்தை வழங்கிய நாள் முதல் இலங்கைத் தமிழர்களின் ஆன்மீக வழிகாட்டல் ஆதீனங்களில் ஒன்றாகத் திகழ்ந்து வரும் திருவாவடுதுறை ஆதீனத்தின் சித்தாந்தரத்தினப் பயிற்சிக்கான ஐரோப்பிய மையமாகச் சைவமுன்னேற்றச் சங்கம் அங்கீகரிக்கப்பட்டு 27 பேர் பதினான்கு சைவசித்தாந்த நூல்களையும் கற்றதன் அடிப்படையில் சித்தாந்தரத்தினப் பட்டத்தை, திருவாவடுதுறை ஆதீன வரலாற்றில் முதற்தடவையாக ஐரோப்பாக் கண்டத்தில் உள்ள இலண்டனுக்கு எழுந்தருளிய திருக்கயிலைப் பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீன 24வது குருமகாசன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்களால் இலண்டன் சிவன் கோயிலில் 21ம் திகதி செப்டெம்பர் 2014ல் பெற்றுக்கொண்டனர்.

அதே போன்று உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தின் திருமந்திரமும் வாழ்வியலும் பட்டயப் பயிற்சியினைச் சைவமுன்னேற்றச் சங்கத்தில் சித்தாந்த பயிற்சி மையத்தில் ஓராண்டுகள் பயின்ற 21 பேருக்கு தமிழர் வரலாற்றில் முதற்தடவையாக ஒக்ஸ்வேர்ட் ஹேர்ட்போர்ட் கல்லூரியின் பாரிங் மண்டபத்தில் இடம்பெற்ற உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தின் திருமந்திரமும் வாழ்வியலும் பட்டயப்பட்டமளிப்பு விழாவில் உலகப் புகழ்பெற்ற தமிழ் ஆங்கிலப் பேரறிஞர் முதுமுனைவர் மருதநாயகம் அவர்களால் பட்டயங்கள் அளிக்கப்பட்டன.

சைவசித்தாந்த உயர்நிலை வகுப்புகளில் இவ்வாண்டில் திருமதி சொர்ணமலர் முருகையா, சட்டத்தரணி செல்வரத்தினம் திருஞானம், திருமதி லலிதா ஜெயக்குமார், திருமதி காந்திமதி சூரியக்குமார், திருமதி ஸ்ரீகௌரி ரேணுகாந்தன், திரு. மாணிக்கம் இந்துசேகரன், திருமதி சுகந்தி இந்துசேகரன் ஆகியோர் கற்று வருகின்றனர்.

நைபவர் எனினும் நொய்ய உரையேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேவையைப் பாராட்டுவோம்
## 40வது ஆண்டு விழாவில் கௌரவிக்கப்படுவர்கள்



Enfield நாகபூஷணி அம்மன் ஆலய பிரதம சிவாசாரியார்

சிவாகமரத்தினம் சிவஸ்ரீ இரகுநாதகுருக்கள் கமலநாதகுருக்கள்

தமிழர் அவைக் காற்றுக் கழக நாடகாசிரியர்

திரு. கனகரட்ணம் பாலேந்திரா





புதினம் பத்திரிகை ஊடகவியலாளர் இளையதம்பி குமாரசாமி இராஜகோபால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கத்தின் சமூகப் பணிகளில் சைவக் குருக்களின் பங்கு:

பல ஆண்டுகளாக இந்நாட்டில் இறுதிக்கிரியைகளில் சங்கம் பங்கேற்று செய்து வந்த பணிகளின் விளைவாக அந்திமக் கிரியைகளை சமய முறையில் செய்வதற்கென ஒரு சைவக் குருக்களை நியமனம் செய்ய நாம் முடிவெடுத்தோம்.

அப்பணியில் "இணுவில்" சிவஸ்ரீ சுப்பிரமணியக்குருக்கள் வைத்தியநாதன் குருக்கள் அவர்கள்

14.10.1999 தொடக்கம் 30.10.2011 வரை சேவை புரிந்தார்





சிவஸ்ரீ சாமிநாத குருக்கள் சேமசுந்தரம் அவர்கள் 17.01.2012 முதல் 24.11.2013 வரை சேவை புரிந்தார்.





இவரைத் தொடர்ந்து 27.04.2014 முதல் இன்று வரை சிவஸ்ரீ வைத்திலிங்க ஐயர் சிவராசா அவர்கள் இக் கடமையைச் செய்து வருகின்றார்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



40 ஆண்டுகளாக சைவத்தமிழ்

சமூகப்பணியாற்றிய சங்கம் மேலும் வளர வாழ்த்து.

-ஐ.தி.சம்பந்தன்

மேற்கு நாட்டுச் சூழலில் சைவமும் தமிழும் வளர்த்துவரும் சைவ முன்னேற்றச்சங்கம் நாற்பது ஆண்டை நிறைவு செய்துள்ளது. சட்டவிதிகளுக்கமைய ஒழுங்காகவும் சிறப்பாகவும் செயற்பட்டுவரும் சங்கத்திற்கு ஒரு தனித்தன்மையுண்டு. பல தமிழ் அமைப்புகளும் ஆலயங்களும் நிருவாகப் போட்டி மோதலால் பலபின்னடைவுகளை எதிர்கொண்டு வருகின்றன. ஆனால் 40 வருடமாக செயற்பட்டுவரும் சைவமுன்னேற்றச் சங்கம் பாரிய பிரச்சனைகள் எதுவுமின்றி செயற்படுவது ஒரு முன்மாதிரியாகும்

1991ம் ஆண்டில் இச்சங்கத்தின் ஸ்தாபகரில் ஒருவரான திரு. வ.இ.இராமநாதன் அவர்கள் இச் சங்கத்தில் என்னை உறுப்பினராக்கினார் அன்றிலிருந்து இன்றுவரையும் சங்கத்துடன் என்தொடர்பு வளர்ந்து கொண்டேவருகிறது. செயற்குழுவிலும் சில காலம் பணியாற்றியுள்ளேன். நாவலர் பெருமானின் இலட்சியத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் இச் சங்கம் மென்மேலும் வளர்ச்சியடைய வேண்டுமென வாழ்த்துகிறேன்.'.

1969ல் -ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை சார்பில் நடைபெற்ற நாவலர் தேசியமாநாடு, நாவலர் சிலை தேசியபவனி ஆகியவற்றில் திரு.இராமநாதன் அவர்கள் கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச 'சங்கத்தின்' சார்பில் பங்குபற்றியபோது எம்மிடையே ஏற்பட்ட உறவு பிரித்தானியா வரையும் நீடித்தது.

1991ல் திருமதி முத்துக்குமாரசாமி நடத்தி வந்த நாவலர் விழாவில் திரு.இராமநாதன் அவர்கள் என்னைப் பேச வைத்தது எம்மிடையேயான உறவு வலுப்பட்டது. நாவலர் வழி நின்று சங்கம் செயற்படுவதனால் சங்கத்தின் பணிகளுக்கு ஒத்துழைப்பு நல்கி வந்தேன் சங்கத்தில் சாதாரண உறுப்பினராகவும் பின்னர் ஆயுள்கால உறுப்பினராகவும் சில காலம் ஆட்சிக்குழுவிலும் 'பணியாற்றியதை நினைவு கூறுகிறேன்.

சங்கம் பெரியபுராண படிப்பை ஆலயங்கள் பலவற்றில் நடத்தி பிரித்தானியா வாழ் தமிழ் மக்களுக்கு பெரிய புராண அறிவை வளர்த்துவந்த பெருமை சங்கத்திற்குண்டு. பெரிய புராண சரித்திர நூலை மக்கள் இலவசமாகப் பெறுவதற்கு ஒரு அன்பரின் நினைவாக ஆயிரம் பிரதிகள் அச்சிட்டு வழங்கியதால் பலர் அதனால் பயனடைந்தனர்.

சிவத் தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் நினைவாக "தங்கம்மா அப்பாக்குட்டியின் வாழ்வியற் பணிகள்" என்னும் நூலை யாழ் இந்து கனி'ட பாடசாலை முன்னைனாள் அதிபர் அமரர் கனகரத்தினம் நினைவாக வெளியிட்டது ஒரு காத்திரமான பணியாகும். அம்மையாரின் நினைவு தினத்தை சங்கம் ஆண்டுதோறும் கொண்டாடிவருவது பாராட்டத்தக்கது.

சங்க ஸ்தாபகர்களில் ஒருவரும் தலைமை ஆசிரியருமாகிய திரு. ஆனந்த தியாகர் தமிழ்ப் பாடசாலை(நால்வர்கல்வி நிலையம்) பிரித்தானிய நாட்டில் வழும் வாழும்தமிழ் சிறார்களுக்கு தமிழ்க் கல்வியையும், சமயத்தையும தமிழ் கலையையும் ஊட்டிவருவது மிகப்பாரட்டத்தக்கதாகும். மாணவர்கள் தமிழை இலகுவாக படிப்பதற்கு வசதியாக திரு. ஆனந்த தியாகர் தயாரித்த பாடநூல் மிகப்பயனுள்ளதாக மதிக்கப்படுகிறது.

40 வருடகாலத்தில் சங்கம் ஆலயம் உட்படபல்வேறு பணிகளை வேற்று நாட்டு சூழலில் வாழ்ந்துவரும் சைவர் சைவர்களாக வாழ வழிகாட்டிவரும் சைவமுன்னேற்றச்சங்கம் விருட்சம் போல் வளர வாழ்த்துகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தித்திக்கும் திருமுறைப் பாடல்கள்



-க.ஜெகதீஸ்வரன்

திருமுறையிலே உள்ள திருப்பாடல்கள் சைவர்களுக்குப் புனிதமானவை. ஆராய்ச்சிகளுக்கு அப்பாற்பட்டவை. தினமும் ஓதி வழிபடுவதால் பலருக்கும் பயன் தருபவை. தேவாரங்களை ஓதுவதால் பயன்பெறுவோர் பலர் இன்றும் உளர். அத்தகைய திருமுறைப் பாடல்களிலே பல சுவையான விடயங்கள் பொதிந்துள்ளன. இத் திருப்பாடல்கள் சைவசமய சாத்திரங்களில் உள்ள உண்மைகளை, தத்துவங்களை நமக்குத் தெரிவிக்கின்றன. அத்துடன் இலக்கயச் சுவையும் நிறைந்தவையாக உள்ளன. அவற்றிலே நான் படித்த சிலவற்றை, படித்து இன்புற்றவற்றை, சுவைத்தவற்றை இங்கு மீண்டும் சுவைத்து இன்புறுவோம்.

திருவையாறு என்பது மிக அழகான ஒர் இடம். ஐந்து நதிகள் கலக்கும் இடம் என்பதனால் ஐயாறு எனப் பெயர்பெற்றது. வடவாறு, வெண்ணாறு, வெட்டாறு, குடமுருட்டி, காவிரி என்பவையே இந்த ஐந்து ஆறுகள் என்பர் சிலர். சூரியபுட்கரணி, சந்திரபுட்கரணி, கங்கை, பாலாறு, நந்தி தீர்த்தம் என்பவையே அந்த ஐந்து தீர்த்தங்கள் என்போரும் உளர். இங்குள்ள சிவன்கோயிலில் ஐயாறப்பனும் அறம்வளர்த்த நாயகியும் இருந்து அருள்பாலிக்கிறார்கள். அப்பருக்குக் கயிலைக்காட்சி கொடுத்த தலம் இது. இந்தக் கோயிலுக்குத் திருஞானசம்பந்தர் வருகிறார். இறைவனையும் இறைவியையும் வணங்கித் துதித்து, தேவாரப் பாடல்களால் ஆராதிக்கிறார்.

கோயிலிலே திருவிழாக்காலம். அங்கே நடனமாதர்கள் நடனமாடி, கோயிலை வலம் வருகிறார்கள். அவர்களின் நடனத்துக்கு பக்க இசையாக முழவு ஒலிக்கிறது. முழவு ஓசை அந்தக் கோயிலின் அருகிலுள்ள குரங்குகளின் காதில் விழுகிறது. அதைக் கேட்டு, கோயில் அருகில் இருக்கும் அந்தக் குரங்குகள் இடிமுழக்கம் கேட்பதாக நினைக்கின்றன. உடனே அவை மழை வருமோவென அஞ்சி, மரங்களின் மீது ஏறி

வளவோன் ஆயினும் அளவு அறிந்து அழித்து உண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகிற்கூட்டம் இருக்கின்றதா? எனப் பார்க்கின்றன. இந்தக் காட்சியைத் திருஞானசம்பந்தர் பாடுகிறார்.

**புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி யறிவழிந்திட் டைம்மே லுந்தி**
**அலமந்த போதாக வஞ்சேலென் றருள்செய்வா னமருங் கோயில்**
**வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர மழையென் றஞ்சிச்**
**சிலமந்தி யலமந்து மரமேறி முகில்பார்க்குந் திருவை யாறே!**

திரு 1 பதி 130 பா 1

இந்தத் தேவாரத்திலே 'சிலமந்தி' எனற பதம் சிந்திக்கவேண்டிய ஒரு பதம். கோயிலிலே இருக்கும் மந்திகள் என்றால் அவை நடனத்தை ஆண்டுதோறும் பார்த்து அநுபவித்திருக்கும். எனவே அலமந்து மரம் ஏறவேண்டிய அவசியம் அவற்றுக்கு இல்லை. அப்படியானால் ஏன் அந்த மந்திகள் அலமந்தன என்ற கேள்வி சம்பந்தரின் மனதிலும் எழுந்திருக்கவேண்டும். அதனாலேதான் எல்லா மந்திகளும் அல்ல, சிலமந்தி என்று பாடியுள்ளார் போலும். இந்தச் சில மந்திகள் இதற்குமுன் முழவு ஓசையைக் கேட்காத மந்திகள். எனவே அவை வெளியூரிலிருந்து அப்போதான் திருவையாறு வந்திருக்கவேண்டும். இப்படி ஒரு கருத்தைச் சிந்தித்தவர் என் தமையனார் திரு உமாமகேசுவரன் அவர்கள்.

ஐந்து புலன்களும் குழப்பமுற்று, வழி தடுமாறி, அல்லல் உறும்போது நமக்கு அஞ்சேல் என்று அபயமளிப்பவர் ஐயாறப்பர். அந்த ஆலயத்திலே, அபயமளிப்பர் உறையும் அந்த ஆலயத்திலே குரங்குகள் கலங்குகின்றன. அதுவும் மழை வரும் என்று கலங்குகின்றன. நடக்காத ஒன்று நடந்துவிடுமோ என அஞ்சி அந்தக் குரங்குகள் கவல்கின்றன. இதிலே வேடிக்கை என்னவென்றால், அந்தக் கோயிலிலே இருந்து அருள்பவாலிக்கும் இறைவனோ ஐம்புலன்களையும் அடக்கமுடியாது அல்லல் உறும் ஆன்மாக்களுக்கு 'அஞ்சேல்' என்று அருள்செய்பவன். இலக்கியச் சுவை மிகுந்த இந்தத் தேவாரத்தில் ஆன்மாக்களாகிய நாம் உலக சிற்றின்பங்களிலே புலன்களை விட்டு இறையருள் பெறும் மார்க்கத்தை இந்த இறைவன் அருகிலேயே இருந்தும் தொலைத்துவிட்டோமா? என்று கேட்பதுபோல உள்ளது.

பிரம்மனும் திருமாலும் அடிமுடி தேடிய கதை சைவசமயிகள் அனைவரும் அறிந்த ஒரு புராணக்கதை. தம்முள் யார் பெரியவர் என்ற கேள்விக்கு விடைகாண முடியாது இருவரும், பிரமனும் திருமாலும், மோதிக்கொண்டபோது இருவருக்கும் இடையிலே பெரிய சோதியாகச் சிவன் தோன்றினார். யார் அடியையும் முடியையும் காண்கிறார்களோ அவரே பெரியவர் என்று ஒலித்த அசரீரி வாக்கைக்கேட்டு நான்முகனும் நாரணனும் அடிமுடி தேடிப் புறப்படுகின்றனர். இவர்களை மிக ஏளனமாக அப்பர் சுவாமிகள் பார்க்கிறார். அவர்களுக்குச் சவால் விடுகிறார். "எங்கே! முடிந்தால் இருவரும் அடியையும் முடியையும் தேடிப்பாருங்கள். ஒருபோதும் நீங்கள் இருவரும் காணவே முடியாது" என்று உறுதியுடன் உரைக்கின்றார் அப்பர் சுவாமிகள். அதற்கான காரணத்தையும் அவரே கூறுகிறார். "தில்லையிலுள்ள சிற்றம்பலத்திலே நடனமாடும் இறைவனின் திருவடிகள் என் நெஞ்சுக்குள்ளே இருக்கின்றன. அப்படி என் நெஞ்சுள் இருக்கும் அடியையும் முடியையும் வெளியிலே தேடும் இவர்கள் இருவரும் எப்படிக் காணமுடியும்? பார்க்க முயல்பவர்கள் என் நெஞ்சுள்ளே போனால் மட்டுமே பார்க்க முடியும்." இது அவர் கூறும் காரணம். தில்லையிலே உள்ள ஆடல் அரசை, அவரின் அழகை, புன்சிரிப்பை, சடாமுடியை, சிவந்த மேனியை, அந்த மேனியிலுள்ள வெண்ணீற்றை, தூக்கிய திருவடியாகிய குஞ்சித பாதத்தைப் பார்ப்பதற்கு மனிதப் பிறவி கட்டாயம் வேண்டும் என்று பாடியவர் அப்பரடிகள் அல்லவா? 'குனித்த புருவமும்' என்ற தேவாரம் நாமெல்லாம் அறிந்ததே! அந்தச் சிதம்பர நாதனை அப்பர் ஆராதித்துப் பாடிய தேவாரம் இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாடி நாரணன் நான்முகன் என்றிவர்**
**தேடி யுந்திரிந் துங்காண வல்லரோ**
**மாட மாளிகை சூழ்தில்லை யம்பலத்**
**தாடி பாதமென் நெஞ்சு ளிருக்கவே**

திரு 5 பதி 1 பா 10

இறைவனை நாம் எப்பொழுதும் நம் நெஞ்சிலே இருத்தவேண்டும் என்ற தத்துவ நெறியை அப்பரடிகள் மிக அழகாக மேலுள்ள தேவாரத்தின் மூலம் நமக்கு உணர்த்துகின்றார். இந்த உண்மையை வேறும் பலர் உரைத்திருக்கின்றனர்.

**வெள்ளைநிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ**
**வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ**
**வெள்ளைநிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல**
**உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது**

என்ற பாடலையும் நாம் கருத்திலே கொள்ளலாம். உள்ளத்தைத் தூய்மையாக்கி உண்மையான அன்போடு இறைவனை வழிபட்டால் இறைவன் நம் நெஞ்சிலே உறைவான், அவன் உறையுமிடம் எம்முடைய உள்ளமே என்ற கருத்தை அப்பரடிகளின் தேவாரம் சொல்லாநிற்கிறது.

திருவிடைமருதூரிலுள்ள கோயிலுக்கு அப்பரடிகள் வருகிறார். கோயிலிலிருந்து ஒரு பெண் வழிபாடு முடித்து தம் இல்லம் திரும்புகிறார். அவர் கையிலே கொன்றைமலர் மாலை இருக்கிறது. இறைவனை வணங்கியபின் பெற்ற பிரசாதம் அந்த மலர் மாலை. பெண்ணின் கையிலே அதைப் பார்த்தவுடன் அப்பரடிகளுக்கு ஒரு சந்தேகம் வருகிறது. மார்பிலே உள்ள மாலையை இறைவன் கழற்றிக் கொடுக்க முடியாது. உடனுறை அம்மை அதைப் பார்த்துவிடுவாள். சடாமுடியில் இருக்கும் கண்ணியையும் கொடுக்க முடியாது. அங்கே கங்கை பார்த்த வண்ணம் வீற்றிருக்கிறாள். இந்த நங்கையர் இருவரும் அறியாது எங்கு வாங்கி இந்தக் கொன்றையை இறைவன் இவளுக்குக் கொடுத்தான்? இதுதான் அப்பருக்கு வந்த சந்தேகம்.

**மங்கை காணக் கொடார்மண மாலையை**
**கங்கை காணக் கொடார்முடிக் கண்ணியை**
**நங்கை மீரிடை மருதரிந் நங்கைக்கு**
**எங்கு வாங்கிக் கொடுத்தா ரிதழியே!**

திரு 5 பதி 15 பா 6

இதழி - கொன்றை

திருவாரூருக்கு வருகிறார் அப்பரடிகள். அங்கே இறைவன் பாம்பை அணிந்து காட்சியளிக்கிறான். அந்தப் பாம்பைக் கண்டு உமை அஞ்சுகிறார். உமையைக் கண்டு மயில் என நினைத்துப் பாம்பு அஞ்சுகிறது. முடியில் இருக்கும் திங்கள் தன்னைப் பாம்பு விழுங்கிவிடுமோ எனப் பயந்து ஆரூரனார் போர்த்தியுள்ள யானைத் தோலுக்குப் பின்னால் மறைந்து எட்டி எட்டிப் பார்க்கிறது. மதி தோன்றி மறைவதை மின்னல் என நினைத்து, மார்பில் உள்ள பாம்பு சோர்வடைகிறது. இது அப்பரடிகளின் கற்பனை. அவரின் அருட்பாடலில் அழகுற தேவார அடிகளாக அந்தக் கற்பனை மிளிர்கிறது.

**நாகத்தை நங்கை யஞ்ச நங்கையை மஞ்ஞை யென்று**
**வேகத்தைத் தவிர நாகம் வேழத்தி னுரிவை போர்த்து**
**பாகத்தி னிமிர்தல் செய்யாத் திங்களை மின்னென் றஞ்சி**
**ஆகத்திற் கிடந்த நாகம் அடங்குமா ரூர னார்க்கே**

- திரு 4 பதி 53 பா 2

இந்தத் தேவாரத்திலும் ஒரு தத்துவத்தை மறைமுகமாக அப்பரடிகள் நமக்குக் கூறுகிறார். ஆன்மாக்கள் இறைவன் அருகில் இருந்தாலும், புறத்திலுள்ள சிற்றின்ப விடயங்களிலே புலன்களை விட்டு, வேண்டாத உணர்வுகளுக்குள் தம்மை ஈடுபடுத்தி வருந்துகின்றன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதுதான் அது. திருஞானசம்பந்தர் அருளிய திருவையாறு தேவாரத்துக்கும் இதற்கும் இடையில் அந்த ஒற்றுமையை நாம் உணரலாம்.

திருவதிகைவீரட்டானம் என்ற கோயிலுக்கு வந்த அப்பரடிகள் மேலே உள்ள அதே கற்பனையை மீண்டும் ஒரு தடவை நமக்குப் படம்பிடித்துக் காட்டுகிறார். இங்கு அதே காட்சியை அப்படியே கூறும்போது இறைவனார் அந்தக் காட்சியைக் கண்டு புன்முறுவல் பூப்பதாக மெருகூட்டி நம்மைச் சுவைக்க வைக்கிறார்.

**கிடந்தபாம் பருகுகண் டரிவை பேதுறக்**
**கிடந்தபாம் பவளையோர் மயிலென ஐயுற**
**கிடந்தநீர்ச் சடைமிசைப் பிறையும் ஏங்கவே**
**கிடந்துதான் நகுதலைக் கெடில வாணரே**

-திரு 4 பதி 10 பா 8

பக்கத்திலே இருக்கின்ற பாம்பைக் கண்டு பார்வதி பேதுற - மயங்க, பாம்பு அவளை - பார்வதியை மயில் என்று நினைத்து சந்தேகங்கொள்ள, நீர்தரித்த - கங்கை தரித்த - சடையில் இருக்கும் பிறையானது பயந்து ஏங்க இவற்றையெல்லாம் பார்த்து, கையிலே மண்டையோடு வைத்திருக்கும் கெடிலைவாணரான சிவன் நகுகின்றார் - புன்னகைக்கின்றார். நகுதலை என்றபதத்தைப் பிரித்து நகுகின்ற, தலையைக் (மண்டையோடு) கையிலே தரித்த என்று பொருள்கொள்ளவேண்டும்.

கம்பராமாயணம் படித்தவர்களுக்கு மிகவும் பிடித்த பாடல் ஒன்றுண்டு. இராமபிரானுக்காக அநுமன் சீதையைத் தேடி இலங்கை செல்கிறான். அங்கே சீதையைக் காணாவிட்டால் இலங்கையையே பிடுங்கி மலைமேலே அடிப்பேன் என்றெல்லாம் வீரம் பேசுகிறான். 'மாடு நின்றவம் மணிமலர்ச் சோலையை மருவி' என்ற பாடலில் 'வீடுவேன் மற்றிவ் விலங்கல்மேல் இலங்கையை வீட்டி' என்று கம்பர் பாடிமுடித்திருப்பார். பின்னர் அநுமன் இராவணனைச் சந்தித்ததும் இலங்கைக்குத் தீ வைத்ததும் நாமெல்லாம் அறிந்த, படித்த கதை. அநுமனைக் கம்பர் புகழ்ந்து பாடிய பாடலும் ஒன்றுண்டு. சீதை மண்ணிலே தோன்றியவள். அநுமன் வாயு புத்திரன். கடல் நீர் நிறைந்தது. அநுமன் ஆகாய வழியாக இலங்கை சென்றான். அங்கே பின்னர் தீ வைத்தான். இதைக் கம்பர் அழகாகப் பாடியுள்ளார்.

**ஐந்திலே ஒன்று பெற்றான் ஐந்திலே ஒன்றைத் தாவி**
**ஐந்திலே ஒன்றா றாக ஆரியர்க் காக ஏகி**
**ஐந்திலே ஒன்று பெற்ற அணங்கைக்கண் டயலா னூரில்**
**ஐந்திலே ஒன்றை வைத்தான் அவனமை அளித்துக் காப்பான்**

இந்தப் பாடலில் பஞ்சபூதங்களைப் பாடியுள்ளார் கம்பர். ஆனால், கம்பருக்கு முன்னரே வாழ்ந்த அப்பரடிகள் இந்த ஐந்து என்ற சொல்லை வைத்து அருமையான தேவாரம் ஒன்றைப் பாடியுள்ளார்.

திருவாரூர் ஆலயம் அமைந்துள்ள இடம் ஐந்துவேலி நிலப்பரப்பு கொண்டது. வேலி என்பது ஒரு பரப்பளவு. அந்தக் கோயிலில் எழுந்தருளியிருக்கும் ஆரூரர் ஐந்துவிதமான மலரம்புகளை உடைய மன்மதனை ஒருநாள் தம் பார்வையாலேயே எரித்தவர். ஐந்து விதமாகக் கூந்தலை முடியும் பார்வதிதேவியைத் தம் பாகத்திலே விருப்பமாகக் கொண்டவர். ஐந்து விதமான பொருள்களால், பஞ்சகௌவியத்தால் அபிஷேகம் செய்ய, அதை ஆனந்தமாக ஏற்றுக்கொள்பவர். ஐந்து தலைகளையுடைய பாம்பை அடக்கித் தம்மோடு வைத்திருப்பவர். இவ்வாறு திருவாரூர்ப் பெருமானின் குணங்களை அப்பர் பாடுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அஞ்சனை கணையி னானை அழலுற அன்று நோக்கி**
**அஞ்சனை குழலி னாளை அமுதமா அணைந்து நக்கு**
**அஞ்சனை அஞ்சு மாடி ஆடர வாட்டு வார்தாம்**
**அஞ்சனை வேலி யாரூர் ஆதரித் திடங்கொண் டாரே**
-திரு 4 பதி 53 பா 7

கம்பன் கவிச்சக்கரவர்த்தி. அதிலே சந்தேகமில்லை. ஆனால் அப்பரோ அருட்கவிஞர். அவரின் பாடல்களுக்கு, பாடல்களில் வரும் சொற்சுவை, பொருட்சுவைகளுக்கு ஈடு, இணை எங்குமில்லை.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் ஒன்றை இனிப் பார்க்கலாம். ஒரு தென்னஞ்சோலை இருக்கிறது. அதைச் சுற்றி வேலி போட்டுவைத்திருக்கிறார் அதன் உரிமையாளர். அந்தச் சோலையில் ஒரு குரங்கு வசித்துவருகிறது. அந்தக் குரங்குக்குத் தேங்காய்தான் தினமும் உணவாகிறது. தேங்காயைத் தன் கையினாலே தூக்கி அடித்து, அதன் தோலை உரித்து, பின் உடைத்து உள்ளேயுள்ள பருப்பை அந்தக் குரங்கு உண்கிறது. தினமும் இப்படிச் செய்வதால் அந்தக் குரங்கின் கைகள், கால்கள் எல்லாம் புண்ணாகி அது கூழைக் குரங்காகிவிட்டது. ஒரு நாள் அந்தத் தோட்டத்தைச் சுற்றி வரும்போது, வேலியிலே ஒரு துவாரத்தை அந்தக் குரங்கு கண்டது. உடனே அதன்வழியாக நுழைந்து அடுத்த பக்கம் போகிறது. குரங்கல்லவா? அதற்குத் தன் ஆவலை அடக்க முடியவில்லை. என்னதான் இருக்கிறது? பார்ப்போமே! என்ற உந்தல். அந்தப் பக்கத்திலே பெரிய அழகிய வாழைத்தோப்பு. பல வாழைகள் குலையீன்று இருக்கின்றன. பழங்கள் இடையிடை பழுத்து இருக்கின்றன. குரங்குக்கு வாயிலே நீர் ஊறுகிறது. அதிவேகமாக வாழைப் பழங்களைப் பறித்து உண்ண ஆரம்பிக்கிறது. அதன் மனதிலே ஒரு சிந்தனை எழுகிறது.

'நான் எவ்வளவு முட்டாளாக இருந்துவிட்டேன். இத்தனை நாளும் மிகுந்த வருத்தத்துடன் தேங்காயை உடைத்து என் உடலையும் வருத்தி ஒரு கூழைக் குரங்காகிவிட்டேனே. இவ்வளவு அருகில், மிகச் சுலபமாகப் பறித்து உண்ணக்கூடிய வாழைக்கனிகள் இருக்கின்றனவே. இவை ஏன் இத்தனை நாளாய் என் கண்ணிலே படவில்லை?' என அந்தக் குரங்கு எண்ணுகிறது.

திருமறைக்காடு என்ற தலம் அது. அங்குள்ள அம்மையின் பெயர் யாழைப்பழித்தமொழி அம்மை. இறைவன் பெயர் மறைக்காட்டு மணாளர். திருமறைக்காடு என்ற பெயர் தற்போது வேதாரிண்யம் என்று வழங்குகிறது. யாழின் ஒலியை இனிமைக்கு ஒப்பிடுவது வழக்கம். திருக்குறளிலேகூட, 'குழலினிது யாழினிது' என்று மழலையின் உயர்வைக் குறிப்பிடவந்த திருவள்ளுவர் ஒப்புமைக்கு யாழைத் தேர்ந்துள்ளார். திருமறைக்காட்டு அம்மையின் குரல் யாழ் ஒலியைவிட இனியது. அதனால் யாழைப்பழித்தன்ன மொழி என்றார் சுந்தரர். அவர் பாடிய தேவாரம் இது.

**யாழைப்பழித் தன்னமொழி மங்கையொரு பங்கன்**
**பேழைச்சடை முடிமேற்பிறை வைத்தானிடம் பேணில்**
**தாழைப்பொழி லூடேசென்று பூழைத்தலை நுழைந்து**
**வாழைக்கனி கூழைக்குரங் குண்ணும்மறைக் காடே**
-திரு 7 பதி 71 பா 1

தாழை - தென்னை.

முத்தி நிலைக்கு வாழைப்பழத்தை உவமையாகச் சொல்லும் மரபுண்டு. 'முழுதும் பழுத்தது வாழைக் கனியே' என்பது திருமந்திரத்தில் வரும் அடி. இறையை அடைந்து பேரானந்தத்தை அநுபவிக்கக்கூடிய வழி மிக அருகில் இருந்தும் குரங்குளாகிய ஆன்மாக்கள் உலக வாழ்க்கையிலும் அதில் வரும் சிறிறன்பங்களிலும் தம்மை ஈடுபடுத்தி அலைந்து உழல்கின்றன என்ற கருத்தை இந்தத் தேவாரம் மூலம் சுந்தரர் நமக்குக் காட்டியுள்ளார்.

மேலே குறிப்பிட்டுள்ள எட்டுத் தேவாரங்களும் திருமுறை என்ற அருட்களஞ்சியத்திலிருந்து எடுத்த அருட்பாடல்கள். அந்தக் களஞ்சியத்திலே இன்னும் எத்தனையோ சுவை, கருத்து, சைவநெறி பொதிந்த பாடல்கள் பலவுண்டு. அவற்றையெல்லாம் படித்து இன்புற 'மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே'

..............

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கத்தின் 20வது ஆண்டில் 17.04.1977ம் திகதி **"கலை இன்பம்"** நிகழ்ச்சிக்காக **ஸ்ரீ** மீனாட்சி பரத நாட்டியப் பள்ளி ஆசிரியர் திருமதி சாந்தா அன்னபூரணி அவர்கள் நெறிப்படுத்திய மாணவர்களின் நடனத்திற்கு, சங்கத்தின் பணிகளைப் பாராட்டி அமரர் சி.சத்தியமூர்த்தி அவர்கள் இயற்றிய வாழ்த்துப் பாடல்

### வாழ்த்துப் பாடல்



***தொகையறா தேஷ***

ஆன்றோர்கள் ஒன்றாகி அரும்பணிதான் என்றாகி
அனுகூலமாகி வந்த ஆண்டெழுபத்தேழு தன்னில்
ஆன்மிகச் சேவை தன்னை ஆக்கமுடன் ஆரம்பித்து
இங்கிலாந்து வாழ்தமிழரிடை இன்றுவரை ஆற்றிவந்தே
வான்புகழைச் சேர்த்தவல்ல சைவமுன்னேற்றச்சங்கம்
விரைந்தேதான் வளர்ந்துவந்து வயதிருப தாகியதால்
மேன்மையுறு தமிழெடுத்து மெல்லியநல் இசைசேர்த்தே
மனமார வாழ்த்த வந்தோம் மென்மேலும் வளர்ந்திடவே!

***பல்லவி பாகேஸ்ரீ***

மெய்யகம் தூய்மை எய்திடச் செய்யும்
சைவமே எமது மதமாகும் -எங்கள்
தெய்வமும் என்றும் சிவனாகும் - இந்த

***அனுபல்லவி***

மெய்ம்மை உணர்ந்த நல்லவர் சேர்ந்தே
தயவுடனே தான் உழைத்த தனால் - அவை
சைவ முன்னேற்றச் சங்கம் என்றாகி
செம்மையுட னின்று வளர்ந் திட்டதே – அது

ஐயம் தனை நீக்கி உய்யும் வழிகாட்டி
ஐந்தெழுத் தோதி நின்றிடுதே – செய்யும்
சேவையால் அனைத்தையும் வென்றிடுதே (மெய்யகம்)

***சரணங்கள் காபி***

நாவுக்கரசரொடு சுந்தரரும்
ஞான சம்பந்தரும் மணி வாசகரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்றமிழில் அன்று பாடியதை யின்று

நயமுடனே நல்லிசை சேர்த்தே

நாவாரப் பாடியே நேர்வழி தேடியே

நல்லறம் நாடியே நடந்திடுமே - இந்த

நால்வரின் நெறிகொண்டு ஆன்மிக நிலைகண்டு

நானில வாழ்க்கையை உணர்ந்திடுமே (மெய்யகம்)

*திலங்*

அன்னிய மண்ணிலே வாழ்ந்தாலும் - நாம்

ஆங்கிலம் பேசியே வளர்ந்தாலும்

முந்தையர் காத்தமுத் தமிழையுமே – எங்கள்

சந்ததி கற்றிடச் செய்திடுமே – சங்கம்

சாதனை சரித்திம் படைத்திடுமே (மெய்யகம்)

அன்பை விதைத்திடுமே தமிழர் பண்பை வளர்த்திடுமே

தன்மை அறிந்திடுமே தலைமுறை தேவையுணர்ந்திடுமே

நன்மை அளித்திடுமாம் சைவ நீதியைக் காத்திடுமே

இன்பம் பொருள் வீடு சேரும் மார்க்கம் உரைத்திடுமே

*மத்தியமாவதி*

வாழ்கவே சைவ முன்னேனற்றச் சங்கம் - இது

வாழ்க்கையின் போதனை தரும் அங்கம்

சூழ்ந்திட வேண்டியே அமைதி இன்பம் - நாம்

வாழ்ந்திடச் செய்வோம் சைவம் எங்கும் (மெய்யகம்)



மொழியது மறக்கின் அழியது கருமம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கு.கஜனா
4ஆம் வருடம்
யாழ். பல்கலைக்கழகம்

# சைவப் பண்பாட்டு நோக்கில் செல்வச்சந்நிதி ஆலயச் சூழலும், கந்தசஷ்டி விரத அனுட்டானமும்.

**ஆய்வுச் சுருக்கம்**

சைவ மக்களின் வாழ்வியல் பண்பாட்டு அம்சங்களுள் முக்கியமான இடத்தினை வகிப்பனவாக விரத அனுட்டானங்கள் விளங்குகின்றன. விரதங்கள் வெறுமனே அனுஷ்டிப்பனவாக விளங்காது கடைப்பிடிப்பவன் ஒவ்வொருவனது வாழ்வினையும் செம்மைப்படுத்துவனவாக உள்ளன. பொதுவாக விரதங்களானவை அவற்றுக்கு நிலைக்களனாகத் திகழும் ஆலயங்களை மையமாகக் கொண்டே பெரும்பாலான சைவமக்களால் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. ஆலயங்கள் சைவப் பண்பாட்டின் கருவூலங்களாகத் திகழ்கின்றன. அவ்வகையில் ஈழத்திலுள்ள மிகவும் புகழ்பெற்ற முருகஸ்தலமாகிய செல்வச் சந்நிதியில் கந்தசஷ்டி விரத அனுட்டானம் எவ்வாறு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதனை ஆய்வு செய்வதாக இவ்வாய்வு அமைகின்றது.

**ஆய்வின் நோக்கமும், முறையியலும்**

கந்தசஷ்டி விரத காலத்திலே எவ்வகையான அனுட்டானங்கள் செல்வச்சந்நிதி ஆலயச் சூழலிலே மேற்கொள்ளப்படுகின்றது என்பதனையும், இவ்விரதத்தினை அனுஷ்டிப்பதனால் சமூகத்திற்கு ஏற்படும் சமூகப் பயன்கள் எவை என்பதனையும், சைவப் பண்பாட்டின் நிலைபேற்றுத் தன்மை எவ்வாறு திருக்கோயில்களினூடாக வெளிப்படுத்தப்படுகின்றது, என்பதனை சில நூற்குறிப்புக்கள், நேர்காணல், உரையாடல்கள் மூலமாகப் பெற்றுக் கொண்ட தரவுகளினூடாகவும் இவ்வாலயச் சூழலில் நிகழும் கந்தசஷ்டி விரதந் தொடர்பான நிகழ்வுகளை ஆவணப்படுத்துதல் என்பன இதன் நோக்கமாகும்.

இவ்வாய்வானது விபரண மற்றும் வரலாற்றியல் ஆய்வு முறைமை, கள ஆய்வு முறைமை ஆகிய ஆய்வு முறையியல்களின் துணையுடன் மேற்கொள்ளப்படுகின்றது.

**அறிமுகம்**

இந்துக்கள் ஆன்ம ஈடேற்றங் கருதிச் செய்யும் சமய அனுட்டானங்களில் விரதமும் ஒன்று. இந்து மக்களின் வாழ்வில் ஓர் அங்கமாகத் திகழ்ந்து அவர்களது வாழ்வியலை செம்மைப்படுத்திச் செல்வதாக அமைகின்றது. விரத அனுட்டானமானது இந்துப் பண்பாட்டுக் கூறுகளையும் வளம்படுத்திச் செல்கின்றது. விரதங்களானவை பண்பாட்டுக் கூறுகளுள் ஒன்றான அறிகைசார் கூறுகளினூடாகக் கடத்தப்படுகின்றன. அதாவது அவை தலைமுறை தலைமுறையாக கடத்தப்பட்டுக் கொண்டு வருகின்ற அனுட்டானங்களாகத் திகழ்கின்றன.

பண்பாட்டுக் கூறுகளின் நிலைக்களன்களாக காலந்தோறும் ஆலயங்கள் விளங்கி வந்துள்ளன. அவ்வகையில் கந்தசஷ்டி விரதத்தினை மிகவுஞ் சிறப்பான முறையில் மேற்கொள்ளும் ஆலயங்களாக ஈழத்தில் பல முருகஸ்தலங்கள் காணப்பட்டாலும் தனித்துவமான போக்கினைக் கொண்டு விளங்குவது தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயமாகும். இவ்வாலயமானது கந்தசஷ்டி விரதம் அனுஷ்டித்தலுக்கான சிறப்பு சூழமைவைக் கொண்டு தனித்துவமான ஆலயமாக அன்று தொட்டு இன்று வரை விளங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**விரதம் - சொற்பொருள் விளக்கமும், வகைப்பாடும்.**

விரதமென்பது ஒன்றையே எண்ணி, அதில் மனத்தினை நிலைத்திருக்கச் செய்வது ஆகும். உணவினை ஒழித்தலும், தீயன நீக்கி நல்லன உண்டலுமாகிய உணவு நியமமே விரதம் என வழங்கப்படுகின்றது. இது விரதத்தின் முதற்படியே அன்றி இதுவே விரதமாகாது. அலையும் மனதை அடக்கி நிறுத்தி இறைவன் திருவடியில் நிலைத்து இருப்பதே சிறப்பாகும். விரதம் என்றால் என்னவென்பதற்கு ஆறுமுகநாவலர்,

“மனம்பொறி,வழிப்போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும், சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் இறைவனை, மெய்யன்போடு வழிபடுதல் விரதமாகும்.”

என்று குறிப்பிட்டுள்ளமை இங்கு நோக்குதற்குரியது.

இவ்விரதத்தினை உபவாசம், நோன்பு என்றும் கூறுவர். உபவாசம் என்பது ‘அருகில் இருத்தல்’ என்ற பொருள் கொள்ளப்படும். அதாவது இறைவனுக்கு சமீபமாக இருத்தல் என்பதே இதன் கருத்தாகும்.

விரதங்கள் பல்வகைத்தனவாய் அமைந்து காணப்படுகின்றன. அவற்றை

1. கடவுளர் சார்ந்து அனுஷ்டிக்கப்படுபவை
2. மானுடர் சார்ந்து அனுஷ்டிக்கப்படுபவை

என்று இருவகைக்குள் அடக்கி நோக்கலாம். அவ்வகையில் கடவுளர் சார்ந்து அனுஷ்டிக்கப்படுபவற்றுள், சிவ விரதங்கள், விநாயகருக்குரிய விரதங்கள், முருக விரதங்கள், சக்தி விரதங்கள், ஏனைய கடவுளர்க்குரிய விரதங்கள் என்பன குறிப்பிடத்தக்கன.

இவற்றுள் முருகனுக்குரிய விரதங்களாக வெள்ளிக்கிழமை விரதம், தைப்பூசம், திருக்கார்த்திகை விரதம், கந்தசஷ்டி விரதம் போன்ற விரதங்கள் சைவ மக்களால் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றமையை இனங்காணலாம்.

ஈழத்திலே முருகனுக்கென்று தனியாக அமைந்தனவாக நல்லூர் முருகனாலயம், மண்டூர் முருகனாலயம், கதிர்காமம், தொண்டைமானாறு செல்வச்சந்நிதி போன்ற ஆலயங்கள் காணப்படுகின்றன. அவ்வகையில் கந்தசஷ்டி விரத அனுட்டான முறைகளுக்கு சிறப்புவாய்ந்த ஆலயமாகத் திகழ்வது தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயமே ஆகும்.

**கந்தசஷ்டி விரதமும், நியமங்களும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகப்பெருமானை வேண்டி அனுஷ்டிக்கப்படும் கந்தசஷ்டி விரதமானது ஐப்பசி மாத சுக்கில பட்ச (வளர்பிறை) பிரதமை முதல் சஷ்டி ஈறாகவுள்ள ஆறு தினங்கள் அனுஷ்டிக்கப்படுகின்றது. இவ்விரத்தை அனுஷ்டிப்போர் முருகத் திருத்தலங்களுக்குச் சென்று ஆறு நாட்களும் ஆலயத்திலே தங்கியிருந்தும் விரதத்தை அனுஷ்டிப்பர். இவ்விரத காலப்பகுதியிலேயே பெரும்பாலான விரத அனுஷ்டானர்கள், பால், பழம் போன்றவற்றை ஒருநாளில் ஒரு தடவை உட்கொண்டு சிறிதளவு நீரைப் பருகியும், 3 மிளகுகளையும், சிறிதளவு நீரை உட்கொண்டும், ஒருவேளை மட்டும் உணவருந்தியும் இவ்விரதத்தினை அனுஷ்டிப்பர். இவ் ஆறு நாட்களும் இவர்கள் இறைவன் மீது வன்பக்தி உடையோராய்த் திகழ்வார்கள். சிலர் ஆறு தினங்களும் மௌன விரதம் பூண்டும் இதனை அனுஷ்டிப்பர். விரதத்தை மேற்கொண்ட அடுத்தநாள் அதிகாலையிலே பூஜை வழிபாடுகளை மேற்கொண்ட பின் உபவாசத்தை முடிப்பர். இறுதி நாளன்று சூரசம்ஹாரம் இடம்பெறும். இந்நிகழ்வானது மக்கள் மனதிலுள்ள ஆணவ மலத்தை வலிகெடச் செய்தல் எனுந் தத்துவத்தை உணர்த்துகின்றது. 7ம் நாள் பாரணை செய்து உறவினர்க்கு உணவு வழங்கி தாமும் உண்டு இவ்விரதத்தினை நிறைவு செய்வர். கந்தசஷ்டி விரதமானது தொடர்ந்து ஆறு வருடங்கள் அனுஷ்டித்தல் உத்தமமாகும்.

**சந்நிதி ஆலயச் சூழலில் கந்தசஷ்டி விரதம்**

செல்வச்சந்நிதியின் இரண்டாவது பெருந் திருவிழாவாகக் கருதப்படுவது கந்தசஷ்டி விரத காலமேயாகும். இக்காலத்தில் ஆலயச் சூழலில் அடியவர்களது கூட்டம் அதிகமாகக் காணப்படும். ஈழத்தின் பல்வேறு பாகங்களிலிருந்தும் மக்கள் விரத காலத்தில் இங்கே வருவார்கள். அதிலும் சிறப்பாக கந்தசஷ்டி விரதத்திற்கெனவே புலம்பெயர் நாடுகளிலிருந்தும் மக்கள் வருகை தருகின்றமை குறிப்பிடத்தக்கது. அவ்வாறு வருகின்ற மக்களிற் பலர் சந்நிதியிலே தங்கியிருந்து தமது விரத அனுட்டானங்களை மேற்கொள்வதனைக் காண முடிகின்றது. இங்கு வருகின்ற அடியவர்களை,

1. விரத காலப் பூஜைகளுக்காக ஆலயத்துக்கு வந்து செல்பவர்கள்
2. விரத காலம் முடியும் வரை ஆலயத்திலே தங்கியிருந்து பூஜை வழிபாடுகளில் ஈடுபடுபவர்கள்

என இரண்டு வகைப்படுத்தி நோக்க முடிகின்றது. எந்தவொரு முருகன் ஆலயத்திற்கும் இல்லாத சிறப்பு சந்நிதி முருகனுக்கு இருப்பதால் கந்தசஷ்டி அனுட்டான காலப்பொழுதில் அதிகளவிலான அடியவர்களைக் காணமுடிகிறது. அங்கு தங்கியிருந்து கந்தசஷ்டி விரதம் அனுஷ்டிக்கும் ஒருவர்,

“நாம் இத்தலத்திற்கு வருகின்றபோது ஆன்ம ரீதியான பலத்தை உணர முடிகிறது. புறச்சூழல் தொடர்புகளன்றி இத்தல சூழலில் தங்கியிருந்து கந்தசஷ்டி விரத அனுட்டானங்களில் ஈடுபடுகின்றபோது எமக்கும் முருகனுக்கும் இடையிலான உறவு அதிகரிப்பது போன்ற உணர்வினை உணர முடிகின்றது.”[1] என்று குறிப்பிட்டார்.

இவ்வாலயச் சூழலிலே கந்தசஷ்டி விரதத்தினை கன்னிப்பெண்கள், திருமணமாகிய பெண்கள், வயோதிபப் பெண்கள், ஆண்கள் எனப் பலரும் அனுஷ்டிக்கின்றனர். ஆனால் இங்கு பெண்களைக் காட்டிலும் ஆண்களின் விகிதாசாரமே அதிகமாகக் காணப்படுகின்றது. பெரும்பாலானவர்கள் ஆலயச் சூழலிலே தான் தமது விரத நாட்களைக் கழிப்பர். சிலர் மடங்களிலே தங்கியிருந்து பூஜை வழிபாட்டு நேரங்களில் ஆலயத்திற்குச் சென்று வருவதனைக்காண முடியும். கந்தசஷ்டி விரத காலத்தின்போது அங்கு சடங்குகளை ஆற்றும் கப்புகனார் ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவராக சடங்குகளை மேற்கொள்வர். ஆறு நாட்களும் காலைவேளைப் பூஜை முடிந்தவுடன் கந்தபுராணம் படிக்கப்படும். யாழ்ப்பாணக் கலாச்சாரம் கந்தபுராணக் கலாச்சாரம் எனும் வகையில் அனைத்து முருகனாலயங்களிலும் படிக்கப்படுவதனைக் குறிப்பிட்டுக் கூறலாம். கந்தபுராணம் 6 காண்டங்களும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு காண்டமாகப் படிப்பதுடன் முருகன் தொடர்பான வரலாற்றுக் கதைகள், புராண படனஞ் செய்தல், பஜனை என்பனவும் இடம்பெறும். பக்தர்கள் தம் புலனடக்கி கந்தசஷ்டி கவசத்தினையும் பாராயணஞ் செய்வதனையும் காண முடியும்.

இங்கு வந்து தங்கியிருந்து விரதம் அனுஷ்டிப்பதற்கு முக்கிய காரணம் முருகனின் அருட்திறன் என்று குறிப்பிட்டாலும் அதற்கு மேலும் வலுச் சேர்ப்பதாக அமைவது சகல வசதிகளும் நிறைந்த புறச்சூழமைவே ஆகும். விரதத்தினை தங்கி நின்று அனுஷ்டிப்பவர்கள் ஆலயத்தின் கிணற்றிலே நீராடி, உடுத்த உடைகளை தோய்த்து உலர்த்தி அவற்றையே அணிவதனையே அங்குள்ள பலர் வழக்கமாகக் கொண்டுள்ளனர். அங்கிருப்போரில் சில ஆண்களும், பெண்களும் முடி வழித்தல் தலைசீவுதல், நகம் வெட்டுதல், நறுமணப் பொருட்களைப் பாவித்தல், போன்ற செயற்பாடுகளைத் தவிர்க்கின்றமை குறிப்பிட்டுக் கூறத்தக்க அம்சமாகும்.

பொதுவாக கந்தசஷ்டி விரதமானது திருமணமாகி குழந்தைப்பேறு அடையாத் தம்பதியினரே அனுஷ்டிக்கும் நியதித்தன்மை இருப்பினும் சந்நிதியிலே குழந்தைப் பேற்றை மட்டும் கருத்திற் கொண்டு இவ்விரதம் அனுஷ்டிக்கப்படுவதில்லை. இதனை பின்வரும் கூற்றுக்கள் வாயிலாக அறிந்து கொள்ள முடியும்.

“எனது மகனுக்கு ஏற்பட்ட தீராத நோய் காரணமாக முருகனுக்கு நேர்ந்து இவ்விரதத்தினை அனுஷ்டித்தேன். அனுஷ்டித்து வரும் காலப்பகுதியில் அந்நோய் முழுமையாகக் குணமடைந்துவிட்டது. பின்னர் நான் தொடர்ந்து ஆறு வருடங்களுக்கு மேலாக இவ்விரதத்தை பூண்டு வருகின்றேன்.”[2]

“எனக்கு நல்ல கணவர் கிடைக்க வேண்டுமென எண்ணி இவ்விரதத்தை அனுஷ்டிக்கின்றேன்.”[3]

“எனது தம்பி எந்தவொரு இடர்பாடுகளுமின்றி வெளிநாடு சென்று சேர வேண்டும் என்பதற்காக இவ்விரதத்தினை அனுஷ்டித்தேன். அவ்வாறே நடைபெற்றுவிட்டது. இருப்பினும் தொடர்ந்து இதனை அனுஷ்டித்து வருகின்றேன்.”[4]

என்றவாறாக அங்கிருப்போர் தெரிவித்தனர். இதிலிருந்து கந்தசஷ்டி விரதத்தின் நோக்கம் தவிர தீராத நோய் தீர வேண்டும், நல்ல கணவன் கிடைக்க வேண்டும், வெளிநாட்டுப் பயணம் போன்றவற்றுக்காகவும் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்ற தன்மையினைக் காணலாம்.

சந்நிதியிலே தங்கியிருந்து ஆறு தினங்களும், பால், பழம் உண்டும், ஆலயத்தில் வழங்கப்படும் தீர்த்தத்தினை அருந்தியும், மிளகும், நீரும் அருந்தியும், மௌன விரதம் பூண்டும் மிகவும் இறுக்கமான

2

மிருந்து இவ்வோர்க்கு இல்லை பெருந்திய ஒழுக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மையில் இவ்விரதத்தினை மேற்கொள்கின்றனர். மென்பக்தி என்பதனைத் தாண்டி வன்பக்தி முறையில் இவர்களது விரத காலச் செயற்பாடுகள் அமைந்திருப்பதனைக் காணலாம்.

இவ் விரதத்தினை அனுஷ்டிப்பவர்கள் நேர்த்திக் கடனாக மேற்கொள்ளும் போது இரண்டு விதமான முறையில் மேந்கொள்கின்றனர்.

1. தமது வேண்டுதல் நிறைவேறிய பின்னர் விரதத்திகைன அனுஷ்டித்தல்
2. தமது வேண்டுதல் நிறைவேற வேண்டுமென எண்ணி அனுஷ்டித்தல்

இவ்வாறு இரண்டு தளங்களைக் கொண்டு விரதத்தினை அனுஷ்டிப்பவர்களை இவ்வாலயச் சூழலிலே கண்டுகொள்ள முடிகின்றது. குழந்தைப் பேற்றிற்காக விரதம் அனுஷ்டிப்போர் இறுதி நாளில் மரத்தினால் தொட்டில் செய்து அதனை ஆலயத்தின் பக்தியின் ஈர்ப்பிடமாகத் திகழும் பூவரசு மரத்திலே கட்டுவார்கள். இச்செயற்பாட்டின் நிகழ்தன்மையினை இன்றும் அப்பூவரசு மரத்தினில் காணமுடிகின்றது. இக்காலப்பகுதியில் மாவிளக்குப் பூஜையும் மிகவும் முக்கியம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது.

ஆறாவது நாள் சூரன்போர் இடம்பெறும். இந்நாளில் பெருமளவான மக்கள் ஈழத்தின் எல்லாப் பாகங்களிலிருந்தும் வருகை தருவார்கள். சூரன் வெளிவீதியிலே போருக்கு ஆயத்தமாகும்போது சூரனது படைவீரர்களாக போர்க்கலங்கள் தாங்கி ஆடவர்கள் வெளி வீதியிலே பயணிப்பார்கள். ஆலயத்தின் வடக்கு வீதியிலே, முருகன் - சூரன் யுத்தம் உச்சக்கட்டத்தை அடைகின்ற போது மக்களின் மனத்திலே ஏற்படுகின்ற நிலையை விபரிக்க முடியாது. இதனை,

"முருகன் போரில் எவ்வாறு சூரனின் ஆணவத்தை அடக்குகின்றானோ அதே போன்று எமது மனத்திலுள்ள அகங்காரங்கள், கெட்ட எண்ணங்கள் அழிவடைந்து போகின்ற தன்மையினை எம்மால் உணர முடிகின்றது."[5]

என்று அடியவர் ஒருவர் கூறியதிலிருந்து அறிந்து கொள்ள முடிகின்றது. ஏனைய முருகஸ்தல கந்தசஷ்டி விரதகால செயற்பாடுகளை விட செல்வச்சந்நிதி ஆலயம் பலபடி மேலோங்கி நிற்குந் தன்மையினைக் காணலாம். சாதி, மொழி, இன வேறுபாடின்றி வேண்டுவோர்க்கு வேண்டிய அருள் கொடுப்பவன் செல்வச் சந்நிதியான்.

**விரத அனுட்டானமும், சமூக மாற்றமும்.**

மனித மனங்களை ஆளுகை செய்கின்ற சமயம் என்னும் நிறுவனம் தோன்றி நிலைபெற்றுள்ள இடம் சமூகம் ஆகும். சமயத்தில் காணப்படுகின்ற விதிமுறைகள், நியதிகள், நியமங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்ற போது சமூகம் மாற்றத்துக்குள்ளாகின்றது. அவ்வகையில் கந்தசஷ்டி விரத அனுட்டானத்தை முறைப்படி அனுஷ்டிப்பவர்கள் , அவர்களது உறுப்பினர்கள், அவர்கள் சார்ந்த அங்கத்தவர்களது அகத்திலும்இ புறத்திலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. அவையாவன,

வன் சொல் தவிர்த்தல் சிற்றின்பம் தவிர்த்தல் புலால் மறுத்தல் மது அருந்துவதைத் தவிர்த்தல் புறங் கூறாமை பொறுமையைக் கடைப்பிடித்தல் சினங் கொள்ளாமை விருந்தோம்பல் அகங்காரம் தவிர்த்தல் முரண்பாடுகளைத் தவிர்த்தல் தூர தேச பயணங்களை தவிர்த்தல் தேவையற்ற வார்த்தைப் பிரயோகங்களைத் தவிர்த்தல்

போன்ற செயற்பாடுகளைக் குறிப்பிடலாம். இதன் காரணமாக சமூகத்தில் முரண்நிலையற்ற அமைதியான சூழமைவைக் கண்டுகொள்ள முடிகின்றது. இச்செயற்பாடுகளிற் சில தொடர்ந்து கைக்கொள்ளப்படுகின்றபோது மனிதன் விலங்குத் தன்மையிலிருந்து மானிடத் தன்மைக்கு மாற்றமடைகின்றான்.

விரத காலங்களில் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகள் பல உளந் தொடர்பான பிரச்சனைகளுக்குத் தீர்வாக அமைகின்றன. மிதமான உளப்பிரச்சனைக்கு உரிய சிகிச்சை முறைகளில் "அறிகைச் சிகிச்சையே" (Cognitive Therapy) மிகவும் பிரபலம் பெற்றுள்ளது. Ellis என்பவர் தனது Rational Emotive Therapy இல் மனிதர்களின் மறை எண்ணங்களே அவர்களின் உள ஆரோக்கியக் குறைவுக்கு முக்கிய காரணங்களாகின்றன. இந்த நம்பிக்கை குறைவான மறை எண்ணங்கள் இறைவன் மீது நம்பிக்கை கொண்டு நேர்த்தி வைத்து செயற்படும்போது நீங்கி விடுகின்றது. ஏனெனில் உடல் சம்பந்தப்பட்ட செயற்பாடுகளோடு உளம் அதிகளவில் நெருக்கமாக உள்ளது. பிள்ளை இல்லாமல் இருக்கும் நிலைகளில் பதற்றமும், பதகளிப்பும், பயமும் அதற்கு காரணங்களாக அமைவதும் பின்னர் விரதகால செயற்பாடுகளினூடாக செம்மைப்படுவதனையும் காணலாம்.

கந்தசஷ்டி விரத காலங்களில் படிக்கப்படும் கந்தசஷ்டி கவசம் மனதிற்கு அமைதியைக் கொடுத்து உளத்தினை செம்மைப்படுத்துகின்றது. சாந்த வழிச் செயன்முறையினுள் ஒன்றாக உச்சாடனம் விளங்குகின்றது. உச்சாடனம் என்பது ஓரிரு வார்த்தைகளை திரும்பத் திரும்ப சொல்லுதல் ஆகும். கந்தசஷ்டி காலத்தில் முருகனை நோக்கி கூறப்படும் 'அரோகரா', முருகா போற்றி' எனும் வார்த்தைப் பிரயோகங்களை திரும்பத் திரும்ப கூறுவதனால் பதகளிப்பு, அச்சநோய், மனவடு போன்ற பல மிதமான உளப்பிரச்சனைகளுக்கு உச்சாடனம் தீர்வாக அமைகின்றது.

கந்தசஷ்டி விரத காலப் பகுதியானது வெறுமனே சமூகத்தை வளம்படுத்துவதோடு மட்டுமன்றி மனித மனங்களையும் செம்மைப்படுத்துவதாகத் திகழ்கின்றது.

**நிறைவுரை**

விரத அனுட்டானங்கள் மக்களது வாழ்வில் நம்பிக்கை பக்தி வைராக்கியம் இறையன்பு என்பனவற்றை ஏற்படுத்துவதோடு மக்களின் வாழ்விலிருந்து பிரிபடாத்தன்மையினைக் கொண்டு விளங்குகின்றன. மக்களின் வாழ்வினை நெறிப்படுத்தும் கூறுகளை ஒரு பண்பாட்டின் நெறியியற் கூறுகள் என்று கூறலாம். விழுமியங்கள், நெறிமுறைகள்இ அளிப்புக்கள் வழக்கங்கள் பழக்கங்கள் முதலிய நெறியியல் சார்ந்த பண்பாட்டுக் கூறுகள் இவ்வாலயச் சூழலில் விரத அனுட்டானங்களை மையப்படுத்தியதாக வளர்ச்சியடைந்துள்ளன. அவ்வகையில் கந்தச'டி விரத அனுட்டானத்தை சிறப்பு முறையில் கைக்கொள்வதிலும் அதன் பயன்களை சமூகத்திற்கு அளிக்கை செய்யுந் தன்மையிலும் தனக்கென தனித்துவமான இடத்தினை தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயம் கொண்டுள்ளது.

3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Lycaremit**
Send money home for less

**£5 FREE**
LYCAMOBILE CREDIT
when you transfer over £300*

# உலகின் எந்த நாட்டிற்கும் மிகக் குறைந்த செலவில் பணம் அனுப்ப...

- குறைந்த கட்டணம்,
- மிகக் கூடிய பணமாற்று வீதம்



**Visit www.lycaremit.com**
**or**
**one of our branches**

**Our branches**

**East Ham (Lycafly)**
180 High Street North,
London, E6 2JA,

**Mitcham (Food world)**
117 - 119 London road,
Mitcham CR4 2JA

**East Ham (Shakthi)**
245-247 High Street North
London, E12 6SJ

**Tooting**
198/B Upper Tooting Road,
Tooting SW17 7EW

**Gants Hill**
639 - 643 Cranbrook Road,
Ilford, IG2 6SX

**Wembley**
14 Ealing Road,
Wembley HA0 4TL

Visit
**lycaremit.com**

For more info call
**0207 132 0015**

Or FREE from your Lycamobile
**305**

*Free £5 Lycamobile credit is available for customers who send £300 per single ... during the calendar month. When you register for Lycaremit, you will need to provide us with your Lycamobile number. You will receive the £5 Credit on your Lycamobile number within 3 weeks from the date of your transaction. Offer available until 31/10/2017 and available only once per month ... money Financial Services Limited, and is authorised and regulated by the Financial Conduct Authority (registration number: 900153). Registered office: Walbrook Building, 195 Marsh Wall, London, E14 9SG. Company Registration number: 08662355.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LMFS
Lycamoney Financial Services Ltd




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org